
பக். 05


பக். 12


பேசுறாங்க...
பக். 13


நியமிக்கலாம்
பக். 23

கூடிய வெப்பநிலை 27 °c
குறைந்த வெப்பநிலை 22 °c
பனி கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 | கதிர்: 080 | வள்ளுவர் ஆண்டு: 2045 | மாசி 02, வெள்ளி 14.02.2014


## கொலையாளிகளும் அவர்கள்தான் நீதி சொல்பவர்களும் அவர்கள்தான் என்றால் உண்மை எப்படி வெளியே வரும்?

### கேள்வி எழுப்புகிறார் மன்னார் ஆயர் இராயப்பு

மன்னார்,பெப் 14
கொலை செய்தவர்களும் அவர்கள்தான். நீதிபதியும் அவர்கள்தான். நீதி சொல்பவர்களும் அவர்கள்தான் என்றால் எப்படி உண்மை வெளியே வரப்போகின்றது என்று கேள்வியெழுப்பிய மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை, காணமற்போனவர்கள் தொடர்பில் நாங்கள் நிவாரணத்தைத் தேடவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன நடந்தது என்பதைத்தான் தேடுகின்றோம் என்றும் தெரிவித்தார்.
உண்மையைக் கண்டுபிடித்தால் மாத்திரமே இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற் படும் என்பதை இந்த நாட்டின் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர்

21 ஆம் பக்கம் பார்க்க


மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்


நேற்று மீட்கப்பட்ட எலும்புக்கூடு

## 62

மன்னார். பெப் 14
மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி நேற்று 23 ஆவது தடவையாக தோண்டப்பட்ட போது மேலும் ஒரு மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது. இதனுடன் சேர்த்து புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 62 ஆக அதிகரித்துள்ளது.
மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ன தலைமையிலான குழுவினர் நேற்று வியாழக்கிழமை புதைகுழியைத் தோண்டும் பணியில் ஈடுபட்டனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

# திருமலையிலும் மனிதப் புதைகுழி

### மக்கெய்சர் விளையாட்டரங்குக்கு பின்புறமாகக் கண்டுபிடிப்பு

திருகோணமலை.பெப்ரவரி 14
மன்னார் மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையில், திருகோணமலை மாவட்டத்திலும் மனிதப் புதைகுழி ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திருகோணேச்சரம் கோயிலுக்கு செல்லும் பிரதான வீதியிலேயே குறித்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அந்தப் பகுதி எதிர்வரும் திங்கட்கிழமை வரை பாதுகாப்பான பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
திருகோணமலை நகர சபைக்குப் பின்பாகவுள்ள மக்கெய்சர் விளையாட்டு மைதானக் காணியில் கிணறு வெட்டும்போதே மனித எலும்புக் கூடுகள் அங்கு தென்பட்டுள்ளன.

21 ஆம் பக்கம் பார்க்க


திருமலையில் நேற்று மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடம்

### விக்னேஸ்வரன் நல்ல மனிதர்

**- குர்ஷித் புகழாரம்**

டில்லி,பெப்.14
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நல்ல மனிதர் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் புகழாரம் சூட்டியுள்ளார்.
டில்லியில், "இலங்கையிலிருந்து சென்ற செய்தியாளர்களை நேற்று முன்தினம்

21 ஆம் பக்கம் பார்க்க

### தமிழக மீனவர் 116 பேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,பெப்.14
இலங்கைக் கடற்பரப்பினுள் வைத்துக் கைது செய்யப்பட்ட 116 தமிழக மீனவர்களையும் அடுத்த வாரம் வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
நேற்று முன்தினம் கைது

21 ஆம் பக்கம் பார்க்க

### மலடியாய் இருந்திருக்கலாம்

***காணாமற்போன பிள்ளையை தேடும் தாயின் குமுறல்***

*யாழ்ப்பாணம்,பெப்.14*
*'பிள்ளை காணாமற்போய் தேடிக் கொண்டு திரியிற மன உளைச்சலிலும் பார்க்க மலடியாய் இருந்திருக்கலாம்' என்று காணாமற்போனவரின் தாயார் ஒருவர் தனது உள்ளக் குமுறலை 'உதயனிடம்' வெளிப்படுத்தினார்.*
*நாவற்குழியைச் சேர்ந்த குறித்த தாயின் மகன் 2007 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் இன்று வரை அவர் விடுவிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.*
*'காணாமற்போனோர் தொடர்பில் எங்கு பதிவுகள் நடந்தாலும் பிள்ளை கிடைப்பான் என்ற நம்பிக்கையில பதியுறம். பிள்ளையைப் பெத்துப் போட்டு அலையிறதிலும் பார்க்க மலடியாய் இருந்திருக்கலாம்' என்றார் அந்தத் தாயார்.*
*(முழுமையான விபரங்களுக்கு 12ஆம், 13ஆம் பக்கங்களைப் பார்க்க).* *(த-5)*

## யாழில் நாளை மீனவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.14
ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினால் யாழ்ப்பாணம் உட்பட நான்கு இடங்களில் தேசிய எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் ஹர்மன் குமார தெரிவித்துள்ளார்.
முனியப்பர் கோயில் முன்றலில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்தப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், கடந்த 2012 ஆம் ஆண்டு

21 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் விசாரணை இன்று முதல் நான்கு நாள்களுக்கு

யாழ்ப்பாணம்,பெப்.14
காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அமர்வுகள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 10 கிராமசேவகர் பிரிவுகளுக்கான அமர்வுகள் இன்று இடம்பெறவுள்ளன.
காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவின் இரண்டாவது பகிரங்க அமர்வுகள் யாழ்ப்பாணத்தில் இன்று முதல் தொடர்ச்

21 ஆம் பக்கம் பார்க்க

### வடமராட்சி மீனவர்களை விடுவியுங்கள்

யாழ்ப்பாணம்.பெப்.14
வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்ததாக இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்ட வடமராட்சிப் பிரதேச மீனவர்களையும் படகையும் விடுவிக்குமாறு கோரி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசத்தினால் நேற்று மனு கையளிக்கப்பட்டுள்ளது.
கடந்த 9 ஆம் திகதி வடமராட்சி

21 ஆம் பக்கம் பார்க்க

## மீளக் குடியமரவுள்ள மக்களுக்கு வீட்டு வசதிகள் அவசரம் தேவை

### *நோர்வே தூதுவரிடம் கோரினார் அரச அதிபர்*

யாழ்ப்பாணம்,பெப்.14
மீள்குடியமர்வு செய்யப்படவுள்ள மக்களுக்கு அவசரமாக வீட்டு வசதிகள், வாழ்வாதார வசதிகள் என்பன வழங்கப்படவேண்டியுள்ளன. அதற்கான உதவிகளைச் செய்யுமாறு நோர்வேத் தூதுவரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், அது தொடர்பில்

21 ஆம் பக்கம் பார்க்க

## விசேட தேவையுள்ளோருக்கு சகல கட்டடங்களிலும் வசதி

***ஒக்ரோபருக்குள் செய்ய அமைச்சு பணிப்பு***

யாழ்ப்பாணம்,பெப் 14
எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் சகல கட்டடங்களும் விசேட தேவைக்குரியவர்கள் பயன்படுத்தக்கூடியவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். இல்லாவிடின் சம்பந்தப்பட்ட தரப்பினர் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்று சமூக

21 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பேராதனை பல்கலை மாணவர்கள் இரு மாதங்களாக சத்தியாக்கிரகம்

யாழ்ப்பாணம், பெப்.14

பேராதனை பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார விஞ்ஞானபீட மாணவர்கள் தமது பட்டப்படிப்பை 4 வருடமாக அதிகரிக்கக் கோரியும், இலங்கையின் சுதந்திரமான சுகாதார சேவையை வலியுறுத்தியும் மாணவர்கள் மேற்கொண்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டம் இரண்டு மாதங்களை எட்டியுள்ளது.

இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பை 4 வருட காலத்திலிருந்து 3 வருட பொதுப்பட்டப்படிப்பாக குறைத்து பின்னர் தகுதிபெறுபவர்களுக்கு மேலதிக ஒருவருடகாலம் வழங்கி சிறப்புப் பட்டத்தைப் பயில முடியும் என்ற பல்கலைக்கழக நிர்வாகத்தின் தீர்மானத்தைக் கண்டித்தும், பட்டப்படிப்பைச் சகல மாணவரகளுக்கும் 4 வருடமாக வழங்குமாறு கோரியும் மாணவர்கள் சத்தியாக் கிரகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

பேராதனைப் பல்கலைக்கழக வாயிலில் கடந்த டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவர்களுடன் றுகுணு பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் அரசு, உயர் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றிற்குத் தெரிவித்துள்ள போதும் இதுவரை எந்தப் பதிலும் தமக்கு வழங்கப்படவில்லை என மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ஐ-4)

## மாற்று வலுவுடையோருக்கு இல்லம் அமைக்க வேண்டும்

### யாழ்.சுய உதவிக் குழுவினர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.14

கைவிடப்பட்ட மாற்று வலுவுள்ளோருக்கான இல்லம் ஒன்றை யாழ்.மாவட்டத்தில் அமைத்துத் தருமாறு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளரிடம், யாழ்.மாவட்ட சுய உதவிக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில், சமூக சேவைகள் அமைச்சினால் நேற்றுக் காலை பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. இதன் போதே சுய உதவிக் குழுவினர் தமது தேவைகள் தொடர்பில் 10 கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அந்தக் கோரிக்கைகள் வருமாறு:

★ சுய உதவிக் குழுவை நிரந்தரமாக இயக்குவதற்கு இட வசதி மற்றும் நிதி வசதியை ஏற்படுத்தித் தர அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ மாற்றுவலுவுள்ளோர் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு கொழும்பு செல்ல வேண்டியிருக்கிறது. அதனை யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து தரவேண்டும்.

★ கைவிடப்பட்ட மாற்றுவலுவுள்ளோருக்கான இல்லத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ மாற்றுவலுவுள்ளோருக்கு அரசு தொழில் வாய்ப்பில் முன்னுரிமை வழங்குதல்.

★பார்வையற்றவர்களிற்கான புலன்நுகர் நூலகம் ஒன்றினை யாழ்.மாவட்டத்தில் அமைத்தல்.

★மாற்றுத் திறனாளிகளுக்கான சுயதொழில் அடிப்படை மூலதனம் மற்றும் தொழில் விஸ்தரிப்பு மூலதனம் என்பவற்றை பெறும் வகையில் மானிய முறையில்லாத பிணையற்ற கடனுக்குரிய ஒழுங்குகள் செய்தல்.

★ விழிப்புணர்வு அற்றவர்களுக்கான குற்றெழுத்துப் பதிப்பகம் அமைத்தல்.

★ மாற்றுத் திறனாளிகளினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுத்தல்.

★ ஏ மற்றும் ஏபி தர வீதிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடைபாதை அமைத்தல். ஆகிய கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டன.

எனினும் இந்தக் கோரிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர், சுய உதவிக் குழுவுக்கான நிதியை அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகவே பெற்றுக்கொள்ள வேண்டும். இடத்தை நாம் பெற்றுத் தருவதற்கு முயற்சிப்போம். ஏனைய கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்துரையாடி முடிவுகள் ஏட்டப்படும்என்று பதிலளித்தார். (ஐ-5)

## மருத்துவ நிபுணர் நிமலனுக்கு எதிரான வழக்குத் தள்ளுபடி

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்.போதனா வைத்திய சாலை மருத்துவ நிபுணரும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.கிளையின் தலைவருமான மருத்துவர் எஸ்.நிமலனுக்கு எதிராக அங்குள்ள மருத்துவ அதிகாரி ஒருவரால் யாழ்.நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பயமுறுத்தியமை தொடர்பான வழக்கில் பொலிஸார் உரிய வாக்குமூலங்களைப் பெறத் தவறியதால் அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

யாழ்.போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் பணியாற்றும் மருத்துவர் சு.சிவபாதமூர்த்தியால் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மருத்துவ நிபுணர் எஸ்.நிமலன் தன்னைப் பயமுறுத்தினார் என்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்திருந்தார்.

அது தொடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் நடைபெற்று வந்தது. முறைப்பாட்டாளரான மருத்துவர் எஸ்.சிவபாதமூர்த்தி நீதிமன்றில் சாட்சியம் அளிக்கும்போது மருத்துவ நிபுணர் நிமலன் தனக்கு அடிக்க முற்பட்டிருக்கவில்லை என்று கூறியிருந்தார்.

பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சமயம் மேலும் நான்கு மருத்துவர்கள் அங்கு இருந்துள்ளனர். ஆனால் முறைப்பாடு தொடர்பில் அந்தச் சாட்சிகளிடம் பொலிஸார் சாட்சியம் எதையுமே பதிவு செய்திருக்கவில்லை. விசாரணை அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை. அவ்வாறு அக்கறையின்றிச் செயற்பட்டமையால் பொலிஸாரைக் கடிந்து கொண்ட நீதிவான் வழக்கைத் தள்ளுபடி செய்தார். மருத்துவ நிபுணர் நிமலன் சார்பாக சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்னிலையானார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் பணியாற்றிய மருத்துவர் ராஜராஜேஸ்வரன் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் திடீரென கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அதனால் மருத்துவர்கள் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாகவே இந்த முறைப்பாடு பதிவாகியது என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)



விவசாயி ஒருவருக்கு நீர் இறைக்கும் இயந்திரத்தை வழங்குகிறார் வட மாகாண சபை உறுப்பினர்.

## 54 கிளிநொச்சி விவசாயிகளுக்கு மானிய நீர் இறைக்கும் இயந்திரம்

கிளிநொச்சி, பெப். 14

கிளிநொச்சி விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக உணவு விவசாய நிறுவனத்தின் உதவியுடன் விவசாயிகளுக்கான நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் 54 விவசாயிகளுக்கு மானிய விலையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கி வைத்தார்.

இதன்போது அமைச்சர் உரையாற்றுகையில்; முன்னர் விவசாயக் குடும்பங்கள் வசதி படைத்தவையாக இருந்தன. ஆனால் இப்போது அந்த நிலைமை இல்லை. விவசாயிகள் கடன் சுமையால் அந்தரித்துக் கொண்டு இருக்கின்றனர். விவசாயப் பொருளாதாரமாக இருந்த தமிழருடைய பொருளாதார முறைமை தற்போது மாற்றம் பெற்றுள்ளது. நில ஆக்கிரமிப்பு மற்றும் பல்வேறு காரணங்கள் இந்த நிலையை உருவாக்கி உள்ளன. இன்று விவசாயிகளுக்கு வழங்கப்படும் இந்த இயந்திரம் பொறுப்பாக பயன்படுத்தப்பட வேண்டும். காரணம் நாம் நிலத்தடி நீரை செம்மையாக பயன்படுத்த வேண்டிஏற்பட்டுள்ளது -என்றார்.

கிளிநொச்சி மரவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அ. செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் அ.பசுபதிப்பிள்ளை, எதிர்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-18)

## 'ஆவா குறூப்' தலைக்கு விளக்கமறியல் நீடிப்பு

### ஏனையோர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆவா குறூப்பைச் சேர்ந்த மூன்று பேரில் இரண்டு பேர் யாழ்.நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

**சந்தேக நபரான ஆவா என்றழைக்கப்படும் விநோதன் என்பவருக்கு எதிராகக் கைக்குண்டு வைத்திருந்தமை தொடர்பாக பொலிஸார் குற்றஞ் சாட்டியிருந்தனர். அதனால் அது தொடர்பில் தனியே வழக்குத் தாக்கல் செய்ய பொலிஸாருக்கு நீதிமன்று கடந்த தவணை உத்தரவிட்டிருந்தது.**

இந்த மூன்று பேர் தொடர்பான வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்றுவிசாரணைக்கு வந்தது.

சந்தேக நபர்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் மூவரையும் பிணையில் விடுவிக்குமாறு கோரினர். மூவரில் பிரதான சந்தேக நபரான ஆவா என்றழைக்கப்படும் விநோதன் என்பவருக்கு எதிராகக் கைக்குண்டு வைத்திருந்தமை தொடர்பாக பொலிஸார் குற்றஞ் சாட்டியிருந்தனர். அதனால் அது தொடர்பில் தனியே வழக்குத் தாக்கல் செய்ய பொலிஸாருக்கு நீதிமன்று கடந்த தவணை உத்தரவிட்டிருந்தது. அதனால் அவருக்கு பிணை அனுமதி மறுக்கப்பட்டது.

ஏனைய இரண்டு பேரும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான தலா மூன்று ஆள்பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் "ஆவா குறூப்" என்ற பெயரில் இயங்கிய 12 பேர் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள், இரும்பினாலான ஆயுதங்கள், கைக்குண்டு என்பவற்றை மீட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களையும் மீட்டிருந்தனர்.

12 பேரில் ஒருவர் கைது செய்யப்பட்ட மறுநாளே பிணையில் விடுவிக்கப்பட்டார். மிகுதி 11 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 8 பேர் கடந்த 31 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## ஓட்டோ மோதி மாணவி படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.14

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மாணவியை பின்னால் வந்த ஓட்டோ மோதித் தள்ளியதில் மாணவி படுகாயமடைந்தார். உடுவில் ஆலடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவத்தில் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஸ்ரீதரன் கீர்த்திகா (வயது 18) என்ற மாணவியே விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (த-4, 400)

## சர்வதேச நிழற்படக் கண்காட்சி அடுத்த வாரம் யாழ்ப்பாணத்தில்

தேசிய நிழற் படக் கண்காட்சிக் கலைச் சங்கம் முதல் முறையாக வடக்கு மாகாணத்தில் நடத்தும் 16ஆவது சர்வதேச நிழற்படக் கண்காட்சி எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

22ஆம் திகதி புகைப்படத் துறையைப் பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தமர்வு இடம்பெறும். 23ஆம் திகதி வளர்ந்தோருக்கான பயிற்சியும் கருத்தமர்வும் இடம் பெறும். (த-23)

## மக்களும் பிரதிநிதிகளும் புறக்கணிக்கப்படுகின்றனர்

### மாநாட்டில் வடக்கு முதலமைச்சர்

கொழும்பு, பெப்.14


மக்களை முதன்மைப்படுத்தாமல் அபிவிருத்திப் பணிகளை மேலிருந்து கீழ் நோக்கி நகர்த்தும் முயற்சியானது அரசின் பிரதான கொள்கை தோல்விக்கான ஒரு காரணம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூறினார்.

போருக்குப் பின்னரான சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் புலம் பெயர்ந்தவர்களுடன் ஆக்கபூர்வமாக இணைந்த செயற்பாடு என்ற தலைப்பில் நேற்றுக் கொழும்பில் ஆரம்பமான மாநாட்டில் வடக்கு முதலமைச்சர் பிரதான உரையை நிகழ்த்தினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் முயற்சிகளில் ஒரு பகுதியாக தேவைகள் பற்றிய விரிவான ஆய்வுகள் தொடர்பில் வவுனியாவில் விவசாயிகளின் தேவைகள் பற்றி ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். இது குறித்து ஒரு விவசாயி கருத்து வெளியிடுகையில், எனக்கு 70 வயதாகிறது. இது தான் முதல் தடவை அதிகாரத்தில் இருப்பவர் ஒருவர் எனக்கு என்ன தேவை என்று கேட்டிருப்பது என்று குறிப்பிட்டதாகத் தெரிந்தது.

போரின் பின்னர் துரதிர்ஷ்டவசமாக நிலைமைகள் மோசமடைந்துள்ளன. வட பகுதியானது வெற்றி பெற்றவர்களின் செயற்பாடுகளுக்குரிய பகுதியாக மாறியுள்ளது. 2009 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஜனாதிபதி பணிக்குழுவும் அதற்குப் பின்னரான கூட்டு செயற்திட்டங்கள் யாவும் மக்களுடன் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து செய்யப்படவில்லை. திவிநெகும கட்டமானது மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை தன் வயப்படுத்திக்கொள்வதாக உள்ளது.



மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. மக்கள் நலத்திட்டங்கள் அவர்களின் நட்புடன் மேற்கொள்ளப்படவில்லை. மத்திய அரசுடனான நட்புக்குரிய திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன. உண்மைதான் பெரிய திட்டங்களும் ஒப்பந்தங்களும் அவர்களின் நெருங்கிய நண்பர்களுக்கே போய் சேர்கின்றன - என்றார்.

## ரயில் மோதியதால் உயிரிழப்பு

வவுனியா, பெப்.14

வவுனியாவில் ரயில் மோதியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் நண்பகல் 12.15 மணியளவில் வவுனியா தாண்டிக்குளம் புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தாண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கே.செல்வராசா (வயது-55) என்பவரே உயிரிழந்தார்.

இறந்தவர் தாண்டிக்குளம் பகுதியில் ரயில் தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட போது கொழும்பில் இருந்து வவு னியா ஊடாக கிளிநொச்சி நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டதால் உயிரிழந்தார். சடலம் வவுனியாப் பொலிஸாரால் வவுனியா பொது மருத் துவ மனையில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணை களை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (க-402-421)

# சர்வதேச விருப்புக்கேற்ப செயற்படாது இலங்கை

## குர்ஷித்தின் கருத்து தொடர்பில் கெஹலிய பதில்

கொழும்பு, பெப்.14

சர்வதேசத்தின் ஆதரவைப் பெற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் இலங்கை செயற்பட வேண்டும் என இந்தியா தெரிவித்துள்ள நிலையில், சர்வதேசத்தின் தேவைக்கேற்ப எந்தவொரு நடவடிக்கையையும் இலங்கை முன்னெடுக்காது என்று அரசு தெரிவித்தது.

"சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை தனிமைப்படுத்தப் படவில்லை. சர்வதே சத்தின் ஆதரவு அதற்கு இருக்கின்றது. பொறுப்புக்கூறும் விடயத்தில் தேவையான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். எந்தவொரு நடவடிக்கையையும் சர்வதேசத்தின் தேவைக் கேற்ப நாம் எடுக்க முடியாது. எமது ஜன நாயகக் கட்டமைப்புக்கு அமையவும், நாட்டு மக்களின் தேவைக்கமையவுமே நாம் செயற்படுவோம். இதனூடாக சர்வதேசத்துடன் கோபத்தை ஏற்படுத்திக்கொள்ள நாம் எதிர்பார்க்கவில்லை." என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹ லியரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கைக்கு ஆதரவான ஒரு நிலைப்பாடு சர்வதேச சமூகத்தில் நிலவ வேண்டுமாயின், அதற்கு ஏற்ற வகையில் திருப்திகரமான முன்னேற்றங்களை இலங்கை காண்பிக்க வேண்டியது அவசியம் என்றும், சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை தனிமைப்பட்டு விட முடியாது. உலகுடன் இணைந்தே செயற்படவேண்டும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தவை வருமாறு,

நீண்டகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னரான குறுகிய காலத்தில் பொறுப்புக்கூறும் விட யத்தில் நாம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். நாம் ஒரு நட வடிக்கையை முன்னெடுக்கும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை முன்வைப்பர். அவற்றையெல்லாம் நாம்செய்து முடிக்க முடியாது.

எமது நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைவர் இருக்கின்றார். மிகக்குறுகிய காலத்தில் நாட்டில் ஜனநாயகத்தை அவர் நிலைநாட்டியுள்ளார். நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். அவர்களின் உரிமையை மீறும் வகையிலான நடவடிக்கைகள்இங்குஇடம்பெறவில்லை. சர்வதேசத்தின் ஆதரவு எமக்கு இப் போதும் இருக்கின்றது. சர்வதேசத்தின் மத்தியில் நாம் தனிமைப்படுத்தப்படவில்லை. பல நாடுகள் எமக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டே இருக்கின்றன. எந்தவொரு விடயத்திலும் நாம் நாட்டின் தேவையைக் கருத்திற்கொண்டே செயற்படுவோம். இதனூடாக சர்வதே சத்துடன் கோபத்தை ஏற்படுத்திக்கொள்ள நாம் விரும்பவில்லை.

**13ஆவது திருத்தம்**

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயின், அது குறித்த நடவடிக் கைகளை நாம் மேற்கொள்வோம். இருப்பினும் இந்த விடயத்தில் நாட்டைப் பிளவுபடுத்தும் நிலைமையை ஏற் படுத்த நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். தேவையான நேரத்தில் தேவையானவற்றைச் செய்வோம் - என்றார்.



உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு நேற்றுக்காலை வருகைதந்த இலங்கைக்கான நோர்வே தூதர் கிரேஜ் லொச்சன் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவனைச் சந்தித்து கலந்துரையாடினார். (வ-21)

# திருமலை மனித புதைகுழியை மூடி மறைக்க அரசு முயற்சி

## நீதி விசாரணை கோருகிறது கூட்டமைப்பு

கொழும்பு, பெப்.14

திருகோணமலை கோணேஸ்வரம் வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை மூடி மறைப்பதற்கு அரசு கடும் முயற்சி மேற்கொண்டுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். புதை குழி குறித்து முழுமையான விசாரணை நடத்தி உண்மையை வெளிச்சத்துக்கு கொண்டுவர வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

திருகோணமலைமனிதப் புதைகுழி தொடர்பில் தம்மிடம் பலரும் முறையிட்டுள்ளனர் என்றும், இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொறுப்பானவர்களிடம் தாம் வேண்டுகோள் விடுக்கவுள்ளோம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்று மாலை 'உதயனி'டம் தெரிவித்தார்.

இதேவேளை, திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாபெரும் மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணைகள் உடனடியாக நடத்தப் பட வேண்டும் என்று கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா குறிப்பிட்டார்.

மனிதப் புதைகுழிகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முறையிடும் என்றும் மாவை சேனாதிராசா மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் திருகோணமலையில் கண்டுபிடிக் கப்பட்டுள்ள மனிதப் புதைகுழியை மூடி மறைக்க அரச படைகள் எடுக்கும் நடவடிக்கை களை தாம் வன்மையாகக் கண்டிக் கின்றோம் என்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், பா.அரியநேத்திரன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

திருகோணமலை புதைகுழி விவகாரம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமையவே அடுத்தகட்ட நடவடிக்கைகளை தம்மால் எடுக்கமுடியும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண நேற்று மாலை 'உதயனி'டம் தெரிவித்தார்.

# இலங்கைமீது சர்வதேச விசாரணைக்கு ஆஸி. அரசு ஆதரவளிக்க வேண்டும்

## அந்த நாட்டின் செனட் சபையில் தீர்மானம்

சிட்னி, பெப்.14

சர்வதேச சுயாதீன போர்க் குற்ற விசாரணை இலங்கை மீது நடத்தப்பட வேண்டும் என்று ஆஸ்திரேலிய செனட்சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு அதனூடாக கடுமையான செய்தி பிரதமர் டோனி அபேர்டுக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளதாக ஆஸ்திரேலியாவின் பசுமைக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.நா மனித உரிமை சபைக் கூட்டத்தில் இலங்கை மீதான சர்வதேச விசாரணைக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய அரசைப் பசுமைக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவளித்து, ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆஸ்திரேலிய பசுமைக் கட்சி செனட் சபை மூலம் வலுவான செய்தி ஒன்றை அனுப்பியுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் கிறிஸ்டின் மில்னேது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் போர்க்குற்றம் நடந்தமைக்கு, ஆஸ்திரேலியாவின் பொதுநல ஆலோசனை மையம் அமைப்பு தெளிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாகவும், எனவே சர்வதேச விசாரணை அவசியம் எனவும் பசுமைக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணைக்கான சர்வதேச அழைப்பு குறித்து ஆஸ்திரேலியா எவ்வாறு செயற்படுகிறது என்று உலகமே பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அதனால் இன்று நாம் பிரதமருக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் வலுவான செய்தியை அனுப்பியுள்ளதாகவும் அண்மையில் இலங்கைக்கு வந்துசென்ற செனட்டர் லீ ரெயினோன் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## சிவராத்திரிக்காக 28ஆம் திகதி பாடசாலை விடுமுறை

கொழும்பு, பெப்.14

சிவராத்திரி தினத்திற்கு மறுநாளான 28 ஆம் திகதி தமிழ்ப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கி அத் தினத்திற்குபதிலாக மார்ச் மாதம் 8 ஆம் திகதியை பாடசாலை தினமாக அறிவிப்பதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக இந்து ஆலய பாதுகாப்புபேரவை அறிவித்துள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஊடாக கல்விய மைச்சர் பந்துலகுணவர்தனவிடம் இந்து ஆலய பாதுகாப்பு பேரவை விடுத்த வேண்டுகோளையடுத்தே, விடுமுறை வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இறுதி வரைவுக்காக இந்தியா காத்திருப்பு

## அதன் பிறகே ஜெனிவா முடிவு என்கிறது டில்லி

கொழும்பு, பெப்.14

ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை விவகாரம் குறித்து தீர்மானமொன்றை எடுப்பதற்காக அமெரிக்கப் பிரேரணையின் இறுதி வரைவுக்காக இந்தியா காத்திருக்கின்றது.

எனவே, பிரேரணையின் இறுதி வரைவு வெளியான பின்னரே அதற்கு ஆதரவாக வாக்களிப்பதா அல்லது இல்லையா என்ற முடிவை டில்லி எடுக்கவுள்ளது.

இலங்கையிலிருந்து சென்றுள்ள ஊடகவியலாளர்கள் குழு நேற்று இந்திய வெளிவிவகார செயலாளர் சுஜாதா சிங்கை சந்தித்தபோது, அவர் மேற்படி தகவலை உறுதிப் படுத்தியுள்ளார்.

"இலங்கை மீதான பிரேரணை விவகாரம் குறித்து இந்திய அரசு இன்னும் எவ்வித முடிவுகளையும் எடுக்கவில்லை. இறுதிவரைவு நகல் வெளியானப்பின்னரே வாக்களிப்பு தொடர்பில் முடிவெடுக்கப்படும்" என்றும் வெளிவிவகார செயலாளர் கூறியுள்ளார்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நல்லிணக்கத்துக்காக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை நோக்கிய கலந்துரையாடலை இலங்கை அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்தவேண்டும்.

சமஉரிமை, நீதி, கௌரவம், சுயமரிதாதை ஆகியன தமிழ் சமூகத்துக்கும் கிடைக்க வேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பாகும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

# தமிழர்களுக்கு நீதியை வழங்குங்கள்

## ஐ.நாவிடம் மன்னிப்புச் சபை வலியுறுத்து

இறுதிக் கட்டப்போர் குறித்து சர்வதேச விசாரணை நடத்தும் முனைப்புகளை இலங்கை அரசு முடக்கி வருகிறது. எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க ஐ.நா. மனித உரிமைகள் சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமை அமைப்புகளுள் ஒன்றான சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே, மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமானத்திற்கு எதிராகவும், போர்க்குற்றங்களிலும் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு இதுவரையில் உரிய பதில் அளிக்கப்படவில்லை என்றும் சர்வதேச மன்னிப் புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமி சடலமாக மீட்பு

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் விளாத்திக்குளம் கிராமத்தின் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. ஒட்டுசுட்டான்மகாவித்தியாலயத்தில்தரம்6இல்கல்விபயிலும் பாஸ்கர் வைஸ்ணவி(வயது- 11) என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெற்றோர் உறவினர் வீட்டில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து விட்டு நண்பகல் வீடு திரும்பிய சமயம் மகள் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சிறுமியின் சடலம் முல்லைத்தீவு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஜ-18)




வாழ்த்துகின்றோம்

நேற்றுமுன்தினம் (12.02.2014)
திருமண பந்தத்தில்
இணைந்து கொண்ட
சாருஜன் - ராஜினி
தம்பதிகள் பதினாறும் பெற்று
நீடூழி வாழ்க என வாழ்த்தும்



வாழ்த்துவோர்:
நாச்சிமார் கோயிலடி
நண்பர்கள்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

01 மாதம் நிறைவடைந்த அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.
தொடர்பு:- 078 9303880

## S.G. சாந்தன் இசைக்குழுவின் முதல் வெளியீடான C. சுதர்சனின் இசையில்

## யாழ்ப்பாணக் காதல்

இசைப்பாடல் இறுவட்டு
வெளியீட்டு விழா
அழைப்பிதழ்

இடம் : மிலேனியம் தங்குமிட விடுதி இராமநாதன் வீதி யாழ்.

காலம் : 14.02.2014 பி.ப. 5.00 மணி

தலைமை : க. ஜெயக்குமார்



அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்
இதனை தனிப்பட்ட
அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்.
அனைவரும் சமூகம்
தரவும்.

காதலர் நாளில் காதல் கான
மழையில் நனைய அனைவயையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

S.G. சாந்தன் (பாடகர்)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 12 |
| 08 | 02 |
| 1945 | 2012 |

அமரர் **ஐயாக்குட்டி கனகரட்ணம்**

(14.02.2014 வெள்ளிக்கிழமை)

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (14.02.2014) வெள்ளிக்கிழமை காந்திவீதி, கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

காந்தி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி வேலும்மயிலும்



வல்வெட்டித்துறை நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வேலும் மயிலும் நேற்று முன்தினம் (12.02.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலும்மயிலும் (சிவபெருமான்) அவர்களின் அன்புமனைவியும் குகன், ஸ்கந்தவதி, பொன்னம்பலம், வான்மதி, ராதாகிருஷ்ணன், இந்துமதி, முருகதாஸ், அன்னவதனி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற நாகேந்திரராசா மற்றும் தவமணிதேவி, ஸ்வர்ணகலா, கலைநேசன், வசந்தி, யோகானந்தராஜா, சாந்தலக்ஷ்மி, வசீகரன் ஆகியோரது மாமியும் சுகந்தி, சுதர்ஷனி, சாந்தி, ஜெயந்தி, வசந்தி, கார்த்திகா, செந்தூரன், சோபனா, பிரதீபா ,சரவணன், சாய்வைஷ்ணவி, பாலமயூரன், தாட்சாயினி, ரூபிகா, வேலோன், மயூரன் ஆகியோரது பேர்த்தியும் கனிஷ்டா, ஜெரமி, இஷா, நிலஷி, விதுன், ஹரிஸ், சாரிகா, ஆகாஸ், சாகரி, சம்யுக்தா, அஸ்வத்மன் ஆகியோரது பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (16.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின் பி.ப. 5.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கனத்தை இந்து பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
V. முருகதாஸ் (மகன்)
2436693/077 6731110

## தவறிவிட்டது

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கும், டிப்போ சந்திக்கும் இடையில் அடையாள அட்டை (ந.உமாகரன்) ஏ.ரி.எம் காட், லைசன்ஸ் போன்ற முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் கிளிநொச்சி ச.தொ.ச. விற்பனை நிலையத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 818 2202 (43520)(10.14)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



16.11.2013 அன்று இறைபதம் எய்திய
எமது குடும்பத்தின் குலவிளக்கு

அமரர்
**கனகராசா முகுந்தன்** (மதன்)

அவர்களின் 90 ஆம் நாளான 14.02.2014 இன்றைய தினம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாணி விலாஸ்,
இல.76/1, விசுவமடு மேற்கு,
விசுவமடு. குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியரான
திருமதி காந்தரூபி உதயகுமார் அவர்களின்
அன்புத் தாய் **திருமதி அன்னபூரணி கந்தசாமி**
அவர்கள் நேற்று (13.02.2014) வியாழக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது பாடசாலைச் சமூகம் துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(C/12054)(2.6) **பாடசாலைச் சமூகம்,**
யா/இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை, வரணி.

## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம் லூர்தம்மா (இராசாத்தி)



போயிட்டி இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் லூர்தம்மா நேற்று (13.02. 2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னமுத்து தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ் சென்ற மனுவேற்பிள்ளை ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான செபமாலை ராசா, மேரி புஸ்பம், அல்பிறேட் நாயகம் மற்றும் இரத்தினம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன் புச் சகோதரியும், காலஞ் சென்ற துரைராஜசிங்கம் மற்றும் தேவராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயும், றெஜினா மலர், அருள்ராணி ஆகியோரின் பாசமிகு மாமியும், யூட்சன்-வதி, ஜெஸ்லி-ஜேன், சுரேஸ் தர்சினி, அனி-ஜேசுதாஸ், ஜெனி-சீலன், மினி-சீலன், யாழினி, எட்மன்-துவாரகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டியூறன், ஜெவ்றி, ஜெசிக்கா, மியூ லின், டாசா, கொட்வ்றி, கிஷாந்தனன், டிலக்சன், டில்க்கா, ஜெவ்லின், ஜெவ்னி, ஆதேஷ், நயோமி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.02.2014) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு போயிட்டி லூர்து அன்னை ஆலயத்தல் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, போயிட்டி புனித லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: தேவராஜசிங்கம் (மகன்),
சீலன் (பேரன்).
021 300 7995

போயிட்டி,
இளவாலை. (44755) (10.14)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி விஸ்வலிங்கம் ( கீர்த்தியின் அம்மா)



கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், வேளாதோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி விஸ்வலிங்கம் நேற்று (13.02.2014) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்புப்புதல்வியும் கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மருமகளும் திரு கந்தையா விஸ்வலிங்கத்தின்அன்புமனைவியும் நவரட்ணராஜா (ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி), ரவீந்திரன் (அவுஸ்திரேலியா), பிரபா, கீர்த்தி ராஜா, றேணுகா மற்றும் காலஞ்சென்ற றோகினி ஆகியோரின் தாயும் கமலா (ஆசிரியர் யாழ். இந்து மகளிர் கல்லூரி), அகல்யா (அவுஸ்திரேலியா), யோகநாதன் ( சிற்பாசாரி), தங்கத்துரை (கிராம அலுவலர் நல்லூர்) ஆகியோரின் அன்புமாமியும் வைஸ்ணவி, சுதர்சனன், சயந்தியா, பிரியதர்சினி, பிருதிவிகா, ராரணி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நவரட்ணசிங்கம், துரைசிங்கம், மகேஸ்வரி, சோமசேகரம், ராயேஸ்வரி, இந்திராணி மற்றும் நடராஜா, பூமணி, நவமணி, பாலசிங்கம், சிங்கராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்குஎடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வேளாதோப்பு,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## சரசாலை வடக்கில் இரு வீதிகளுக்கு விமோசனம்

தென்மராட்சி, பெப்.14
சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சரசாலை வடக்குப்பிரிவில்இரண்டுவீதிகள் கிராமங்கள் சிறுநகர அபி விருத்தித் திட்டத்தின் கீழ் (புறநெகும) புனரமைக்கப்படவுள்ளன.
பிரதேச சபை உறுப்பினர் ச.ஞானலிங்கத்தின் முயற்சியால் இந்த திட்டத்தின் கீழ் அம்மன் கோயில் வீதி, ஐயனார் கோயில் வீதி ஆகி யவை புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)


## சைக்கிளில் பயணித்த பெண்ணின் தாலிக்கொடி அறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 14
பட்டப்பகலில்சைக்கிளில்சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இனந்தெரியாத இரு நபர்கள் வீதியில் யாரும் இல்லாத இடம் பார்த்து பெண் அணிந்திருந்த மூன்றரைப் பவுண் நிறையுடைய தாலிக் கொடியைக் கொள்ளையடித் துச் சென்றனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் சில்லாலையில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது. சில்லாலை சாந்தைப் பகுதி யைச் சேர்ந்த பெண்ணொருவரின் தாலிக் கொடியே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டது.
பாடசாலையில் பயிலும் தனது பிள்ளையை வீட்டுக்கு ஏற்றிக் கொண்டு வரும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரே வீதியில் ஆள்நடமாட்டம் இல்லாதபோது தாலிக் கொடியை அறுத்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-86)

# மின்சாரத் தடையால் அவதிப்படும் நோயாளர்கள்

### சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்

தென்மராட்சி, பெப்.14
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்தனர்.
தென்மராட்சி பிரதேசத்தில் மின்தடை நடைமுப்பைடுத்தாத போதிலும் மருத்துவமனை வளாகத்தில் மின்தடை ஏற்படுவது குறித்து மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:
மருத்துவமனை மின்பாவனைக்கென தனியான மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளது. அந்த மின்மாற்றியிலிருந்து வளாகத்தில் உள்ள மின்பிறப்பாக்கி அறையில் மின்விநியோகம் தொடர்பான அனைத்து கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.
இந்த மின் விநியோக மார்க்கத்தில் அயற்காணியில் உள்ள வேப்ப மரக் கிளைகளும் அதனுடன் வளர்ந்த கொடிகளும் இணைந்து மின்விநியோக வயர்களை ஒன்றிணைப்பதால் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது.
குறித்த வேப்பமரம் நிற்கும் காணி உரிமையாளர் இங்கு இல்லாததால் கிளைகளை வெட்ட முடியவில்லை. இது தொடர்பாக மின்சார சபை சாவகச்சேரி அலுவலகம், சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றுக்கு பலதடவைகள் அறிவித்தும் மரக்கிளைகள் வெட்டப்படாததால் மின்தடை ஏற்படுகிறது.
இதனால் மருத்துவமனை குளிரூட்டிகளில் வைக்கப்பட்டுள்ள பெறுமதிமிக்க மருந்து வகைகள் பழுதடையும் வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)


மின் விநியோக வயர்களில் பற்றிப் படர்ந்துள்ள கொடிகளும்,சாய்ந்திருக்கும் மரக்கிளைகளும்

# பொருளாதார இழப்பில் கால்நடை வளர்ப்போர்

### செயற்கைமுறைச் சினைப்படுத்தலுக்கு அனுமதி வழங்காததால்

அச்சுவேலி, பெப்.14
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கால்நடைகளுக்கான செயற்கைமுறைச் சினைப் படுத்தலுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் தாம் எதிர்பாராத சிரமங்களுக்கும் பொருளாதார இழப்புக்கும் உள்ளாகி வருவதாக கவலை தெரிவிக் கின்றனர்.
யாழ்.மாவட்டத்தில் ஆடு-மாடுகளுக்கான கால்வாய் நோய்த் தாக்கம் காணப்பட்டதை அடுத்து யாழ்.மாவட்டத்தில் கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவுகளில் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் செயற்பாடுஇடைநிறுத்தப்பட்டது. ஜனவரி முதலாம் திகதியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட செயற்கைமுறைச் சினைப் படுத்தலுக்கான அனுமதி கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.
உடுவில், தெல்லிப்பழை பிரிவுகளில் செயற்கைமுறைச் சினைப் படுத்தலுக்கான அனுமதி மீளவும் கடந்த வாரம் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது.
யாழ்.மாவட்டத்தில் ஆகக் கூடிய அளவில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதும் கால்நடைகள் கூடிய அளவில் வளர்க்கப்படுவதுமான விவசாயப் பிரதேசமான கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் செயற்பாட்டுக்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.
வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவை உள்ளடக்கிய கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் கால்வாய் நோய்த்தாக்கம் முற்றாக் இல்லை என்று மதிப்பீடுகள் தெரிவித்துள்ள போதிலும், செயற்கை முறைச் சினைப்படுத்தலுக் கான அனுமதி வழங்கப்படாமையால் எதிர்பாராத நெருக்கடிகளுக்கும் பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களுக்கும் தாம் உள்ளாகி இருப்பதாக கால் நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)

## தென்மராட்சி புகையிலை செய்கையாளர் கவலை

தென்மராட்சி, பெப்.14
தென்மராட்சி பிரதேசத்தில் புகையிலை உற்பத்தி செய்வோரின் விவரங்கள் கிராம அலுவலர்களால் திரட்டப்படுவது குறித்து புகையிலை உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தனர்.
கடந்த வருடம் போதிய மழை வீழ்ச்சி இல்லாத நிலையிலும் கடந்த வருடங்களைப் போன்று இந்த வருடமும் புகையிலை பயிரிட்டுவளர்த்துவரும் வேளையில் கிராம அலுவலர்கள் புகையிலைஉற்பத்தியாளர்களின் விவரங்களைப் பெற்றுச் செல்வது குறித்து கவலை தெரிவித்தனர்.
புகையிலைப் பழக்கத்தால் பலர் பாதிப்புகளுக்கு உள்ளாவதாக புள்ளி விவரங்கள் தெரிவிப்பதால் புகையிலை உற்பத்தியை தடுப்பதற்காக உற்பத்தியாளர்களின் பெயர் விவரங்கள் பெறப்பட்டிருக்கலாம் என்றும் வேறொரு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



போரால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கான உதவி நிதியை வலி. வடக்கு பிரதேச சபை பிரதித் தலைவர் கையளிக்கிறார்.

## போர் பாதித்த குடும்பங்களுக்கு புலம்பெயர் உறவால் உதவி

லண்டனில் வசித்து வரும் புலம்பெயர் உறவான செல்வன் யனுஸ் சிறிதாசன் தனது 9 ஆவது பிறந்த தினத்தை இலங்கையில் போர் அவலங்களுடன் வாழும் உறவுகளுடன் இணைந்து கொண்டாடும் வகையில் 'உதவும் இதயங்கள்' நிறுவனத்தினூடாக தனது உதவியை அனுப்பி வைத்துள்ளார். குறித்த நிறுவனம் ஊடாக அவரால் அனுப்பப்பட்ட ஒருலட்சம்ரூபா நிதியை போரால் பாதிக் கப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு வலி.வடக்கு பிரதேச சபை பிரதித் தலைவர் ச.சஜீவன் எடுத்துச் சென்று சேர்ப்பித்துள்ளார். (வ)

'உதவும் இதயங்கள்' நிறுவனத்தினூடாக தனது உதவியை அனுப்பி வைத்துள்ளார்.

# தடை செய்யப்பட்டிருந்த பாதை மீண்டும் மக்கள் பாவனைக்கு

### போராட்டத்தால் விடிவு கிட்டியது

தென்மராட்சி, பெப்.14
ரயில் பாதை அமைக்கப்பட்ட போது மக்களின் போக்குவரத்துவீதிதடைசெய்யப்பட்டதால் அந்தவீதியைமீண்டும்அமைக்குமாறு மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடுத்து வீதியை அமைப்பதற்கு கற்கள் பரவப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளது.
சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு அருகில் உள்ள சப்பச்சிமாவடிப் பிள்ளையார் வீதியை நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் பயன் படுத்தி வந்தனர். முன்னைய காலங்களில் ரயில் பாதை இருந்த போது பாதையாக இருந்தது.
அண்மையில் ரயில் பாதை அமைப்பதற்காக தண்டவாளம் பொருத்தும் பணிகள் இடம்பெற்ற போது தடைசெய்யப்பட்ட அப் பாதைக்கான தற்காலிக போக்குவரத்துப் பாதை அமைக்கப்படாததால் அப்பாதையைப் பயன்படுத்தும் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கடந்த வாரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவ்வேளையில் அங்கு வருகை தந்த ரயில் பாதை அமைக்கும் பணிக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந் துரையாடிய போது பாதையை மறுபடியும் அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் விடாப்பிடியாக நின்றதால் பரிசீலனை செய்வ தாகக் கூறிச் சென்றனர்.
குறிப்பிட்ட பாதையை அமைக்காமல் அருகில் உள்ள பாதையிலிருந்து தற்காலிக பாதை அமைக்கவுள்ளதாக தகவல் கிடைத்ததை அடுத்து மக்கள்மீண்டும் மறியல் போராட் டத்தில் ஈடுபட்டனர்.
அதன் பின்னர் நேற்று முன்தினம் கற்கள் பரவப்பட்டு பாதை முன்னைய பாதை மீண்டும் சீர்செய்யப்பட்டுள்ளது. (வ-9)

## வரணியில் நிலக்கடலை செய்கை சிறந்த அறுவடை

வரணிப் பிரதேசத்தில் விவசாயி ஒருவரால் நிலக்கடலை பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு சிறந்த அறுவடையும் கிடைத்ததாகக் கூறப்பட்டது. கடந்த ஐப்பசி மாதத்தில் நடப்பட்ட நிலக்கடலைப் பயிர் தை மாதத்தில் அறுவடை செய்யப்பட்டது. இடைக்குறிச்சி பிரதேசத்தைக்கொண்டவிவசாயி ஒருவரால் இவ்வாறு நிலக்கடலைப் பயிர் மேற்கொள்ளப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (வ-122)

# மண்கும்பான் மக்களுக்கு விரைவில் ச.ச.நிலையம்

### காணி வழங்கியது புங்குடுதீவு சர்வோதயம்

யாழ்ப்பாணம், பெப்.14
புங்குடுதீவு சர்வோதயத்துக்குச் சொந்தமான மண்கும்பானில் உள்ள காணியை அந்தப்பகுதி மக்களின்நன்மைகருதி சனசமூக நிலையம் ஒன்றை அமைப்பதற்காக வழங்க சர்வவோதய நிறுவனம் சம்மதித்துள்ளதாக வேலணை பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கு.சிவகுலசிங்கம் தெரிவித்தார்.
வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் 55 வரையான சனசமூகநிலையங்கள் இருந்த போதும் ஐந்து நிலையங்கள் கூட சிறப்பாக இயங்கவில்லை எனத் தெரிவித்த பிரதேச சபை உறுப்பினர்- மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, மண்கும்பான், சரவணை ஆகிய பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களுடன்தாம்கலந்துரையாடியதன் பேரில் அவற்றை மீளவும் இயங்க வைப்பதற்கான ஏற் பாடுகளைச் செய்வதற்கு அவர்கள் முன்வந்துள்ளனர்.
எனவே அதற்கான ஒத்துழைப்பை நாம் வழங்கவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-7)



தனது இல்லத்துக்கு வருகை தந்த அமெரிக்கத் தூதர் நான்ஸி போவெலை பூங்கொத்துக் கொடுத்து வரவேற்கின்றார் நரேந்திர மோடி.

# மோடியைச் சந்தித்தார் அமெரிக்கத் தூதர்

புதுடில்லி, பெப்.14

குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் நான்ஸி போவெல். நரேந்திர மோடிக்கு அமெரிக்கா விஸா வழங்குவதற்குத் தொடர்ச்சியாக மறுத்துவரும் நிலையில் தற்போது நடைபெற்றுள்ள இந்தச் சந்திப்பு முக்கியத்தும் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

2002ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிராகக் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்துக்கு பின்னர், கடந்த 9 ஆண்டுகளாக அமெரிக்கா, நரேந்திர மோடிக்கு விஸா வழங்க மறுத்து வருகின்றது. இந்த நிலையில் தற்போது பா.ஜ.க வின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார் நரேந்திர மோடி. நடைபெறவுள்ள தேர்தலில் பெரும்பாலும் அவரே பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. அதனையடுத்து மோடி தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கருதப்படுகின்றது. மோடியைச் சந்தித்துப் பேசுவதற்குத் தாமாகவே ஒழுங்கு மேற்கொண்ட நான்ஸிபோவெல், மோடியை அவரது இல்லத்திலேயே சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (ற)

## பாலுமகேந்திரா காலமானார்



மறைந்த பாலுமகேந்திரா

சென்னை, பெப்.14

பிரபல தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் பாலுமகேந்திரா (வயது 74) நேற்றுக் காலமானார். நேற்று அதிகாலை முச்சுத் திணறல் ஏற்பட்டதை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

1939ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி இலங்கையில் மட்டக்களப்பு அருகே உள்ள அமிர்தகழி என்ற ஊரில் பிறந்தவர் பாலு மகேந்திரா. இவர் லண்டனில் தன்னுடைய இளநிலைக் கல்விப் படிப்பை நிறைவு செய்தார்.

அதன் பின்னர் புனா திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவுக் கலை பயின்ற பாலுமகேந்திரா, 1971ஆம் ஆண்டு அந்தத் துறையில் தங்கப் பதக்கம் பெற்றார். முதன் முதலாக 'நெல்லு' என்ற மலையாளப் படத்துக்கு ஒளிப்பதிவு செய்த அவர், அந்தப் படத்துக்கு 1972ஆம் ஆண்டுக்கான சிறந்த ஒளிப்பதிவுக்கான கேரள மாநில விருதைப் பெற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து பல மலையாள திரைப் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தார்.

1977ஆம் ஆண்டு பாலு மகேந்திரா அவரது முதல் படமான 'கோகிலா'வை கன்னட மொழியில் இயக்கினார். பாலு மகேந்திரா ஒளிப்பதிவு செய்த முதல் தமிழ்ப் படம் 'முள்ளும் மலரும்' 1977ஆம் ஆண்டு வெளியானது. 1978ஆம் ஆண்டு தமிழில் அவர் இயக்கிய முதல் படமான 'அழியாத கோலங்கள்' வெளியாகியது.

சிறந்த இயக்குநருக்கான தேசிய விருதை பாலு மகேந்திரா மூன்று முறை பெற்றுள்ளார். கோகிலா, அழியாத கோலங்கள், மூன்றாம் பிறை, இரட்டை வால் குருவி, வீடு, சந்தியாராகம், வண்ண வண்ண பூக்கள், மறுபடியும், சதி லீலாவதி, தலைமுறைகள் என அவர் இயக்கிய பல படங்கள் ரசிகர்களின் வரவேற்பைப் பெற்றவை.

இவர் இறுதியாக இயக்கிய படம் தலைமுறைகள். பலரது பாராட்டைப் பெற்ற இந்தப் படத்தில் அவரே நடித்திருந்தார். ஒளிப்பதிவாளர், இயக்குநர், நடிகர் என்று பன்முகம் கொண்ட பாலுமகேந்திராவின் மறைவு தென்னிந்திய திரைப் படத் துறைக்குப் பெரும் இழப்பாகவே அமையும். (ற)

## இந்திய மீனவர்கள் சூடு விவகாரம்: ஐ.நாவை நாடுகிறது இத்தாலி


புதுடில்லி, பெப்.14

இந்திய மீனவர்கள் இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கை சந்தித்து வரும் இத்தாலிய கடற் படைச் சிப்பாய்கள் இருவரைக் காப்பாற்றுவதற்காக அந்த நாடு ஐ.நா சபையை அணுகியுள்ளது.

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையாளரிடம் இது தொடர்பாக இத்தாலிய அரசு முறைப்பாடு ஒன்றைக் கையளித்துள்ளது. "குற்றஞ்சாட்டப்பட்ட இரு வீரர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 2012ஆம் ஆண்டு முதல் அவர்களது சுதந்திரம் பறிக்கப்படுகின்றது" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதை ஏற்றுக் கொண்ட மனித உரிமைகள் ஆணையாளர் அது குறித்து விசாரணை நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

எந்தச் சூழ்நிலையிலும் தமது இரு கடற்படையினரைக் கைவிடப் போவதில்லை என்றும், அவர்களை தாய்நாட்டிற்கு அழைத்து வர எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும் என்றும் இத்தாலிய அரசு தெரிவித்துள்ளது. அதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள ஏனைய நாடுகளின் ஆதரவையும் இத்தாலி அரசு கோரியுள்ளது. (ற)



விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் இத்தாலிய கடற் படை வீரர்கள்

## தெலுங்கானா விவகாரம்

# போர்க்களமானது நாடாளுமன்றம்

புதுடில்லி, பெப்.14

தெலுங்கானா சட்டத் திருத்தம் இந்திய நாடாளுமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை உள்துறை அமைச்சர்சுஷில்குமார்ஷிண்டே தாக்கல் செய்தார். எனினும் சட்டத் திருத்தம் தாக்கல் செய்தமை தொடர்பில் அரசியல் கட்சிகள் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளன. சட்டத் திருத்தம் தாக்கல் செய்யப்பட்டபோது மன்றில் பெரும் 'போர்' நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டத்திருத்தம் தாக்கல் செய்யப்பட்டதா? இல்லையா? என்பது குறித்து தெரியவில்லை. அது தொடர்பான ஆவணங்கள் எவையும் தமக்குத் தரப்படவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி, "இது தொடர்பாக நீதிமன்றம் செல்லவுள்ளேன்' என்று தெரிவித்துள்ளார். (ற)

### நாடாளுமன்ற உறுப்பினர் தற்கொலை முயற்சி

தெலுங்கானா சட்டத்திருத்தம் குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் அமளி நிலவி வரும் நிலையில் தெலுங்கு தேசக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாராயணராவ் திடீரென நாடாளுமன்றில் மயங்கி விழுந்தார். ஆரம்பக் கட்ட மருந்து பரிசோதனையில் அவர் ஒருவகைத் திராவகத்தை அருந்தியமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### நாடாளுமன்றில் மிளகாய் பொடித் தாக்குதல்

நாடாளுமன்ற அவை நேற்று ஆரம்பித்ததும் தெலுங்கானா விவகாரம் சூடு பிடித்தது. ஆந்திராவைப் பிரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆந்திர நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். திடீரென காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜகோபால் மிளகுத் தூள் மற்றும் மிளகாய் தூள் என்பவற்றை வீசி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தினார். அதனால் உடல் நலம் பாதிக்கப்பட்ட பல உறுப்பினர்கள் நாடாளுமன்ற மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்ள முயன்ற உறுப்பினர்கள் சிலரும் காயமடைந்தனர். அவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதல் நடத்திய ராஜகோபால், அண்மையில் காங்கிரஸ் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டவராவார். இந்தத் தாக்குதலால் நாடாளுமன்றத்தில் அனைவரும் நேற்றுமுழுவதும் இருமிக் கொண்டேயிருந்தனர்.

# வாரிசாக இருப்பதற்கு நான் வெட்கப்படவில்லை

*ஸ்டாலின் கூறுகின்றார்*



ஸ்டாலின்

சென்னை, பெப்.14

கட்சியில் படிப்படியாகப் பொறுப்புகளை ஏற்று வரும் நிலையில், அரசியல் வாரிசாக இருப்பதற்கு தாம் வெட்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார் மு.க.ஸ்டாலின்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தி.மு.க. வாரிசு அரசியல் நடத்துகிறது என்று பலரும் விமர்சனம் செய்கின்றனர். தி.மு.கவில் பணியாற்றும் இளைஞர்களின் செயற்பாடுகளின்அடிப்படையில் அவர்களது திறமை வெளிப்படுகிறது. அவர்கள் கட்சியின் மாவட்டச் செயலராகவோ அல்லது கட்சி நிர்வாகிகளில் ஒருவராகவோ தெரிவு செய்யப்படும் போது வாரிசு என அடையாளம் காணப்படுகிறார்.

வாரிசாக இருப்பதற்காக நாங்கள் வெட்கப்படவில்லை. அந்த வகையில் நானும் தி.மு.க வில் படிப்படியான பொறுப்புகளை ஏற்று வருகிறேன். சிலருக்கு வாரிசுகள் இல்லை என்பதற்காக நாங்கள் என்ன செய்ய முடியும்? வாரிசுகள் இல்லாதவர்கள் பொறாமைப்படக் கூடாது. எனது உழைப்புக் குறித்து தலைவர் (கருணாநிதி) பாராட்டியிருக்கிறார். அதுவே எனக்கு மிகப் பெரிய பெருமை. அவரது வாரிசாக இருப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)


# காதலர் தினத்தன்று வேண்டும் பாதுகாப்பு; மாணவர்கள் மனு

சென்னை, பெப்.14

காதலர் தினமான இன்று காதலர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரி பொலிஸாரிடம் மனுக் கொடுத்துள்ளனர் மாணவர்கள்.

காதலர் தினம் வருடந்தோறும் பெப்ரவரி 14ஆம் திகதியான இன்று கொண்டாடப்படுகின்றது. இந்தநிலையில் நேற்று அனைத்து மாணவர்கள் பொது நல சங்க பொதுச் செயலாளர் ராமச்சந்திரன், 30க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் சென்று சென்னையிலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் மனு ஒன்றைக் கையளித்துள்ளார். அந்த மனுவில் "நாளை (இன்று) உலகம் முழுவதும் காதலர் தினம் கொண்டாடப்படுகிறது. சென்னையிலும் இது தொடர்பான கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன. நாளை பொது இடங்களில் சந்தித்துக் கொள்ளும் காதலர்களுக்குப் பொலிஸார் தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும். காதல் ஜோடிகளுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாமல் தடுக்க வேண்டும். காதலர் தினத்தன்று திருமணம் செய்து கொள்ளும் ஜோடிகள் பாதுகாப்பு கேட்டு, காவல் நிலையத்துக்கு வந்தால் அவர்களுடைய மனுக்களை ஏற்று அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும்." என்று கூறப்பட்டுள்ளது. அந்தப் பொலிஸ் நிலையத்தில் இருந்த அதிகாரியும் வேறு வழியின்றிஅவர்களின்மனுவை வாங்கிக் கொண்டு அவர்களை வழியனுப்பி வைத்துள்ளாராம். (ற)





நாட்டு மக்கள் முன்னிலையில் உரையாற்றிய அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ரொஹானி பொதுமக்களுக்கு கையசைத்து வாழ்த்துத் தெரிவிக்கின்றார்

ஈரானில் இஸ்லாமியப் புரட்சியின் 35ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நூற்றுக்கணக்கான ஈரானியர்கள் கொடிகளையும், பதாகைகளையும் ஏந்தியவாறு கலந்துகொண்டுள்ளனர். 1979ஆம் ஆண்டு நிகழ்ந்த புரட்சியின் விளைவாக அமெரிக்காவின் ஆதரவு பெற்ற ஷா-வின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, முசாவி கோமேனியின் தலைமையின் கீழ் ஈரான் வந்தது. அது அந்த நாட்டின் வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. நிகழ்வுகளின் போது நாட்டு மக்கள் முன்னிலையில் உரையாற்றிய அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ரொஹானி "முறையற்ற தடைகள் விதித்து ஈரானை அடிபணியவைக்க முடியாது என்றும் அவற்றைக் கடந்து ஈரான் தனது அணுத் திட்டங்களைத் தொடரும்" என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## வணிக ஒப்பந்தங்களில் கூகுள் முதலிடம்

Google

நியூயோர்க், பெப்.14
வணிக ஒப்பந்தங்களை மேற்கொள்வதில் கூகிள் நிறுவனம் உலகளவில் முதலிடத்தில் இருப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ப்ளூம்பெர்க் என்ற நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில், கூகிள் நிறுவனம் வணிக ஒப்பந்தங்கள் மேற்கொள்வதில் 3 ஆண்டுகளாக தொடர்ந்து முதலிடத்தில் இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வின் படி விளம்பர நிறுவனமான டபிள்யூ பி பி 2ஆவது இடத்திலும், கணினி உதிரிப்பாக உற்பத்தி நிறுவனமான இன்ரெடல் 3ஆவது இடத்திலும் உள்ளன. (ற)

# ஆபிரிக்கக் குடியரசு வன்முறையால் பிரியும்

### *எச்சரிக்கின்றார் பான் கீ-மூன்*



ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ-மூன்

நியூயோர்க், பெப்.14
மத்திய ஆபிரிக்கக் குடியரசில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் வன்முறைகளால் அந்த நாடு இரண்டாகப் பிரியும் அபாயம் தோன்றியுள்ளது என்று எச்சரித்துள்ளார் ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ-மூன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மத்திய ஆபிரிக்கக் குடியரசில் மத ரீதியான வன்முறைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் போதிய அளவு பயனைத் தரவில்லை. இந்த வன் முறைகள் தொடர்ந்து இடம்பெறுமானால் மத்திய ஆபிரிக்கக் குடியரசு இரண்டாகப் பிரியும் அபாயம் ஏற்படக் கூடும். நாட்டைப் பாதுகாத்து ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் சில மாதங்களாகவே இரு மதப் பிரிவினருக்கும் இடையே வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வன் முறைகள் காரணமாக ஆயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (ற)

# உறவுகளை மேம்படுத்த கொரிய அதிகாரிகள் பேச்சு

சியோல், பெப்.14
வட - தென் கொரியாக்களுக் கிடையிலான உறவுகளை மேம்படுத்தும் முகமாக இருநாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் இரு நாட்டு உறவுகளையும் பலப்படுத்துவது மற்றும் கொரியப் போரில் பிரிந்த குடும்பங்களின் சந்திப்பு என்பன குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரிய வருகின்றது.

இந்தச் சந்திப்பின் மூலம் கொரியத் தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை நீக்கி புதிய சகாப்தத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்று தென் கொரிய அரச பிரதிநிதிகள் தெரிவித் துள்ளனர்.

அதேவேளை, அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து நடத்திய கூட்டுப் போர் ஒத்திகைக்கு வடகொரியா கண்டனம் வெளியிட்டுள்ளது. (ற)

# சட்டவிரோத தந்தங்கள் பிரான்ஸ் அரசால் அழிப்பு



கைப்பற்றட்ட தந்தங்களை ஆராயும் பிரான்ஸ் அதிகாரிகள்

பரிஸ், பெப்.14
பிரான்ஸில் கடத்தல் கும்பல்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 3 தொன் எடையுள்ள யானைத் தந்தங்கள் அழிக்கப் பட்டன.

இவை அனைத்தும் கடந்த 20 வருடங்களில் கைப்பற்றப்பட்டவை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலக அளவில் வன உயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பான மாநாடு லண்டனில் தொடங்கி உள்ள நிலையில் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


பிரான்ஸின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத்துறை அமைச்சர் இது குறித்துக் கூறுகையில்,

"சட்டவிரோதமாகத் தந்தங்களை வாங்குபவர்களுக்கு கடும் தண்டனை மற்றும் அபராதம் விதிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்"- என்று தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்காவில் யானைகளின் எண்ணிக்கை கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அளவில் இருந்து தற்போது பாதியாக குறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. (ற)

# பிரிட்டனும், பிரான்ஸும் எனது மகள்மார்

### *அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறுகின்றார்*



ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ஜனாதிபதிகள்.

நியூயோர்க், பெப்.14
பிரிட்டனும், பிரான்ஸும் எனது மகள்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வர்ணித்துள்ளார்.


பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஓலாந்த் மூன்று நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார்.

அவர் ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்தபின், வொஷிங்டனில் இருவரும் இணைந்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர்.

அதன்போது பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர், பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நட்புறவு குறித்து கேள்வி எழுப்பினார். அதன்போதே ஒபாமா இவ்வாறு தெரிவித் துள்ளார்.

"எனக்கு மாலியா, சாஷா என்று இரு மகள்மார் உள்ளனர். அவர்களில் ஒருவரை விட்டு மற்றொருவரை மட்டும் தேர்ந்தெடுக்க முடியாது. அது போன்று பிரிட்டனும், பிரான்ஸும் எனது இரு மகள்மாரைப் போன்றவை. இரண்டு நாடுகளும் தனிச்சிறப்புகள் பெற்றுள்ளன, இரண்டு நாடுகளில் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுக்க முடியாது" என்று தெரிவித் துள்ளார். (ற)

# புங்குடுதீவு கிழக்கு தல்லையப்பற்று
# சங்கரமூர்த்தி முருகமூர்த்தி
# தேவஸ்தானம்
## தேர்ச் சிறப்பு மலர் - இன்று (14.02.2014) வெள்ளிக்கிழமை



## ஆலய வரலாறு

இயற்கை எழில் நிறைந்த இலங்கையின் சரித்திரப் பெருமை பெற்ற யாழ்.குடா நாட்டின் சப்த தீவுகளில் ஒன்றாக புங்குடுதீவு எனும் கிராமம் அமைந்துள்ளது பல அறிஞர்களும் சைவப் பெருங்குடி மக்களும் வாழ்கின்ற இக்கிராமத்தில் இச் சங்கர மூர்த்தி-முருகமூர்த்தி வேற்பெருமாள் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

இந்த ஆலயத்தின் தொன்மையை-வரலாற்றை எடுத்து நோக்குவோமாக இருந்தால் புங்குடுதீவு கிழக்கு 12ஆம் வட்டாரத்தில் தல்லையப்பற்று என்று 1800-1900 வரையான காலப்பகுதியில் தீவகத்தில் ஒரு நிர்வாக அலகாக இருந்ததாக சொல்லப்படுகின்றது. இவ்வாலயம் யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள பதிவேடு களின்படி 1892ஆம் ஆண்டு தீவக மணியகாரர் மகள் இராமாசிப்பிள்ளை அவர்களால் சுண்ணாம்புக் கட்டடத்தில் "வேலை" மூலவராகக் கொண்டு மடாலயமாய் குடமுழுக்கு நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதன் பின்னர் மூன்று நேரப் பூசைகள் நடைபெற்றதாகவும் பெருமளவான அடியார்கள் விசேட தினங்களில் பங்குபற்றியதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாலயம் கச்சேரியில் 1892ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 1805 என்ற பதிவு எண்ணையும் கொண்டுள்ளது. ஆகவே இது முதலாவது குடமுழுக்கின் போது பதியப்பட்டாலும் இவ்வாலயம் 1892ஆம் ஆண்டிற்கு முன்பே தோன்றியதாகக் கருதப்பட வேண்டியுள்ளது.

அத்துடன் இத் தல்லையப்பற்று முருகன் ஆலயம் இரு ஆலயங்களின் கூட்டு ஆலயமாக விளங்குகின்றது. புங்குடுதீவு புதையல் ஆதிவிநாயகர் ஆலயம் கவனிப்பா ரின்றி விடப்பட, அவ்வாலயத்தின் ஆதி விநாயகர் விக்கிரகத்தை எடுத்து வந்து புங்குடுதீவு தல்லையப்பற்று முருகன் ஆலயத்தின் மகா மண்டபத்தில் பாலஸ்தாபனம் செய்து பூசிக்கப்பட்டு வருகின்றது. தற்போது இவ்வாலயம் குரு ஆலயங்களின் கூட்டு ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயத்தில் அமைந்துள்ள வேல் ஞானசக்தி வடிவானது. வேண்டுவார் வரங்களை அள்ளி வழங்குவது.

அந்தப் பகுதியில் வாழ்ந்தவர்கள் அனைவரையும் நல்ல நிலைக்கு கொண்டு வந்துள்ளது. தல்லையப்பற்று சங்கரமூர்த்தி - முருகமூர்த்தி முருகன் ஆலய வேற்பெருமானும் புதையல் ஆதிவிநாயகரும் ஒன்று சேர்ந்து அருள் பாலிக்க இவ்வட்டாரத்து மக்களில் பலர் கல்வி, கேள்விக்கு பெயர் பெற்ற மகான்களாக உருவாகினர்.

இத் தல்லையப்பற்று சங்கரமூர்த்தி-முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் 1892 இலும் பின்னர் 1928 இலும் மீண்டும் 1957இலும், 1972 இலும், 1985 இலும் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளன. 1991 இன் இடப்பெயர்வின் பின்னர் இவ்வாலயத்தில் இறுதியாக 2005ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது செயல்திறன் மிக்கதும் தலைமைத்துவக் கட்டமைப்பு மிக்கதுமான கௌரவ சு.நித்தியானந்தன் தலைமையிலான மிகச் சிறப்பான குழுமம் சுமார் இருபத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் முருகப் பெருமானுடைய பழைய கட்டுத் தேரினிலே எம்பெருமானாகிய புங்குடுதீவு கிழக்கு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி-முருகமூர்த்தி பெருமானுக்கு இந்த ஆண்டும் தேர்த் திருவிழாவை சிறப்பாக நடத்த உள்ளது. அத்துடன் அன்னதான சபை மூலம் மஹோற்சவ தினங்களில் தினமும் அன்னதானம் வழங்கப்படுகின்றது. இந்த ஆண்டு தேர்த் திருவிழாவில் வெளிநாடுகளிலுள்ள இந்த ஊர் மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி-முருகமூர்த்தி வேற்பெருமான் தேரினிலே 3ஆவது வருடத்தில் பவனி வந்து எங்கள் குறைகளெல்லாம் தீர்த்து நாட்டிலே நிரந்தரமான அமைதியும் சுபீட்சமும் நிலைக்க அவருடைய பாதார விந்தங்களை வேண்டுவோமாக.

**வசந்தமண்டப பூசை : காலை 9.30**
**தேரில் ஆரோகணம் : மு.ப 10.30**

சிவப்பிரகாசம் இரத்தினசபாபதி
ஓய்வுபெற்ற அதிபர்,
புங்குடுதீவு-12.

Shanthi 2 in 1
DEVI ENTERPRISES
சாந்தி பத்திகள்
2 in 1
இல.168, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 212 222 8352 / 077 592 7285

தீபம் ரேடர்ஸ்
THEEPAM TRADERS
இல. 50, டாம் வீதி, கொழும்பு-12.
No.-50, Dam Street, Colombo-12.
தொ.பே - 232 6903

S.P.S Agency
Importers, Exporters, General Merchants Commission Agents For Local Products
113, 4th Cross Street, Colombo-11
Tel: 326204, Fax : 441 824

அனைத்து வகையான பாதணிகளும் எல்லா அளவிலும் பெற்றுக்கொள்ள
அபிராமி சூ சென்ரர்
Abirami Shoe Centre
155, 156, நவீன சந்தை வெளிப்புறம்,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2858

யாழ்.மண்ணில் சிறந்த பாதணித் தெரிவுகளுக்கு இன்றே நாடுங்கள்.
நாதன்ஸ் சூ பலஸ்
இல. 17, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5211

தேனு ஸ்ரோர்ஸ்
அம்மா கடைச்சந்தி,
11ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

கண்ணன் லொட்ஜ்
6, இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

சாரங்கா
நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD.
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6972

(C/12122)(7.6)

## ஜம் இய்யதுல் உலமாவின் புதிய நிர்வாகிகள் தெரிவு


### வவுனியா மாவட்டத்துக்குரியது

வவுனியா, பெப்.14
அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
வவுனியா மாவட்டத்துக்குரிய பட்டாணிச்சூர், சூடுவெந்த புலவு, செட்டிகுளம், சாளம்பைக் குளம் ஆகிய பிரதேசக் கிளைகளதும் வவுனியா மாவட்டக் கிளையினதும் புதிய நிர்வாகிகள் தெரிவு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அஷ்ஷேக் எஸ்.எம். ஜீனைத் (மதனி) அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் கிளைகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷேக் ஏ.சி.எம்.பளீல் அஷ்ஷேக் அப்துல் வகாப் ஆகியோர் உள்ளடங்கிய குழுவின் மேற்பார்வையின் கீழ் கடந்த 24 ஆம் திகதி வவுனியா நகரப் பள்ளிவாசலில் நடைபெற்றது. இதன் போது அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் வவுனியா மாவட்டக் கிளைக்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர்-அஷ்ஷேக் என். பி.ஜீனைத் (மதனி) பி.ஏ., செயலாளர் -அஷ்ஷேக் எஸ்.எம். ஷிப்லி (மிஸானி) பி.ஏ., பொருளாளர் -அஷ்ஷேக் எம்.நல்பான் (தப்லீகி), உப தலைவர்களாக- அஷ்ஷேக் எஸ்.எச். தாஹிர் (ஹாமி)பி.ஏ., அஷ்ஷேக் எம்.எம்.மஹ்ரூப் (நத்வி), உப செயலாளர் - அஷ்ஷேக் எஸ்.எம்.நளீர் (ஷரபி), உறுப்பினர்களாக அஷ்ஷேக் எஸ். எம்.ஏ.மஜீத் (காஸிமி), அஷ்ஷேக் எம்.எப்.சாதிகீன் (பாரி), அஷ்ஷேக் ரி.எஸ்.சாஜித் (காஸிமி) பி.ஏ., அஷ்ஷேக் எம்.எம்.அல்கர்தீன் (மனாரி), அஷ்ஷேக் எம்.எஸ்.ஜெஸ்மின் (நஜாஹி). அஷ்ஷேக்கே நபீஸ் (நஜாஹி). (க-402)

# தரமுயர்ந்தது மல்லாவி பிரதேச மருத்துவமனை

### ஆதார மருத்துவமனையாக

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பிரதேச மருத்துவமனை ஆதார மருத்துவமனையாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.திலீபன் தெரிவித்தார்.
துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவலை அவர் தெரிவித்தார். மல்லாவி மருத்துவமனை ஆதார மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாக மருத்துவமனையின்வளங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
நட்டாங்கண்டல், துணுக்காய், ஐயன்கன்குளம் ஆகிய மருத்துவமனைகளில் சகல வளங்களும் உள்ள போதிலும் மருத்துவர்கள் பணியில் இல்லாதது பெரும்குறையாகவே உள்ளது. மருத்துவமனைகளுக்கு மருத்துவர்கள் விரும்பியே பணிக்கு வரவேண்டும். மருத்துவர்களைப் பணிக்கு வாருங்கள் என்று வற்புறுத்த முடியாது. மருத்துவர்களின் விருப் பங்களின் அடிப்படையிலேயே அவர்களது சிறப்பான சேவை அமைகிறது. மருத்துவநெருக்கடி உள்ள பகுதிகளுக்கு நடமாடும் மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றோம். மருத்துவர்கள் புதிதாக வருவதற்கான சந்தர்ப்பங்களும் உள்ளன. அதன் போது மருத்துவர்கள் இல் லாத மருத்துவமனைகளுக்கு மருத்துவர்களை நியமிப் பதற்கான வாய்ப்புக்கள் உருவாகும் எனத் தெரிவித்தார். (க-18)



மன்னார் மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலர் சி.எச்.காஞ்சன விமலச்சந்திர வாகனமொன்றில் புகைப் பரிசோதனை விழிப்புணர்வு ஸ்ரிக்கரை ஒட்டுகின்றார்.

## புகைப் பரிசோதனை விழிப்புணர்வு

வாகனங்கள் புகைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி மன்னாரில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.
நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் இது போன்ற நிகழ்வுகளுக்கு வலுச் சேர்க்கும் விழிப்புணர்வு ஒன்று மன்னாரிலும் இடம் பெற்றிருக்கின்றது.
மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அலுவலர் சி.எச்.காஞ்சன விமலசந்திர தலைமையில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு இடம் பெற்றது.
இதன்போது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மன்னார் பஸார் பகுதியில் உள்ள வாகனங்களில் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. (க-56)

## முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை இடம் பெறவுள்ளது.
இந்த 166 ஆவது கருத்தாடல் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண் டபத்தில் கலாநிதி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் மாருதம் இதழ் 14 பற்றிய விமர்சனமும் 16 ஆவது ஆண்டு நிறைவு விழா பற்றிய கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளன. வரவேற்புரையை கவிஞர் த.தனசீலனும் விமர்சன உரையை புதுக்குளம் மகா வித்தியாலய ஆசிரியர் ஆ.லோகேஸ்வரனும் வழங்கவுள்ளனர்.
நன்றியுரையை எழுத்தாளர் செல்வி வ.நந்தீஸ்வரி நிகழ்த்தவுள்ளார். (க-421)

## நெல் கொள்வனவுக்கான நிதிக்குக் கட்டுப்பாடு

### முல்லைத்தீவு அரச அதிபர் விதித்தார்

முல்லைத்தீவு, பெப்.14
முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியை பிற தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடாது என முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட் டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரச செயலகம் மூலம் நிதி வழங்கப்படுகின்றதா என்று கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வழங்குவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.
விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது.
மாந்தை கிழக்கு, துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடந்த ஆண்டு அரச செயலகம் நிதியை வழங்குவதற்குத் தயாராக இருந்த போதிலும் அதனைப் பெற்றுக் கொள்ள அவை ஆர்வம் காட்டவில்லை. இந்த ஆண்டும் நிதியைக் கோரவில்லை.
நாம் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங் கங்களுக்கு நிதி வழங்கினால் எரிபொருள் நிலையத்துக்கோ அல்லது பிற தேவைகளுக்கோ, அந்த நிதியைப் பயன் படுத் தக் கூடாது - என்றார்.

## புதிய கட்டடத் திறப்பு விழா

கிளிநொச்சி, பெப்.14
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் விசேட கல்வி அலகுக்குரிய புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெறவுள்ள திறப்புவிழா நிகழ்வில் வவுனியா பொது மருத்துவமனையின் உள நல வைத்திய நிபுணர் மருத்துவர் கி.சிவதாஸ் முதன்மை விருந்தினராகவும், கிளிநொச்சி பொது மருத்துவமனையின் உளநல மருத்துவர் மா.ஜெயராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-18)

## இடர்களை எதிர்கொள்ளும் மாணவர்கள்

பளை, பெப்.14
பளை மத்திய கல்லூரிக்கு வந்து செல்வதில் மாணவர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
ஏ-9 வீதியில் பயணிக்கும் அரச, தனியார் பஸ்கள் மாணவர்களை ஏற்றிச் செல்லாததால் இந்தச் சிரம நிலை கடந்த பல மாதங்களாக நிலவி வருகின்றது.
பளை மத்திய கல்லூரியைச் சூழவுள்ள மக்கள் மீள்குடியமர்வு மேற் கொள்ளப்பட்ட இத்தாவில் - முகாவில், கிளாலி, இயக்கச்சி, புதுக்காடு, புலோப்பளை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறுசிரமங்களைஎதிர்கொண்டு வருகின்றனர்.
பளை மத்திய கல்லூரியை இலக்காகக் கொண்டு இயக்கச்சியிலிருந்து எழுதுமட்டுவாழ் வரையில் பஸ் சேவையொன்றை நடத்துமாறு மாணவரின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

## தரமுயர்த்தப்படவுள்ளது கிளி. பாரதி வித்தியாலயம்

### வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதியளித்ததாக தகவல்

> பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்று வலயக் கல்விப் பணிப்பாளர் இந்த ஆண்டு 'ஏபி' தரத்துக்கு இந்தப் பாடசாலையைத் தரம் உயர்த்துவதற்கான உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி பாரதி வித்தியாலயம் தரமுயர்த்தப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;
பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்று வலயக் கல்விப் பணிப்பாளர் இந்த ஆண்டு 'ஏபி' தரத்துக்கு இந்தப் பாட சாலையைத் தரம் உயர்த்து வதற்கான உறுதிமொழியை வழங்கியுள்ளார். இந்தப் பாட சாலையில் தற்போது 620 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் ஏ-9 சாலையில் இறங்கி சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலைக்கு வந்துசெல்வதில் இடர் களை எதிர்கொண்டு வருகின் றனர்.
பாரதிபுரம், கிருஷ்ணபுரம், அறிவியல்நகர், மலையாளபுரம், உதயநகர், செல்வாநகர் ஆகிய கிராமங்களை இலக்காகக் கொண்டு குறுந்தூர போக்குவரத்துச் சேவையொன்று நடத்தப்பட வேண்டும் என மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## ஐயன்கன்குளம், அம்பலப்பெருமாள்குளம் புனரமைப்புப் பணிகள்

### இந்த ஆண்டில் இடம்பெறும் என்கிறார் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர்

துணுக்காய், பெப்.14
இந்த ஆண்டு ஐயன்கன்குளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய இரண்டு குளங்களின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன.
இவ்வாறு தெரிவித்தார் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பா.விகர்ணன்.
துணுக்காயிலுள்ள ஐயங்கன் குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய குளங்களின் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருப்பது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் குரல் எழுப்பப்பட்டுள்ளது. பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குளங்கள் புனரமைக்கப்படாமை தொடர்பாக கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் குரல் எழுப்பினர். ஐயன்கன்குளத்தின் கீழ் 952 ஏக்கரிலும், அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 623 ஏக்கரிலும் காலபோகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பகுதிகளில் மீள்குடியமர்வு நடைபெற்ற போதிலும் இந்தக் குளங்களின் புனரமைப்புக்கள் இதுவரை நிறைவுபெறாமலே உள்ளன. இது தொடர்பாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பா.விகர்ணன் கருத்துத் தெரிவிக்கும் போது;
2011 ஆம் ஆண்டு இரு குளங்களின் புனரமைப்புக்கள் தொடங்கப்பட்டன. குளங்களின் புனரமைப்புக்களைப் பொறுத்தவரை ஒரு கட்டத்தில் வேலைகளில் முன்னேற்றம் ஸ்தம்பித்தது. எமது திணைக்களம் நிறைய அழுத்தங்களைக் கடிதமூலமும், கூட்டங்களிலும் வழங்கியிருந்தது. ஆனால் புனரமைப்பு இடம்பெறவில்லை. தற்போது வேலைகளுக்குப் பொறுப்பான 'என்றிப்' திட்டப்பணிப்பாளர் குளங்களின் புனரமைப்புக்களை நிறுத்தியுள்ளார். இனிவரும் காலங்களிலும் குளங்களின் புனரமைப்புக்களை 'என்றிப்' மேற்கொள்ளாது எனத் தெரிவிக்கப்பட்டது - என்றார். (க-18)

# புனர்வாழ்வு பெற்றோர் ஓரங்கட்டப்படும் நிலை

## உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு.பெப்.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிக் குடும்பங்கள் கிராம மட்டத்தில் அதிகாரிகள், உள்ளூர் நிறுவனங்களால் ஓரங்கட்டப்படும் நிலை காணப்படுகிறது.

அவர்களுக்கு வீடு, கிணறு, மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் சிவில் பிரஜைகள் மன்றம் ஆகியவற்றின் தலைவரான வ.கமலதாஸ் தெரிவித்தார்.

அமெரிக்க உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் மற்றும் தற்போது நடைமுறையிலுள்ளதிட்டங்கள் தொடர்பில் ஆராயும் முகமாக மட்டக்களப்புக்கு வருகைதந்த யு.எஸ்.எயிட் நிறுவன அதிகாரிகளுடனான சந்திப்புக்கள் தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்க உதவித் திட்டங்கள் சிறப்பானவை. எனினும் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பங்குதாரர் நிறுவனங்கள் மக்களுக்குப் பொறுப்புச் சொல்லக்கூடிய தகுதியை உடையவர்களாக இருக்கிறார்களா என்பது முக்கியமானது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மீள்குடியேறிய புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிக் குடும்பங்கள் கிராம மட்டத்தில் அதிகாரிகள், உள்ளூர் நிறுவனங்களால் ஓரங்கட்டப்படும் நிலை காணப்படுகிறது.

மக்கள் சகல இடங்களுக்கும் சுதந்திரமாகச் சென்று வருவதற்குரிய சூழ்நிலை இருக்கிறது.

எனினும் மக்கள் தமது பிரச்சினைகளை, உரிமைகளை உரிய அதிகாரிகளிடம் பேசுவதற்கு தாம் மீண்டும் பழிவாங்கப்படுவோமா என்ற அச்சத்தால் பேசவோ, தெரியப்படுத்தவோ தயங்குகின்றனர்.

இவர்களின் குரலை, உரிமைகளை மதிப்பதன் மூலமே நல்லிணக்கமான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும். அதற்கான உதவித் திட்டங்கள் தேவையாக உள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் நடைமுறைத் திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்கள் நம்பிக்கையைக் கட்டிஎழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கிழக்கில் தமிழ் இனம் வேறொரு பேரினவாதத்துக்குள் அகப்பட்டு விடுவோமா என்ற அச்சம் வளர்ந்து வருகிறது. எனவே மக்களை ஸ்திரப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

வெளிநாடுகள் இலங்கை அரசின்மீது விதிக்கின்ற, கொடுக்கின்ற கெடுபிடிகளால் இலங்கைக்குக் கிட்ட வேண்டிய சுற்றுலாத்துறை வருமானம் முடங்கிப் போயுள்ளது.

அமெரிக்க உதவித்திட்டத்தின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் வீணடிக்கப்படக்கூடாது.

இலங்கை அரசின் மீது எடுக்கப்படுகின்ற மனித உரிமை மீறல் பிரச்சினைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மக்களுக்கு பொருளாதார வீழ்ச்சியைக் கொண்டு வரக்கூடாது, மாறாக நல்லிணக்கம், சமாதானம், நல்லாட்சி போன்றவற்றை வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும்-என்றார். (ச)



ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள்

# ஆழ்கடல் மீன்பிடி மீண்டும் ஆரம்பம்

அம்பாறை.பெப்.14

அம்பாறை, கல்முனைப் பிரதேசத்தில் கடந்த இரு மாதகாலமாக ஸ்தம்பிதமடைந்திருந்த ஆழ்கடல் மீன்பிடித் தொழில் தற்பொழுது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கடற்கொந்தளிப்பு , காலநிலை சீர்கேடு போன்ற காரணங்களால் கடந்த டிசெம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் தடைப்பட்டிருந்தது.

இந்தக் காலப்பகுதியில் மீனவர்கள் தமது படகுகளின் பாதுகாப்புக் கருதி அவற்றை ஒலுவில் மற்றும் வாழைச்சேனை போன்ற படகுத் துறைமுக வசதியுள்ள இடங்களுக்கு கொண்டு சென்றதுடன் சிலர் தமது படகுகளை தத்தமது பிரதேசங்களிலேயே கரைகளில் இழுத்தும் வைத்திருந்தனர்.

கல்முனைப் பிரதேசத்தில் தற்போது ஆழ்கடல் மீன்பிடித் தொழில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இங்கு மீன்பிடி மிகவும் மந்தமான நிலையிலேயே இருந்து வருகின்றது.

ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் தமக்கு எந்தவொரு நிவாரண வசதிகளும் கிடைக்கவில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ச)

# இரு தமிழ் நூல்களின் அறிமுக விழா நாளை

வாய்க்கால் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் மீரா பாரதி எழுதிய பிரஞ்ஞை மற்றும், மரணம் இழப்பு மலர்தல் ஆகிய இரு தமிழ் நூல்களின் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கவிஞர் அர சையூர் மேராவின் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மனநல வைத்தியர் த.கடம்பநாதன், கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவி திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், இராஜரட்டை பல்கலைக்கழக உபபதிவாளர் மன்சூர் ஏ.காதர், பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் கதை சொல் செயற்பாட்டாளர் அருள். கருணா ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இந்தஇருநூல்களும்ஏற்கெனவே பிரிட்டன் மற்றும் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ள இந்தநிலையில் தற்போது மட்டக்களப்பில் முதன் முறையாக நாளை அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளன.

சமூக ஆய்வு சார்ந்த இந்த இரு நூல்களும் இன்றைய சூழலில் மிக முக்கியமான வரவாகப் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



மட்டக்களப்பு.படுவான்கரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் அறுவடைஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஓட்டோ-லொறி மோதி ஒருவர் படு காயம்

மட்டக்களப்பு ,களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவாஞ்சிகுடி பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் ஓட்டோ வொன்றும், லொறி ஒன்றும் மோதிக்கொண்டதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த நபர் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

முதலாம் வருட **கலைத்தேர்வு** - 2012 முதலாம் அரையாண்டு

முதலாம் வருட **நுண்கலைத்தேர்வு** - 2012 முதலாம் அரையாண்டு

(இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்)

மேற்படி பரீட்சைகளின் AMEA 11010, ACSA 11010 ஆகிய பாடங்கள் கீழே குறிப்பிட்ட திகதியில் நடைபெறும்.

| திகதி | நேரம் | பரீட்சை மண்டபம் | பாடம் |
|---|---|---|---|
| 22.02.2014 சனிக்கிழமை | 9.00 a.m - 11.00 a.m | கனகசபாபதி மண்டபம் மகேஸ்வரன் மண்டபம்- விஞ்ஞானபீடம் புதிய கலைப்பீட மண்டப இலக்கம் 410 & 415 | AMEA 11010 - முகாமைத்துவமும் முயற்சியாண்மைத் திறன்களும் (கலைப்பீட மாணவர்கள்) |
| | | இராமநாதன் மண்டபம் | AMEA 11010 - முகாமைத்துவமும் முயற்சியாண்மைத் திறன்களும் (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) |
| 22.02.2014 சனிக்கிழமை | 1.00 p.m - 4.00 p.m | இராமநாதன் மண்டபம் | ACSA 11010 - சமூக நல்லிணக்கமும் தொடர்பாடலும். (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) |

மேலதிக விவரங்களை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

**பதிவாளர்.**

(சி/12050) (10.6)



**கரைச்சி, புளியம்பொக்கணை**

**நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் விழா**

**சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் -15.02.2014**

மேற்படி நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பங்குனி உத்தரப் பொங்கல்

**எதிர்வரும் 17.03.2014**

அன்று நடைபெறவுள்ளது. இந்தப் பொங்கல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நாளை (15.02.2014) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் கண்டாவளைப் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் தலைவரும், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் அவர்களினதும், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மதிப்பிற்குரிய செ.ஸ்ரீ நிவாசன் அவர்களினதும், இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல திணைக்களத் தலைவர்களும், அரசசார்பற்ற, அரசசார்புள்ள நிறுவனங்களின் தலைவர்களும், பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

-ஆலய பரிபாலனசபை.

(சி/12049)(3.6.4)

# வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு காணி மத்தியஸ்தர் குழுக்கள்

## நீதியமைச்சு விரைவில் அமைக்கும்

கொழும்பு, பெப்ரவரி, 13
வடக்கு-கிழக்கு மாகாணங்களில்காணிவிவகாரங்கள்தொடர்பில் ஏற்படக்கூடிய ஆபத் துக்களைஅடிப்படையாகக்கொண்டு நீதியமைச்சு விசேட காணி மத்தியஸ்தர் குழுவை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.
இதனூடாகக் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க இணக்கப்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கும் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் சட்ட நடைமுறை, நீதியைப் பெறும் வழிமுறைகள் மற்றம் சமூக இணைப்பைப் பலப்படுத்தல் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுப்புதன்கிழமைநடைபெற்றது. லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:



ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சட்ட நடைமுறை, நீதியைப் பெறும் வழிமுறைகள் மற்றும் சமூக இணைப்பைப் பலப்படுத்தல் என்ற நிகழ்சித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் சந்திரஸ்ரீ முத்துக்குமாரண உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நாட்டில் செயற்றிறன் மிக்கதும் பாரபட்சமற்றதும் சகல சமூகத்தினருக்கும் பயன் தரத்தக்கதான நீதி முறை நடைமுறைப்படுத்தப்படுவதில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது.
ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், நாட்டின் சகலரும் நீதியைப் பெறுவதற்கான வழிமுறைகளைசுிவரஅடைந்து கொள்வதற்கான நோக்குடன் நீதியமைச்சு உட்பட்ட புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு, தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு என்பவற்றினூடாகச் சிறப்பான செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது.
சட்ட உதவி வழங்கல், மத்தியஸ்தம் செய்து வைத்தல் என்பவற்றுக்கான ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது.
தேசிய சட்ட உதவிக் கொள்கையை வகுப்பதிலும் ஐ.நா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் உரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது.
2009ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு மக்களுக்குச் சட்ட உதவி சென்றடைவது பற்றிய பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தது. பல குறைபாடுகளும் அந்த ஆய்வின் மூலம் இனங்காணப்பட்டது.
மக்களில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் தரப்பினரான பெண்கள், சிறுவர், சிறுமியர் ஆகியோர் உரிய சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்வது குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
போரின் பின்னரான காணி சம்பந்தமாக எழும் பிரச்சனைகள் மிகவும் முக்கியத்து வம் பெறுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி விவகாரங்கள் தொடர்பில் ஏற்படுத்தக்கூடிய ஆபத்தக்களை அடிப்படையாக கொண்டு நீதியமைச்சு விசேட காணி மத்தியஸ்த குழுவை அமைக்கத் தீர்மானித்துள்ளது.
இதனூடாகக் காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க இணக்கப்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கும். அமைச்சின் இம் முயற்சிக்கு ஒத்துழைப்பதாக ஐ.நா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் இணக்கம் தெரிவித் துள்ளது.
பொறுப்புக் கூறுவது என் பது அரசியல், சட்ட மற்றும் தார் மீக பொறுப்பேற்றல் என்ப வற்றை உள்ளடக்கியுள்ளது. தனி நபர்களுக்கும் நிறுவனங்க ளுக்கும் கடந்த காலங்களில் நிகழ்ந்த செயல்களைப் பொறுத்த வரை மனித உரிமைகள் அடிப்படையில் பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு உள்ளது- என்றார். (த-10)

## வறட்சி தொடர்ந்து நீடித்தால் தண்ணீருக்குத் தட்டுப்பாடு

### *எச்சரிக்கிறது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை*

வறட்சியான காலநிலை தொடர்ந்தும் நீடித்தால் நாடு முழுவதிலும் குடிதண்ணீர் விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் செயலர் அமரானந்த அபேகுண சேகர தெரிவித்தார்.
உணவு சமைத்தல், பருகுதல் உட்பட்ட அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் நீரைப் பயன்படுத்துமாறும், வாகனங்களைக் கழுவுதல், தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு நீரைப் பயன்படுத்துவதை முடிந்த வரை குறைத்துக்கொள்ளுமாறும் அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)




ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலரும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளருமான ஹ ஓ லியாங், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

## போதைப்பொருள் வர்த்தகத்தை தடுக்க விசேட பொலிஸ் குழு

கொழும்பு,பெப்.14
கடல் வழியாக போதைப் பொருள்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் விசேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்படவுள்ளது என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது.
பாடசாலை மாணவர்களுக்கு இடையில் போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ச)

## அதிவேக நெடுஞ்சாலையை திறந்து வைப்பார் மஹிந்த



*கோப்புப்படம்*

கொழும்பு, பெப்.14
காலி, மாத்தறைக்கு இடையிலான அதிவேக நெடுஞ்சாலையும், கொட்டாவ கடுவலவுக்கு இடையிலான அதிவேக நெடுஞ்சாலையும் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளன.
எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி கொட்டாவ- கடுவெல அதிவேக நெடுஞ் சாலையும், அடுத்து 15 ஆம் திகதி காலி-மாத்தறை நெடுஞ்சாலையும் திறந்து வைக்கப்படவுள்ளன.
இரண்டு அதிவேக நெடுஞ்சாலைகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைக்கவுள்ளார். (ச)

## *பத்திரிகைச் சுதந்திரச் சுட்டியில் 165 ஆவது இடத்தில் இலங்கை*

*கொழும்பு.பெப்.14*
*உலக பத்திரிகை சுதந்திர சுட்டியில் இலங்கை 165 ஆவது இடத்தில் இருப்பதாக 2014 ஆம் ஆண்டு உலக பத்திரிகை சுதந்திர சுட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*
*பின்லாந்து தொடர்ந்து நான்காவது தடவையாகவும் முதலிடத்தில் இருக்கின்றது என்று அந்த சுட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 180 நாடுகளை உள்ளடக்கிய இந்த உலக பத்திரிகைச் சுட்டியில், இந்தியா 140 ஆவது இடத்திலும், சீனா மற்றும் பாகிஸ்தான் முறையே 175ஆவது மற்றும் 158 ஆவது இடத்தில் உள்ளன. (ச)*

## பாவனைக்கு உதவாத குழந்தை உணவு பைக்கற்றுக்கள்

கொழும்பு,பெப்.14
பங்களாதேஷிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மனித பாவனைக்கு உதவாத குழந்தைகளுக்கான உணவு பைக்கற்றுக்களை நுகர்வோர் பாது காப்பு அதிகார சபையின் அதி காரிகள் கைப்பற்றியுள்ளனர்.
கடுவெல, ஹன்வெல வீதியில் அமைந்துள்ள உணவுப் பொருள்களைப் பொதி செய்யும் நிறு வனமொன்றிலிருந்தே விற்ப னைக்காக புதிதாக பொதி செய்யப்பட்டிருந்த குழந்தைகளுக்கான உடன் உணவு பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
இந்த உணவுப் பைக்கற்றுக்கள் குழந்தைகளின் பாவனைக்குச் சிறிதும் தரமற்றவை என்று சுற்றி வளைப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். (ச)

## வெளிநாட்டிலிருந்து உர இறக்குமதியை குறைக்கத் திட்டம்

### ஆராய்கிறது அரசு

கொழும்பு.பெப்.14
உரம் கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் வெளிநாடுகளுக்கு வழங்கும் 20,000 கோடி ரூபா நிதியை மீதப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை அரசு ஆரம்பிக்கவுள்ளது.
அதற்கிணங்க தற்போது தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் ஆகியவற்றுக்காக மட்டும் உற்பத்தி செய்யப்படும் இலங்கை பொஸ்பேட் நிறுவ னத்தின் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அரசவளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் தயா சிறித திசேரா தெரிவித்தார்.
நெல் உற்பத்திக்காக தேவைப்படும் சகல உர வகைகளையும் போதுமான அளவில் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்பார்ப்பு இந்தத்திட்டத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.
நமது நாட்டுக்குப் பொருத்தமான உரத்தை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான ஆயத்தங்களை தற்போது இலங்கை பொஸ்பேக் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.
இதன் மூலம் நாட்டுக்கு 20 பில்லியன் ரூபா மீதப்படும் என்று அவர் கூறினார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எல்லாம் வெறும் வாய்ச் சொற்களில்; செயலில் மேலுயரும் போக்கில்லையே!

வடமாகாணத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது. உகந்த தீர்வுகளை முன்வைப்பதற்கு அரசு எப்போதும் தயார் நிலையிலேயே உள்ளது-என்று அதன் சார்பில் மூத்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிவித்திருக்கிறார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் பயன்படுத்தும் ஒரு துருப்புச் சீட்டாகவே வடமாகாண சபை தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இலங்கையில் மழை பெய்கிறது என்பதற்காக அமெரிக்காவில் இருந்து குடைபிடிக்க இயலாது-

அரசாங்கம் என்ற ரீதியில், பேச்சு நடத்தி, சிறந்த தீர்வுகளை எட்ட இயலும். அரசோடு பேச்சு நடத்துவதற்கு வடக்கு மாகாண சபை தயாராக இல்லையெனில், பாதிப்பு அதற்குத்தான் என்பதனை, அதன் உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்-

அதனைப் புரிந்து கொள்ளாமல், வடக்கு மாகாணசபை செயற்படுமாயின் அதற்கே பல பாதிப்புகள் சென்று சேரும்-என்றவாறு மூத்த அமைச்சர் நீலிக் கண்ணீர் வடித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே அமைச்சர் மிக நீளமான, மேற்போந்த புத்திமதிகளை அடுக்கி இருக்கிறார்.

இலங்கையில் மழை பெய்யும் போது அமெரிக்காவில் இருந்து குடை பிடித்தால் பயன் கிடைக்குமா? மழையில் அகப்பட்டவரை காப்பாற்ற முடியாது-என்று கூறிப் பெரும் கிண்டலும் அடித்துள்ளார் அமைச்சர் அவர்கள்.

அப்பா (அரசாங்கம்) இருக்கும் போது, சித்தப்பா (புலம்பெயர் தமிழர்கள்) எதற்கு என்று கிண்டலாகக் கேட்ட அமைச்சர், வடக்கு மாகாண சபைக்கு என்னென்ன ஆட்சிசார் உரிமைகளை வழங்குவதற்கு அரசு தயாராக உள்ளது என்று வெளிப்படுத்தவில்லை. பூடகமாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு மாகாண சபைக்கு (சுமார்) இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர் இலங்கை அரசு தேர்தல் நடத்தியதும்-

அதற்குப் பிரதான மறைமுகக் காரணியாக இந்தியா செயற்பட்டது என்பதும்-மிக வெளிப்படையானதாகும்.

பெரும் பிகு பண்ணியே கொழும்பு அரசு வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியது என்பதும் வெள்ளிடை மலை. வடக்கின் முதல்வர் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தொட்டுக்காட்டி இருந்தார்.

வடமாகாண சபையில் நிலவும் முக்கிய அதிகாரிகள் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களை நியமிப்பது, சபைக்குத் தேவையான நிதிவளத்துக்கு ஏற்பாடு செய்தல், அரசமைப்புக்கு அமைவாக மாகாண சபைக்கு உள்ள அதிகாரங்களை முழு அளவில் பயன்படுத்தத் தூண்டி அதற்கு வகை செய்தல், போன்றவை குறித்து-

ஜனாதிபதிக்கும் முதலமைச்சருக்கும் இடையில் கடந்த மாத முற்பகுதியில் நடைபெற்ற சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் அவற்றில் எவையும் முளைவிட்டு மேல் எழுவதற்கான செயல் வடிவங்கள் மிக மந்தநிலையில் உள்ளன.

மேலும், கடந்த மாதம் நடைபெற்ற, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைத் திறப்பு விழாவில்-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், வடக்கில் உள்ள அதீத இராணுவப் பிரசன்னத்தால் மக்களின் சுயகௌரவம் பாதிப்புறுவது, இராணுவப் பிரசன்னத்தை குறைப்பதற்கு காலவரையறை விதிக்கப்படுவதன் அவசியம், நாட்டைப் பிரிவினைக்கு உட்படாமல் தவிர்ப்பதற்கு, தமிழர் பிரதேசங்களுக்கு வேண்டிய அதிகாரங்களைப் பகிர்ந்து அளித்தல் போன்ற விடயங்களை-வடக்கின் முதலமைச்சர் வலியுறுத்தி இருந்தார்.

எனினும் அவை குறித்து அரச தரப்பில் இருந்து எதுவும் இதுவரை முளைகட்டவில்லை.

அடுத்த மாதத்தில் -


ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட உள்ள பிரேரணையை நீர்க்கச் செய்வது தொடர்பாகவே அரச தரப்பு "ஓடி ஆடித்" திரிகிறது.

அரசின் இந்தப் போக்கு, எந்த வகையிலும் நாட்டில் இன நல்லிணக்கத்தை உருவாக்கவோ, இனங்களிடையே சமாதான சகவாழ்வைத் தோற்றுவிக்கவோ உதவாது. அதனால் பல எதிர்மறையான (Negative) பலாபலன்களே உயர்ந்து எழும். இந்த ஆபத்துக் குறித்து ஆட்சியாளர் முன்கூட்டியே சிந்தித்து உணரக்கூடாதா?

# மலடியாய் இருந்...

## காணாமற்போன பிள்ளையைத்...

தி.ராஜ்



நாய்களின் குரைப்பு வர வர அதிகமாகியது. அதிகாலை நேரத்து அமைதியைக் குலைத்துக் கொண்டு இந்தக் குரைப்புச் சத்தங்கள் பலமாக இருந்தன. இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் யாழ். குடாநாடு விழுங்கப்பட்ட காலத்தின் ஆரம்பங்களில் இவ்வாறான நாய்க் குரைப்புக்கள் சாதாரணமானவை. இந்த நாய்க் குரைப்புக்கள் மக்களின் ஈரக்குலைகளையே நடுங்க வைக்கும். அதிகாலைகளில் இந்தக் குரைப்புக்கள் பலமானால், அன்றைய தினம் 'ரவுண்டப்' (சுற்றிவளைப்பு) என்ற முடிவுக்கு வரவேண்டியதுதான். 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரையில் இந்தகைய சுற்றிவளைப்புகள் மிகமிகச் சாதாரணமானவை. சுற்றிவளைப்புகளுக்குப் பின்னர் கூட்டிச் செல்லப்பட்ட இளைஞர்கள் பலருக்குப் பின்னர் என்ன நடந்தது என்று தெரியாமலே போயிருந்தது. அவர்களைப் பிடித்துக் கொண்டு போன இராணுவத்தினர் அது பற்றித் தமக்கு ஏதும் தெரியாது என்று அவர்களது பெற்றோர் உறவினர்களிடம் கைவிரித்திருந்தனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரைக்கும் தெரியவில்லை. உறவினர்கள் இன்னும் காத்திருக்கிறார்கள்.

### முதல் பருவம்

74 வயதான சிவகுருவும் தனது பிள்ளைக்காக 18 வருடங்களாக காத்திருக்கின்றார். நாவற்குழியைச் சேர்ந்த சிவகுருவின் மகன், இலங்கை இராணுவத்தின் சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் வீடு திரும்பி வரவில்லை.

தலை நரைத்து, நடை தளர்ந்து தள்ளாடும் வயதிலும் தனது மகன் கிடைக்க வேண்டும் என்பதற்காக நடையாய் நடக்கிறார் சிவகுரு. அவர் ஏறி இறங்காத இராணுவ முகாம்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை. கையெடுத்துக் கும்பிடாத இராணுவ அதிகாரிகள் இல்லை. ஆனால் யாரும் இரங்கி அவரது மகன் எங்கே இருக்கிறான் என்று சொல்லக் காணோம்.

தான் சாகுமுன் தன் மகன் வந்து விடுவான் என்ற நம்பிக்கையில் காணாமற்போனோர் தொடர்பான எல்லாப் போராட்டங்களுக்கும் செல்கிறார் சிவகுரு. "என்ர உடம்பில தெம்பு இருக்கும் வரைக்கும் நான் பிள்ளையத் தேடிக்கொண்டுதான் இருப்பன்" என்கிறார். பொதுநலவாய நாடுகளின் அமர்வுகள் நடைபெற்ற வேளையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் கவனத்தை ஈர்ப்பதற்காக யாழ். பொது நூலகத்தின் முன்பாக இடம்பெற்ற போராட்டத்தில் கடைசியாகப் பங்கெடுத்திருந்தார் சிவகுரு.

"அண்டைக்கு காலமையும் நாய்களின்ர குரைப்பு பலமாக இருந்தது. அவன்கள்தான் (இராணுவம்) வாறாங்களெண்டு தெரியும். விடியக் காலமை வீட்டை வந்து தட்டி எழுப்பினது அவங்கள்தான். காலமை 5 மணிக்கு சாய்ச்சுக் கொண்டு போனாங்கள். நாவற்குழி முழுக்க ரவுண்டப். எல்லாரையும் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் வைச்சிருந்தாங்கள்" அந்த நாளின் ஒவ்வொரு மணித்துளிக் காட்சிகளும் அவருக்கு மறந்துபோகவில்லை.

தன் மகனை அவர்கள் என்றைக்குக் கொண்டு போனார்கள் என்ற திகதியை ஒரு தாளில் எழுதிப் பத்திரமாக வைத்திருக்கிறார். எடுத்துப் பிரித்துப் பார்த்துச் சொல்கிறார். "1996 ஒகஸ்ட் 4ஆம் நாள் அது நடந்தது."

"மகன் காணாமற்போனதிலயிருந்து ஒரே யோசினை. ஆதால வருத்தம் வந்து மறதியும் வந்திட்டுது. இவ்வளவு காலமும் கவலையில பெரிசாத் தாடி வளத்துக் கொண்டு திரிஞ்சவர். போனவருசம் கண் ஒப்பிரேஷனுக்காக வெட்டச் சொன்னதால தான் வெட்டினவர்" சிவகுருவின் மனைவி உதவிக்கு வருகிறார்.

"என்ர மகன் தொழிலுக்குப் போயிருந்தவன். அவன்தான் எங்களைப் பார்க்கிறவன். தச்சன்தோப்பிலயிருக்கிற மூத்த மகனோட கடலுக்குப் போனவன். நாவற்குழி முழுக்க ஆமி ரவுண்டப் பண்ணிப் போட்டான். அவன் தொழிலுக்குப் போட்டு வரக்கேதான் அவன ஆமி பிடிச்சது. இவனோட வேற கொஞ்சப் பேரையும் பிடிச்சவங்கள். இவன் ஐ.சியை (இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை) வீட்டை விட்டுட்டுப் போயிட்டான். அதைக் கொண்டு வந்தா விடுறம் எண்டு சொன்னவங்களாம்" தொடர்ந்து பேச சிவகுருவுக்கு மூச்சிரைக்கிறது. இடைவெளிவிட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறார்.

"மூத்த மகன்ர மனுசி இஞ்ச வீட்ட வந்து ஐ.சி. எடுத்துக் கொண்டு போகலாம் என்று நினைச்சு வரவெளிக்கிட்டா இங்காலையும் ரவுண்டப். எங்களைச் சாய்ச்சுக் கொண்டு போய் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் காலமை 5.30 மணியிலயிருந்து பின்னேரம் 4 மணி மட்டும் வைச்சிருந்தாங்கள். தலையாட்டிக்கு முன்னால நிப்பாட்டி ஒவ்வொருதரா விட்டுக் கொண்டிருந்தவங்கள். நான் வீட்டை வந்து தேத்தண்ணிக்கு தண்ணி வைச்சுக் கொண்டிருக்க மூத்தவன்ர மனுசி வந்து விசயத்தை சொன்னாள். நான் ஐ.சியை எடுத்துக் கொண்டு உடன அங்க போனன். மறவன்புலவு வள்ளியம்மன் கோயிலடியிலதான் பிள்ளையை வச்சிருந்தவங்கள்." ஒரு திரைப்படக் காட்சிகள் போன்று அவர் அந்தச் சம்பவங்களைக் கோர்வையாகச் சொல்கிறார். இடையிடையே ஆழமாக மூச்சிழுத்துக் கொள்கிறார். சில சமயங்களில் சோகத்தில் அப்படியே பேச்சு மூச்சற்று அமர்ந்துவிடுகிறார்.

"நான் ஐ.சியைக் கொண்டுபோய் பிள்ளையிட்ட குடுத்திட்டன். ஆனாலும் ஆமிக்காரர் அவனை விடேல்லை. அவங்களுக்குநல்ல வெறி. அவங்கள் என்னையே அடிக்க வந்திட்டாங்கள். எனக்குச் சிங்களமும் தெரியாததால் ஒண்டும் செய்யேலாம போட்டுது. நான் ஐ.சியைக் காட்டியாச்சுத்தானே பிள்ளையை விடுங்கோவன் என்று சொல்ல, அவங்கள் அதைக் கேக்கிற மாதிரி இல்லை. விசாரணை முடிச்சுட்டு விடுறம் எண்டாங்கள்.

"என்னைக் கலைச்சாங்கள். ஆனா நான் போகேல்ல. கிட்ட நிண்டா அடிப்பாங்கள் எண்ட பயத்தில தள்ளி நிண்டன். நான் பாத்துக் கொண்டு நிக்க - என்ர கண் ணுக்கு முன்னால - என்ர பிள்ளையை அவங்கட பவள் வாகனத்தில் ஏத்திக் கொண்டு சாவகச்சேரி பக்கமாகப் போனாங்கள்." நீண்ட பெருமூச்சுடன் அமைதியாகிறார். 18 வருடங்களாக இதே கதையை கேட்பவர்கள் எல்லோரிடமும் இராணுவ அதிகாரிகளிடமும் சிவில் அதிகாரிகளிடமும் திரும்பத் திரும்ப ஒப்புவித்தபடி பிள்ளைக்காகத் தவம் கிடக்கிறார் சிவகுரு. எப்படியும் தன் பிள்ளை தன்னிடம் வந்துவிடுவான் என்று நம்புகிறார். காணாமற்போனோர் தொடர்பில் எங்கு பதிவுகள் நடந்தாலும் தவறாது சென்று பதிகிறார். பதிவுகளை மேற்கொண்டதற்கான ஆதாரங்களைப் பெரியதொரு கட்டாக வைத்திருக்கின்றார்.

1995ஆம் ஆண்டு யாழ். குடாநாடு இராணுவத்தினரின் பிடியில் வந்த பின்னர் இடம்பெற்ற காணாமற்போதல்களின் முதல் கட்டம் இது. இந்தக் காலப்பகுதியில் 600 முதல் 800 வரையான இளைஞர்களும் இளம் பெண்களும் காணாமற்போயிருந்தார்கள் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவில் பதிவாகியிருக்கிறது.

இவ்வாறு காணாமற்போனவர்களில் பலர் கொலைசெய்யப்பட்டு செம்மணி வெளியில் புதைக்கப்பட்டார்கள் என்று கிரிஷாந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கோப்ரல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார். அதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நீதி விசாரணைகள் பின்னர் அப்படியே கிடப்பில் போடப்பட்டன.

### இரண்டாம் பருவம்

சமாதானத்திற்கு சாவுமணியடித்து மீளவும் போர் அரங்கேறத் தொடங்கியிருந்தது 2006இல். அன்று தொடக்கம் 2009 வரை காணாமற்போதல்களின் இரண்டாம் கட்டம் வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் ஆரம்பமாயிற்று.

முதல் பருவத்தில் தன் மகனை இராணுவத்தினரிடம் பிடிகொடுத்துவிட்டு அவனுக்காக இன்னும் காத்திருக்கும் சிவகுமாரைப் போன்றே இரண்டாவது பருவத்தில் தன் பிள்ளையை வெள்ளை வானிடம் பறிகொடுத்துவிட்டு 7 வருடங்களாகத் தன் மகனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் ஈஸ்வரி. 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி இரவு அவரது மகன்

# ந்திருக்கலாம்

## தேடும் தாயின் சோகம்

கடத்தப்பட்டான். நாவற்குழி சித்தி விநாயகர் கோயிலடிக்குப் பக்கத்தில் இருந்தது அவர்களின் வீடு. "அண்டைக்கு இரவு வான் சத்தம் கேட்டது. வீட்டுக்கிட்ட வான் வந்து நிண்டவுடனேயே என்ர மகனும், மருமகளும் பயந்து போச்சுதுகள். சாமியறைக்குள்ள போய் ஒளிஞ்சிட்டுதுகள். வீட்டை வந்து கதவை தட்டினாங்கள். பயத்தில ஒருத்தரும் திறக்கேல்ல. வீட்டுக் கதவை உடையிற மாதிரி அடிச்சாங்கள். கொஞ்சப் பேர் வீட்டுக்கு மேல ஏறி ஓட்டை உடைச்சு லைற் அடிச்சுப் பார்த்தாங்கள். பிள்ளை அறையுக்கை இருக்கிறதைக் கண்டு பிடிச்சிட்டாங்கள். கதவை உடைச்சுக் கொண்டு உள்ளுக்கு வந்து வேலியில இருந்த பூவரசங் கட்டையைப் பிடுங்கி அடிஅடியெண்டு அடிச்சாங்கள். என்ர கண்ணுக்கு முன்னாலயே கனபேர் நிண்டு கொண்டு மாறி மாறி அடிச்சாங்கள். ரத்தம் வரவர அடிச்சுப் போட்டுத்தான் வானில ஏத்தினவங்கள்." ஈஸ்வரியின் கண்களிலிருந்து இப்போதும் கண்ணீர் ஆறாய்ப் பெருகுகிறது.

எல்லா இடங்களிலும் அவர், இனி கண்ணீரே இல்லை என்று சொல்லுமளவுக்கு அழுது தீர்த்து விட்டார். தனது பிள்ளையை யார் பிடித்துப் போனார்கள் என்பது அவருக்குத் தெரியும். அவர்கள் சிவில் உடையில் இருந்தாலும் பகல் நேரத்தில் சீருடையுடன் திரிபவர்கள் என்பதை அவர் தெளிவாக அடையாளம் சொல்கிறார்.

"சிவில்ல வந்த ஆமியை எங்களுக்குத் தெரியும். நாவற்குழி சந்தி யூனியல்ல இருந்த காம்பில நிக்கிற ஆமி. மகன விடச்சொல்லி அவனிட்ட கெஞ்சினாங்கள். அவன் மகன்ர ஐ.சியை என்னட்ட இருந்து வாங்கிக்கொண்டு விசாரிச்சுப் போட்டு நாளைக்கு விடுறம் எண்டு சொன்னவன்." கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார்.

மறு நாள் நாவற்குழிச் சந்திக்கு அருகில் அமைந்திருந்த இராணுவ முகாமுக்கு அவர் சென்று, முதல்நாள் இரவு சிவில் உடையில் மகனைக் கடத்திச் செல்ல வந்த இராணுவச் சிப்பாயிடம் மகன் எங்கே என்று கேட்டிருக்கிறார். அவர் தெரியாது என்று கைவிரித்துவிட்டார்.

"துவக்காலசுட வந்தவன், எங்களைப் பார்த்து விசர் என்று சொன்னவன். நாங்கள் விசருகள் தான். பிள்ளையைப் பெத்துப் போட்டு அலைஞ்சு திரியிற நாங்கள் விசருகள்தான்." கோபமும் ஆதங்கமும் சேர்ந்து கொப்பளிக்கிறது.

"அவன் இயக்கத்துக்குப் போனாலும் கனகாலத்துக்கு முதலே விட்டுட்டு வந்திட்டான். அதுக்குப் பிறகு அவன் வெளிநாட்டில நிண்டவன். தைப் பொங்கலன்று திரும்பிப் போறதுக்கான விஸாவோட தான் வந்திருந்தவன். பொங்கலுக்கு ஒரு கிழமைக்கு முதல்ல என்ர மகனைப் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள்."

சில நிமிட அமைதிக்குப் பின்னர் தொடர்கிறார். "என்ர பிள்ளை காணாமற்போன பிறகு நான் சரியா மனசு உடைஞ்சு போனன். நான் இந்துவாக இருந்தாலும் எனக்கு கிறிஸ்தவ போதனைகள் மனதுக்கு ஆறுதலாக இருப்பதாகப்பட்டது. என்ர பிள்ளையும் திரும்பிவருவான் என்று நம்பிக்கையும் இருந்தது. அப்ப என்ர பிள்ளையை யேசு திருப்பித் தருவார் என்ற நம்பிக்கையில், அவன் வச்சிருந்த மோட்டார் சைக்கிள ஊழியத்துக்கு கொடுத்தன். இந்தக் கதை எப்பிடி சாள்ஸுக்கு (ஈ.பி.டி.பியின் தற்போதைய சாவகச்சேரி அமைப்பாளர்) போய்ச்சுதோ தெரியாது. என்னைக் கூப்பிட்டுக் கேட்டார், *என்ன புலி ஓடின மோட்டர் சைக்கிள் நிற்குதாம்* என்றார். நான் சொன்னன் என்ர பிள்ளை ஓடின மோட்டர் சைக்கிள் அது, எல்லா ஆவணமும் இருக்குது எண்டு. அதுக்கு அவர், மோட்டார் சைக்கிளயும், ஆவணங்களையும் கொண்டரச் சொன்னார். அதுக்குப் பிறகு, என்னட்ட ஒரு கையெழுத்து வாங்கிக் கொண்டு மோட்டர் சைக்கிளையும், ஆவணங்களையும் எடுத்திட்டார்."

எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்று ஈஸ்வரியின் கிளைக்கதையைக் கேட்க மேலும் நெஞ்சுருகுகிறது. இவர்களால் எப்படி இப்படி மிருகத்தனமாக நடக்க முடிந்தது என்று நினைக்கத் தோன்றியது.


"பிள்ளைக்காக நான் அலையாத இடமில்லை. எங்க பதிவு எண்டாலும் உடன போயிடுவம். கிட்டடியில நல்லூரடியில் எங்கயோ பதியினம் என்று சொன்னாங்கள். நான் போனன். கச்சேரியடியில இறங்கி நடந்து போனன். அந்த வெயில் கொதியுக்கையும் போனன். கடைசியில எங்க பதியிறதெண்டே தெரியல. அதில இருந்த குளத்தடியில இருந்த அழுதன். எனக்கு அதுக்கு மேல முடியல. அதுதான் அங்க இருந்து அழுதன். பிள்ளையைப் பெத்து வளக்கிறது, அதுகள் எங்களைப் பிற்காலத்தில் பாக்குங்கள் எண்டுதான். ஆனா இந்த பாழாப்போன நாட்டில வயசு போன நேரத்திலயும் நாங்கள் பிள்ளையளத் தேடி அலைஞ்சு, கண்ட கண்ட இடங்களில் இருந்து அழ வேண்டியிருக்கு."

பிள்ளை இறந்திருந்தால் அழுது ஒப்பாரி வைச்சுக் காரியம் செய்துவிட்டு துக்கம் கொண்டாடி மனதை ஆறுதலப்படுத்திவிட முடியும் என்று சொல்லும் ஈஸ்வரி, "ஆனா பிள்ளை இருக்கா, இல்லையா எண்டு ஒண்டும் தெரியாமல் நான் படுறபாடு கடவுளுக்குக்கூட வரக்கூடாது" என்கிறார்.

"பேசாம மலடியாய் இருந்திருந்திருக்கலாம் எண்டு தோன்றுது" என்றவுடன் மீண்டும் அவரது கண்கள் கலங்குகின்றன. வார்த்தைகள் வெளிவரவில்லை. மௌனம்தான் நீண்ட நேரப் பதிலாக இருக்கின்றது.

காணாமற்போனோரின் உறவுகளின் மனதுகளில் ஆயிரம் ஆயிரம் ரணங்கள். ஆனாலும் அதைத் தீர்ப்பார் யாருமில்லை. ஆணைக்குழுக்கள் இவர்களின் கதைகளை மனிதாபிமானத்துடன் அணுகுமா?

> "அவன் இயக்கத்துக்குப் போனாலும் கனகாலத்துக்கு முதலே விட்டுட்டு வந்திட்டான். அதுக்குப் பிறகு அவன் வெளிநாட்டில நிண்டவன். தைப்பொங்கலன்று திரும்பிப் போறதுக்கான விஸாவோட தான் வந்திருந்தவன். பொங்கலுக்கு ஒரு கிழமைக்கு முதல்ல என்ர மகனைப் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள்."








தி.அமுதன்

காதலர்கள் என்றாலே முதலில் எல்லோர் மனத்திரையிலும் ஓடுவது, மணிக்கணக்கில் தொலைபேசி யில் அரட்டை அடிக்கும் காட்சிகள்தான். அதன் பின்னரே மற்றைய சிந்தனைகள் எல்லாம். ஆளுக்கொரு கைப்பேசி என்று வந்த பின்னர், இந்தப் பேச்சின் நீளமும் நீண்டு செல்கின்றது. காதலர்களைக் கவர்ந்திழுப்பதற்காகவே, அதில் தமது பிழைப்பை ஓட்டுவதற்காக, தொலைபேசி நிறுவனங்களும் பல்வேறு பகேஜ்களையும் அறிமுகப்படுத்தி வைத் திருக்கின்றன. அதிலும் தொலைபேசி நிறு வனங்களுக்குள் போட்டி வேறு.

மணிக்கணக்கில் காதலர்கள் என்னதான் பேசிக் கொள்கின்றார்கள். அதுவும் யாருக்கும் கேட்காமல் மெதுவாகப் பேசுகின்றார்கள். பக்கத்தில் நெருங்கியிருந்தாலும், கதைப்பதை கடுகளவும் கேட்க முடியாது. சில வேளைகளில் உண்மையாகவே பேசுகின்றார்களா என்ற சந்தேகம் வேறு வருமளவுக்கு, மெதுவாகப் பேசுவார்கள்.

சாதாரணமாக சத்தமாகக் கதைப்பார்கள். ஆனால் காதல் என்று வந்ததும், அதுவும் காதலர் காதலருடனோ காதலியுடனோ பேசும் போது ஓட்ட மெற்றிக்காக மெதுவாகப் பேசத் தொடங்கி விடுவார்கள். காதலில் மெதுவாகப் பேசுவது என்பது எழுதப்படாத விதியாக எல்லாக் காதலர்களாலும் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது. மணிக்கணக்கில் பேசுவது தொடர்பில் காதலர்களிடம் நேரடியாகக் கேட்டால், நாங்கள் நிறைய விடயம் பேசுவோம். அதையெல்லாம் வெளியில் சொல்ல முடியாது என்கின்றனர். அதிலும் அவர்களிடம் விடுத்துக் கேட்டால் சிரிப்பு மட்டும்தான் பதிலாகக் கிடைக்கும்.

இதையும் மீறி ஒரு சில காதலர்கள், தங்களை வெளிக்காட்டக் கூடாதென்ற நிபந்தனையுடன் ஒரு சில விடயங்களை மட்டுமே பகிர்ந்து கொண்டனர். காதலிக்கின்றார்கள், அதுவும் பகிரங்கமாகக் காதலிக்கின்றனர். ஆனால் தாம் காதலர்கள் என்பதை நாங்கள் பகிரங்கப்படுத்தக் கூடாதென்பது அவர்களின் எதிர்பார்ப்பு.

ஒரு நாளில் எத்தனை தடவை தொலை பேசியில் பேசுகின்றார்கள் என்பதை உறுதி யாகச் சொல்ல முடியாதென்கின்றனர். ஒவ்வொரு நாளும் சந்தர்ப்பத்துக்கு ஏற்பமாறும் என்கின்றனர் காதலர்கள். ஆனாலும் ஏழெட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் கதைப்போம் என்கின்றார்கள்.

இதற்கும் மேலதிகமாக எஸ்.எம்.எஸ்களும் அனுப்பப்படுகின்றன. ஒரு நாளைக்குக் குறைந்தது நூறு எஸ்.எம்.எஸ்களாவது பரிமாறப்படும் என்கின்றனர். முன்னரைப் போன்று இல்லாமல் தொழில்நுட்ப வசதி களும் வளர்ந்து செல்வதால், காதலர்களது தொடர்பாடல் வசதிகளும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. பேஸ்புக் மூலம் சற்றிங் செய்வதில் கணிசமான நேரம் செலவு செய்யப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

காதலர்களின் அரட்டைக்கான நேர ஒதுக்கீடு எஸ்.எம்.எஸ், பேஸ்புக் சற்றிங் கிலும் தங்கியிருக்கின்றது. கிட்டத்தட்ட நாள் முழுவதுமே தாம் தொடர்பிலிருப்பதற்கு இவையிரண்டும்தான் துணைபுரிவதாக அவர்கள் சொல்கின்றனர்.

'ஹலோ'வில் ஆரம்பித்து 'பாய்' யில் முடியும் வரையில் ஒவ்வொரு தொலைபேசி உரையாடலும் ஆகக் குறைந்தது பத்து நிமிடங்களாவது எடுக்கும். அந்தப் பத்து நிமிடங்களுக்குள் பேசப்பட்ட விடயங்களே திரும்ப திரும்ப ஒவ்வொரு அழைப்பிலும் பேசப்படுகின்றது.

நான் மற்ற லவ்வேர்ஸ் மாதிரி இல்லை. ஒரு நாளைக்கு பத்து பதினைஞ்சு தடவை கதைப்பன். அவ்வளவு நேரமும் எங்கட லைவ்வைப் பற்றித்தான் கதைப்பன். மற்ற லவ்வேர்ஸ் மாதிரி அரட்டை அடிக்கிறது இல்லை என்று கிட்டத்தட்ட பத்து வருடங்களாக காதலித்துக் கொண்டிருக்கும் 24 வயது காதலன் ஒருவர் சொல்கின்றார்.

ஒவ்வொரு காதலர்களும் தாங்கள் மற்ற லவ்வேர்ஸ் மாதிரிக் கதைப்பதில்லை என்று சொல்கின்றனர். எல்லா லவ்வேர்ஸும் இதையே ஒப்புவிக்கின்றனர். அப்பிடியா னால் கதைப்பது என்ன என்று கேட்டால் நீங்கள் நினைக்கிற மாதிரி ஒன்றுமில்லை என்று சொல்கின்றனர்.

இதைவிட குறித்த காதலனுக்கும் காதலிக் கும் மட்டுமே விளங்கக் கூடியதாக கோர்ட்வேட் வைத்திருக்கின்றனர். 'ஆமை வருகின்றது' என்று ஒரு கோட்வேட். அப்பிடி யென்றால் அம்மா வருகின்றா அல்லது பக்கத்தில் நிற்கின்றா என்று அர்த்தமாம். இதைப் போன்று பல கோட்வேட்டுக்களைப் பயன்படுத்துகின்றனர்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முதலில் தொலைபேசி அழைப்பு எடுப்பது காதலன் தானாம். காதலி எங்கு நிற்கின்றார் என்று தெரிந்திருக்கும். எடுத்தவுடன் முதல் கேள்வி, என்ன செய்யுறீங்க ? விடயம் தெரிந்து கொண்டும் கதைக்கான ஆரம்பமாக இதைத்தான் பயன் படுத்துகின்றார்கள்.

என்ன செய்யுறீங்கவில் தொடங்கும் கதை கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரத்துக்கு நீடிக்கும். இதில் பெரும்பாலும் ஊர்விடயங் களே அரட்டை அடிக்கப்படும். தங்களைத் தவிர மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதைப் பற்றியே கூடியளவு நேரம் கதைப்பதாகச் சொல்கின்றனர். ஆனால் எடுக் கின்ற ஒவ்வொரு அழைப்பிலும் 'சாப்பிட் டாச்சா' என்ற கேள்வியும், 'ம், அப்புறம்' என்ற வசனங்களையும் பயன்படுத்துவதை காதல் கதைப்பின் அடிப்படையாக வைத்திருக்கின்றார்கள்.

ஏதாவதொரு அலுவல் காரணமாக தொலை பேசி அழைப்பு எடுப்பதென்றால் அது எப்போதாவது ஒருமுறை, அருமையாகத்தான் அழைப்பு எடுக்கின்றார்கள். அவ்வாறு அலுவல் காரணமாக எடுக்கப்படும் அழைப்பு பத்து நிமிடத்துக்கு மேல் நீடிப்பதில்லை.

இந்தத் தொலைபேசி அழைப்பை, காதலனோ அல்லது காதலியோ வேலை ஏதும் இல்லாமல் வெட்டியாக இருக்கும் போதுதான் எடுக்கின்றார்கள். பெரும்பாலும் இரவு நேரங்களிலேயே அழைப்பு எடுப்பதை இருவரும் விரும்புகின்றனர். வீட்டில் இருந் தாலும், கணினி பார்ப்பது போல், படிப்பது போல், புத்தகம் வாசிப்பதைப் போல் இருந்து கொண்டுதான் கதைப்பார்களாம். 'குட்மோர்னிங்'கில் தொடங்கும் எஸ்.எம்.எஸ், 'குட்நைட்'டில் முடியும். இதற்கிடையில் ஆகக் குறைந்தது நூறு எஸ்.எம்.எஸ்ஸாவது பரிமாறப்படும். எஸ்.எம்.எஸ் முக்கியமாக தாங்கள் எங்கே போகின்றோம், என்ன செய்கின்றோம், எங்கே நிற்கின்றோம் என்பதுபோன்ற விடயங்கள்தான் பரிமாறப் படுமாம். பெரும்பாலும் அலுவலகத்தில், ரியூசனில் இருக்கும் போது எஸ்.எம்.எஸ்ஸில் தங்கள் உரையாடலைத் தொடர்கின்றனர்.

எல்லாவற்றையும் சொல்லும் காதலர்கள் மணிக்கணக்கில் அரட்டை அடிக்கும் விடயங்களை என்னவென்று குறிப்பிட்டுச் சொல்லக் கூச்சப்படுகின்றனர். ஊர் விட யங்களைத்தான் அரட்டை அடிக்கின்றோம் அல்லது பொதுவாய் கதைக்கின்றோம் என்ற பதிலுக்குள் அந்த ஒன்றரை மணி நேரக் கதைகளையும் மூடி மறைக்கின்றனர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடு பாடு அதிகரிக்கும். மாணவர்களின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.



**இடபம்**: மனக்குழப்பங்கள் விலகித் தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.



**மிதுனம்**: வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள்.



**கடகம்**: அநாவசியப் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். சிறுசிறு ஏமாற்றம் வந்து போகும். வியாபாரத்தில் வேலையாள்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.



**சிங்கம்**: சில காரியங்களை அலைந்து. திரிந்து முடிக்க வேண்டிவரும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.



**கன்னி**: பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்புக் கிடைக்கும்.



**துலாம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.



**விருச்சிகம்**: புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு. மரியாதை கூடும்.



**தனுசு**: வேலைச்சுமை இருந்துகொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். அடுத்தவர்களை குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். எதிர்மறை எண்ணங்கள் வரக்கூடும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.



**மகரம்**: பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து விட்டுச் சேமிக்கத் தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**கும்பம்**: நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோபம் குறையும்.



**மீனம்**: மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாகச் செயற்பட்டுப் பெறுவீர்கள். தாயாரின் உடல்நிலை சீராக அமையும்.

## நாளை

**மாசி-03 சனிக்கிழமை | 15.02.2014**

திதி: பிரதமை முழுவதும்
நட்சத்திரம்: மகம்
மு.இ.04.10 வரை

சுபநேரம்: 03.33-05.03 வரை
இராகுகாலம்:.09.33-11.03 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து... பக்தி நெறி



ஏதோ ஒரு சில சமயங்கள் தவிர, அநேகமாக எல்லாச் சமயங்களும் உருவக் கடவுளைப் பற்றிய கருத்தையே வழங்கி வந்துள்ளன. புத்த, சமண மதங்கள் நீங்கலாக, உலகிலுள்ள ஏனைய மதங்கள் அனைத்தும் உருவக் கடவுளைப் பற்றிய கருத்தைப் பெற்றுள்ளன போலும் ! இத்துடன், இறை அன்பும் வழிபாடும் பற்றிய கருத்தும் இயல்பாகவே எழுகின்றது. பௌத்தரும் சமணரும் உருவக் கடவுளைப் பற்றிய கருத்தைப் பெறாதவராயினும், ஏனையோர் கடவுளை வணங்குவது போன்றே, சற்றும் தவறாது அதே முறையிலே தம் சமயங்களை நிறுவிய சமயச் சான்றோர்களை அவர்களும் வழிபடுகின்றனர். மனிதனிடமிருந்து பெறும் அன்பை இறைவனுக்குத் திரும்பச் செலுத்தவல்ல உயர்ந்த மாமனிதருக்கு, அன்பையும் வணக்கத்தையும் செலுத்தலாகிய கருத்து உலகத்துக்குப் பொதுவானது. பற்பல சமயங்களில் இவ்வன்பும் பக்தியும் வெவ்வேறு நிலைகளில், பலவகை அளவுகளில் வெளிப்படுகின்றன. மிகத் தாழ்ந்தது புற வழி பாடு என்னும் நிலை அந்நிலையில் சூக்குமமான அருவக் கருத்துக்கள் கிட்டத்தட்ட எழவொண்ணாதனவாகின்றன. அவை மிகத் தாழ்ந்த நிலத்தை நோக்கிக் கீழே இழுக்கப்பட்டு உருவமாகப் பரிணமிக்கின்றன. இந்நிலையில் வடிவங்களும் அவற்றோடு பலவகைக் குறிகளும் தோன்றுகின்றன. நுண்ணிய கருத்துக்களை எண்ணங்கள் வாயிலாகவோ, குறிகள் வாயிலாகவோ பற்றுதற்கு மனிதன் முயலுவதை உலக வரலாறு முழுவதிலும் காண்கிறோம். சமயத்தின் புறத்தோற்றங் கள் யாவும் – மணிகள், இசை, வழி பாடு. நூல்கள், சிலைகள் என்பன இத் தலைப்பின் கீழ் அமைகின்றன. புறக் கரணங்களைத் தூண்டும் எதுவும் – உருவமற்றதற்கு உருவமளிக்க மனிதனுக்குத் துணை செய்யும் எதுவும், கடைப்பிடிக்கப்பட்டு வழிபாட்டுக் குரியதாகிறது. எல்லாக் குறிகளையும், வழிபாடுகளையும் எதிர்த்துப் போர் புரிந்துள்ள சீர்திருத்தக்காரர்கள் ஒவ்வொரு மதத்திலும் இடையிடையே இருந்து வந்துள்ளனர். ஆனால், அவர்களது எதிர்ப்பு வீணேயாயிற்று. ஏனெனில் மனிதன் இன்றுள்ள நிலையில் இருக் கும்வரை பெரும்பாலோர்க்கு, பற்றி நிற் பதற்கென ஏதேனும் ஓர் உருவம், தங்கள் கருத்துக்கு மையமான ஏதாவது பொருள் , தங்கள் எண் ணங்கள் அனைத்துக்கும் மைய மாய் அமையும் ஏதோ ஒன்று தேவைப்படுகிறது. முகம்மதியரும் பிராட்டஸ்டண்டுகளும் செய்த பெரு முயற்சிகள் எல்லாம் வழிபாடு களை ஒழித்தலாகிய ஒரே முடிவை நோக்கிச் செலுத்தப்பட்டிருப்பினும், அவர்களுக்குள்ளும் வழிபாடுகள் புகுந்திருப்பதைக் காண் கிறோம். அவற்றை வெளியேற்றல் இயலாது. நீண்ட காலமாகப் போராட்டத்திற்குப் பின், பொது மக்கள் ஒரு குறியை மாற்றி வேறொன்றைப் பற்றுகிறார்கள்.

# நாஜி கால ஓவியங்கள் கண்டுபிடிப்பு



கண்டுபிடிக்கப்பட்ட நாஜி கால ஓவியங்கள்

ஜேர்மனியில் நாஜி கால கலைப்படைப்புகளில் 60 ஓவியங்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சி நடைபெற்று வந்த போது, 1930- 40 ஆண்டு காலகட்டத்தில்ஹில்டிபிராண்ட் குர்லிட் என்பவர் கலைப் படைப்புகளை விற்பனை செய்து வந்தார்.
அப்போது அரச அதிகாரி கள், யூதர்களிடமிருந்து திருடிய மற்றும் சிதைந்ததாக கருதிய ஓவியங்களை இவரிடம் விற்பனைக்குக் கொடுத்துள்ளனர்.
ஆனால் காலப்போக்கில் விற்பனையாகாமல் அவரிடமே இருந்த இவ்வோவியங்கள் தற்போது இவரது மகன் கோர்னிலியஸ் குர்லிட் வசித்துவரும் மியூனிச் வீட்டில் இருப்பது கலைப் பொருள் முதலீட்டாளர்களின் கவனத்துக்கு வந்தது.
இதனைத் தொடர்ந்து ஆஸ்திரியாவின் சால்ஸ்பர்க் வீட்டில் பிக்காசோ, ரெனோயர், மோனெட் போன்ற பழம்பெரும் ஓவியர்களின் 60 கலைப்படைப்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கோர்னிலியசின் தகவல் தொடர்பாளர் ஸ்டீபன் ஹோல்சிங்கர் தெரி வித்துள்ளார்.
இது யூதர்களிடமிருந்து திருடப்பட்ட கலைப்பொருள்களா என ஆய்வு மேற் கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு திருடப்பட்டவையாக இருந்தால் உரியவர்களி டம் கலைப் பொருள்கள் திருப்பிக் கொடுக்கப்படும் என ஜேர்மன் அரசு குறிப்பிட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர்வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | 9 | 3 | | | 8 |
| | 2 | | | | 4 | | | 9 |
| 8 | | | 6 | 5 | | | 3 | |
| | | 8 | | | 6 | 9 | 2 | 3 |
| | | 5 | | 8 | | 1 | | |
| 2 | 3 | 1 | 7 | | | 8 | | |
| | 8 | | | 6 | 7 | | | 5 |
| 9 | | | 1 | | | | 7 | |
| 7 | | | 9 | 2 | | | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 7 | 2 | 6 | 1 | 5 | 8 | 3 |
| 5 | 3 | 1 | 7 | 8 | 4 | 6 | 2 | 9 |
| 2 | 6 | 8 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 |
| 1 | 8 | 9 | 4 | 5 | 7 | 3 | 6 | 2 |
| 4 | 7 | 5 | 3 | 2 | 6 | 1 | 9 | 8 |
| 6 | 2 | 3 | 1 | 9 | 8 | 7 | 5 | 4 |
| 7 | 5 | 2 | 9 | 1 | 3 | 8 | 4 | 6 |
| 8 | 1 | 4 | 6 | 7 | 26 | 9 | 3 | 5 |
| 3 | 9 | 6 | 8 | 4 | 5 | 2 | 7 | 1 |

## பயனர்களுக்கு எச்சரிக்கை விடுத்தது யாகூ

YAHOO!

பிரபல்யமான மின்னஞ்சல் சேவை வழங்குநர்களுள் ஒன்றாகத் திகழும் யாகூ நிறுவனம் தனது பயனர்களுக்கு எச்சரிக்கைக் செய்தி ஒன்றை விடுத்துள்ளது.

அதாவது பயனர்கள் பயன்படுத்தும் மின்னஞ்சல்களின் கடவுச் சொற்களை உடனடியாக மாற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. கடந்த மாதங்களில் யாகூ தளத்தை ஊடுருவும் செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்திருந்த அதே வேளை, தற்போது ஹக்கர்கள் மீண்டும் மின்னஞ்சல் கணக்குகளை ஹக் செய்ய எத்தனித்துக் கொண்டிருப்பதாக தெரிவித்துள் ளது.

இதனால் உங்கள் யாகூ மின்னஞ்சலின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு கைப்பேசிகளுக்கு எம்.எம்.எஸ். மூலமாகவோ அல்லது மாற்று மின்னஞ்சலின் ஊடாகவோ உள் நுழையும்போது எச்சரிக்கைச் செய்தியை பெறும் நோக்கில் தகவல்களை வழங்குமாறு அந்த நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.



## சூரிய சக்தியில் இயங்கும் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் கண்டுபிடிப்பு

**14 வயது மாணவி சாதனை**

அமெரிக்காவின் நியூயோர்க்கைச் சேர்ந்த 14 வயது மாணவி ஒருவர் சூரிய சக்தியில் இயங்கக்கூடிய நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை உருவாக்கியுள்ளார். எந்தவொரு அசுத்த நீரையும் குடிதண்ணீராக மாற்றும் இப் பொறிமுறையைக் கண்டுபிடித்த தீபிகா குரூப் என்ற இந்த மாணவிக்கு அமெரிக்காவின் முதற்தர இளம் விஞ்ஞானி பட்டம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இம் மாணவிக்கு அமெரிக்காவின் டிஸ்கவரி எடியுக்கேசன் (Discovery Education) மற்றும் 3M ஆகிய நிறுவனங்கள் 25,000 அமெரிக்க டொலர்களை வழங்கிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அசுஸ்

## மிகச் சிறிய டெக்ஸ்ரொப் கணினியை அறிமுகப்படுத்துகிறது



மிகவும் சிறிய அளவுடையதும், விண்டோஸ் 8.1 இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டதுமான மினி டெக்ஸ்ரொப் கணி னியை அசுஸ் (Asus) நிறுவனம் அறிமுகம் செய் துள்ளது.

Eee Box EB1037 என்ற வியாபாரக் குறியீட்டைக் கொண்ட இக்கணினி, 2 வோட்ஸ் வேகத்தில் செயற்படக்கூடிய Quadd Core Processor, பிரதான நினைவகமாக 8ஜிபி றம் ஆகியவற்றை உள்ளடக்கியுள் ளது.

மேலும் சாதாரண கணினிகளை விடவும் 70 சதவீதம் மின் சக்தி சேமிப்பைக் கொண்ட இக்கணினியில் சேமிப்பு நினைவகமாக 320 ஜிபிஇருந்து 1TB வரை கொள்ளவுடைய வன்தட்டுக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

facebook

## பேஸ்புக்

### ஒரு சமூகநோய்! அதிர்ச்சி தரும் ரிப்போர்ட்

பேஸ்புக் ஒரு சமூகநோய் என சமீபத்தில் ஆய்வு நடத்திய பிரின்ஸ்டன் பல்கலைகழகம் தெரிவித்துள்ளது.

சமூக வலைத்தளங்களில் முன்னணி பெற்றுத் திகழ்கிறது பேஸ்புக், மில்லியன் கணக்கான மக்கள் இதற்கு அடிமையாகி உள்ளனர்.

பூஜ்ஜியத்தில் ஆரம்பித்து, கோடிக்கணக்கில் லாபத்தை கொட்டிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் பேஸ்புக் குறித்து பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் ஆய்வொன்றை நடத்தியது. ஆய்வறிக்கையில் பேஸ்புக் ஒரு சமூகநோய் என்றும், 2017 ஆம் ஆண்டுக்குள் 80 சதவீத வாடிக்கையாளர்கள் இதனை விட்டு விலகி விடும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் எப்படி ஒரு நோய் வேகமாகப் பரவிப் பின் தொய்வடைகிறதோ, அதே போல பேஸ்புக்கின் நிலையும் இருக்கும் என்று பல எடுத்துக்காட்டுகளுடன் இந்த ஆய்வு தெரிவிக்கிறது.


டிசெம்பர் 2012 இல் தான் பேஸ்புக் இணையத் தளம் மிக அதிகமான அளவில் புதிய வாடிக்கையாளர்களைப் பெற்றது. தொடர்ந்து சிறிது சிறிதாக வளர்ந்து வருகிறது.

இந்தவளர்ச்சி இன்னமும் ஒருசில ஆண்டுகளே இருக்கும் என்றும், 2017 ஆம் ஆண்டு காலத்தில் பெரும்பாலான நபர்கள் இதனை விட்டு விலகி விடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளது.




## கரப்பான் பூச்சிகளின் மூலம் மின்சாரம்!

### ஜப்பானில் சாதனை




கரப்பான் பூச்சிகளை வைத்து ஜப்பான் பல்கலைக்கழக மாணவர்கள் புதிய சென்சார்களை உருவாக்கியுள்ளனர்.

கரப்பான் பூச்சிக்கு இரு மீசைகள் இருக்கும், அதாவது இவைகளை உணர் உறுப்புகள்(Antennae) என்று அழைக்கின்றனர்.

இதன் மூலம் முன்புறத்தில் ஏதேனும் தடை உள்ளதா என கரப்பான் பூச்சி அறிந்து கொள்ளும்.

இதே போல கரப்பான் பூச்சியின் பின்புறத்தில் வேறு வித உணர் உறுப்புகள்(cerci) உள்ளன. பின்புறத்திலிருந்து தனக்கு ஆபத்து வருகிறதா என்பதை இந்த உறுப்புகள் கண்டறிந்து தெரிவிக்கும்.

இதனைக் கொண்டுஜப்பானின் ஒசாகா பல்கலைக்கழகம் புதுவித சென்சார்களை உருவாக்கியுள்ளது.

இந்த சென்சார்களின் மூலம் மிக எளிதாகத் தகவல்களை பரிமாறிக் கொள்ள முடியும்.

கரப்பான் பூச்சிகளின் முதுகில் சென்சாரும் அதனுடன் 20மி.மீ X 15மி.மீ அளவுக்கு ஒரு ஃப்யூள் செல்லும் இணைக்கப்பட்டிருக்கும்.

இந்த ஃப்யூள் செல் வேலை செய்ய கரப்பான் பூச்சியின் உடலில் ட்ரஹலோஸ்(trehalose) என்னும் திரவம் மற்றும் ஒரு சிறிய ஊசியைச் செலுத்துவார்கள்.

இந்த திரவம் உள்ளே எலக்ட்ரோட்ஸை உருவாக்கும், அதன் மூலம் குளுக்கோஸ் கிடைக்கும்.

இந்த எலக்ட்ரோட்ஸ் மூலம் ஊசி அனோட் காத் தோடாக மாறி நிரந்தர மின்சாரம் கிடைக்கும். இது சென்சாரின் உபயோகத்துக்குவாழ்நாள் முழுவதும்கிடைக்கும். இதற்கு முன்பு சோதனை செய்து பார்த்த போது, ஒவ்வொரு கரப்பான் பூச்சியும் 50.2¼W மின் சாரத்தைத் தந்தனவாம்.

# பாலியல் துஷ்பிரயோக வழக்குகளின் விசாரணைகளில் மிக நீண்ட தாமதம்

## பெண்கள் விவகாரங்களுக்கான அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.14
இலங்கையில் பாலியல் துஷ் பிரயோக வழக்குகள் தொடர்பான விசாரணைகளில் நீண்ட தாமதம் காணப்படுகின்றது.
அமெரிக்கா இலங்கைக்கு உதவ வேண்டும் என்பதிலிருந்து விலகி இருக்க முடியாது. எதனையும் விமர்சனம் செய்வது எனது வழக்கமல்ல.
இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க நிலை யத்தில் கூடியிருந் தவர்களிடம் காணொலி மூல மாகக் கருத்துத் தெரிவித்தார். பெண்கள் விவகாரங்களுக்கான அமெரிக்க அரசின் சிறப் புத் தூதுவரான கத்தரின் ரஸெல்.
சிலர் தமது இலங்கைக்கான வருகை, விமர்சனங்கள் தெரிவிப்பதை நோக்க மாகக் கொண்டுள்ளதென அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். ஆனால் அது தனது நோக்கமாக இருந்ததில்லை என்றும் அவர் தெரிவித்தார். அவரது உரை யைக் கேட்பதற்கு உள்ளூர் பெண் கள் உரிமைக்கான அமைப்பினரும், சிவில் சமூகத்தினரும் கூடியிருந்தனர்.
2009 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா இலங்கைக்கு மனிதாபிமான உதவி களை வழங்கி வருகின்றது. பெண்க ளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதில் அமெரிக்கா உள்ளூர் அமைப் புக்களுடன் இணைந்து பணியாற்றி வரு கின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பெண்கள் நலத்திட்டங்களை வெற்றி கரமாக நிறை வேற்றி வைப்பதற்கென 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.
மேலும் இலங்கைக்கான தமது வருகை யின் போது ஒபாமா நிர்வாகத்தினால் உலகளாவிய ரீதியில் ஊக்கமளிக்கப் படும் சமாதானம், அபிவிருத்தி, பொரு ளாதார வளர்ச்சி ஆகியவற்றைப் பெண் களின் பங்களிப்புடன் மட்டுமே அடைய முடியும் என்ற கருத்தை எடுத்துச் செல்வதும் தமது நோக்கமாக இருந்த தாக அவர் தெரிவித்தார்.
மேலும் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியவிவகாரங்களுக்கான உதவிச்செய லர் நிஷாபிஸ்வால் தெரிவித்த கருத்துக் கள் தொடர்பாகவும் அவர் எடுத்துரைத் தார். இலங்கையில்சட்டம்மற்றும்ஒழுங்கு ஆகியவற்றில் நிலவும் குறைபாடுகள், பாலியல் துஷ்பிரயோக வழக்குகளில் அரச வழக்குத் தொடுநர் தரப்பின் மெத் தனப் போக்கு, வன்புணர்வு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணைகளில் ஏற்படும்நீண்ட தாமதம் என்பவை தொடர்பாகவும் அவர் தமது கருத்துக்களை வெளியிட்டார்.
அத்துடன் இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் கற்பழிப்புச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படு வதாகத் தெரிவித்த அவர் இவற்றைத் தடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமெனவும் தெரி வித்தார்.
கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளும், பெண்கள் உரிமை அமைப்புக்களும் தமது கருத்துக்களை அவரிடம் தெரிவிப்பதற்கான சந்தர்ப் பமும் வழங் கப் பட்டது.
இதில் மோதல்கள் ஓய்ந்த பின்னர் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. மேலும் வடக்கில் இராணுவ மயப்படுத் தலைக் குறைக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட விதவைப் பெண் களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டும். வீட்டுவன்முறைகளிலிருந்து பெண்களை விடுவிக்க வேண்டும் என் பவை குறித்து முக்கியமான கருத்துக் கள் முன் வைக்கப்பட்டன.
திருமதிரஸலின் உத்தேச இலங்கை வரு கைக்கு இலங்கை அரசு அனுமதி மறுத் ததாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்ததும் இதனை இலங் கையின் வெளிவிவகார அமைச்சு மறுத் தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## இன்னிசைக் கச்சேரி

வடமராட்சி, பெப்.14
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச் சிரமத் தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.
இன்னிசைக் கச்சேரியை யாழ். பல்கலைக்கழக நுண்கலைமாணி த.றொபேட் பக்க வாத்தியங்கள் சகிதம் நிகழ்த்துவார். (ந-173)

## நகுலேஸ்வரருக்கு இன்று கொடியேற்றம்

வலி. வடக்கு, பெப்.14
வரலாற்று புகழ்மிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வருடாந்தக் கொடியேற்ற நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
தொடர்ந்து பதினைந்து நாள்கள் நடைபெறும் உற்சவத் தில் தினமும் முற்பகல் 10 மணிக்கு கொடித்தம்ப பூசையும் முற்பகல் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறுவதுடன் மாலைப் பூசைகள் வரிசையில் தினமும் மாலை 5 மணிக்கு கொடித்தம்ப பூசையும், மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளன.
எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், சிவராத்திரி பூசையும் இடம்பெறவுள்ளதுடன், வெள்ளிக்கிழமை 28 ஆம் திகதி கீரிமலை கண்டாங்கி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ந-86)

## கலைப்பாலம் கலை நிகழ்வு

திருமறைக் கலா மன்றமும் முழங்காவில் இரணைமாதா நகர் யோசவ்வாஸ் இளையோர் ஒன்றியமும் இணைந்து நடத்தும் கலைப்பாலம் நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இரணை மாதா நகர் முழங்காவில் செபமாலை மாதா ஆலய முன்றிலில் இடம் பெறவுள்ளது. (ந-23)

## கூட்டம்

தென்மராட்சி, பெப்.14
சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெறும். சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மைவிருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கலந்து கொள்வார். (ந-9)

**LOTUS WEDDING DECORATIONS**
820, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்.
காதலர் தினமான இன்று Original (ஒறிஜினல்) பூக்களால் ஆன மலர்ச்செண்டு (பொக்கே) மற்றும் Rose பூக்கள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் திருமணம், பூப்புனித நீராட்டு விழா என்பவற்றுக்குரிய பூக்களாலான மணவறை மற்றும் ஏனைய விழாக்களுக்கும் Original பூக்களால் அலங்காரம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 077 552 6060
(44717)(2.6.3)

**இரசாயனவியல் Personal Class**
சி.அனோஜன்
BSc (Chem.Sp)
தொடர்பு:
077 078 1451
(44266)(4.6.3)

**காணி விற்பனைக்கு**
Farm School இற்கு அண்மையில் பலாலி வீதியில் ஒரு பரப்புக் காணியும் கோண்டாவில் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் தாயகம் வைத்திய நிலையத்துக்கு முன்பாக 2½ பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளன. (உற்பத்தி, வியாபார நிலையம் அமைக்கப் பொருத்தமானது)
தொடர்பு: 077 703 7058
(44705)(7.6.3)

**தேவை**
உங்கள் வீடுகளில் உள்ள பழைய காகிதாதிகள், புத்தகங்கள், கொப்பிகள் காட்போட், பத்திரிகைகள் முதலானவற்றைப் பணம் தந்து பெற்றுக்கொள்கின்றோம்.
தொடர்பு: 077 812 0190
(44719)(45.6.3)

**நிரந்தர தொழில் தேடுபவரா?**
வவுனியாவில் இயங்கிவரும் எமது சுப்ரீம் மார்க்கெட்டிங் நிறுவனத்திற்கு க.பொ.த.சா.தரம் கல்விகற்ற இருபாலாருக்கும் பயிற்சியுடன் கூடிய நிரந்தர வேலை வாய்ப்பு. பயிற்சி முடிவில் 45,000/= சம்பளத்துடன் டிப்ளோமா சான்றிதழுடன் நீங்கள் விரும்பும் மாவட்டத்தில் நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு நேரில் வரவும்.
(43161)(45.6.3)
தொடர்பு: 071 495 7582, 077 172 8832

**கலைஞர் கௌரவம்**


இடம் : பத்திரகாளி அம்பாள் ஆலயம் சங்கரத்தை
காலம் : நாளை (15.02.2014) சனிக்கிழமை மாசி மக உற்சவம் ந.ப. 12.00 மணி
கௌரவம் பெறும் கலைஞன்
இணுவையூர் K.R. சுந்தரமூர்த்தி அவர்களின் புதல்வன்
**தேவதாஸ்**
அவர்கள்
பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் சூட்டி கௌரவிக்கப்படுவார்
மாசி மக உபயகாரர்கள், வட்டுக்கோட்டை.
(44716)(10.6.3)



**அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி திருக்கோயில்**
**கொடியேற்றம்** - இன்று (14.02.2014) வெள்ளிக்கிழமை
"வளங்கள் பல நிறைந்த தெல்லிநகரின்
உளங்கள் கொள்ளைகொண்ட கீரிமலையில்
மனங்கவர் நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரர்
தினந்தினம் அடியார்க்கருள இன்று கொடியேற்றம்"
அனுசரணை:
**முதலாம் திருவிழா உபயகாரரும் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்.**
(அ/12101)(2-6-3)

**IIS**
**INVITATION**
The Chief Executive Officer and Management of the IIS Group of Institutions Cordially Invite Patrons, Friends and Well Wishers to the
**18th Institute Day & Graduation Ceremony** (C/12045)
at the
Auditorium, HNB Mettro Branch,
177,179, Power House Rd, Jaffna
on
Saturday the 15th February 2014

## UNIVERSITY OF JAFFNA

**FACULTY OF AGRICULTURE**
**ADMISSION OF PUBLIC OFFICERS**
**FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE**
**(2012/2013)**

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2012 / 2013.

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less then 2 years) obtained from any recognized institution.

3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar. Envelope (for Rs. 5.00) not less than 9"x 4" size.

**Date of closing is 14th March 2014.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

**REGISTRAR**
**14.02.2014**
(C/12046)(2.6.3)

# மெய்வன்மைப் போட்டி

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
பாடசாலை அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் கலந்து கொள்வார்.
கௌரவவிருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பௌதிகவியல் கல்விக்கான ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம் கலந்து கொள்வார். பரிசில்களை ஆசிரியையான திருமதி கீதா சத்தியபாலன் வழங்குவார். (க)

★ ★ ★

வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ரேவடி மைதானத் தில் பாடசாலை அதிபர் திருமதி மங்களேஸ் வரி சேது லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் கலந்து கொள்வார். (ந)

★ ★ ★

மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.
அதிபர் கா.கந்தசாமி தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக மருத்துவர் ப.அச்சுதன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் வே.விநாயக மூர்த்தி, தற்போதைய அதிபர் த.அம்பலவாணர் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந-9)

★ ★ ★

வரணி மத்திய கல்லூரியின் இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி அதிபர் க.மங் களேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.
முதன்மை விருந்தினராக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவ குமார், ஓய்வுநிலை நீதிமன்றப் பதிவாளர் க.வாரித் தம்பி ஆகியோர் கலந்து கொள்வர். (ந-122)

★ ★ ★

ஆனைக்கோட்டை உயரப்புலம் குண பாலன் வித்தியாலய முன்னாள்அதிபர்அமரர் சுப்பிரமணியச் செட் டியார் ஞாப கார்த்த வெற்றிக் கிண்ண இல்லமெய் வன்மைப் போட்டி நாளை சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாணிக்கம் பாக்கியம் ஞாபகார்த்த விளையாட்டுஅரங்கில் நடைபெறவுள்ளது.
பாடசாலை உப அதிபர் திருமதி வை.இரட் ணராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந் தராசா, சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி பி.சுப்பிர மணியம் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

★ ★ ★

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை சனிக் கிழமை பி.ப.1.31 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் இ.ஈஸ்வர தாசன் தலைமையில் இடம்பெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவன் என்.மகேந்திரன், சிறப்பு விருந்தினராக பழைய மாண வன் எஸ்.ஜீவரட்ணம், கௌரவ விருந் தினராக யாழ்.போதனா வைத்திய சாலை கணக்காளர், கே. சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-36)

## கலந்துரையாடல்

குருநகர், பெப்.14
குருநகர் பிரதேச வைத்திய சாலையின் அபிவிருத்தி பற் றிய கலந்துரையாடல் இன்று வெள் ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு குருநகர் பிரதேச வைத்தியசாலை யில் நடை பெறவுள்ளது என குருநகர் பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத் திய அதிகாரி மருத்துவர் எஸ்.விம லேந் திரன் அறிவித்துள்ளார்.
குருநகர் பிரதேச வைத்திய சாலையின் வளர்ச்சியில் அக் கறை யுள்ள நலன்விரும்பிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து தமது கருத்துகளை முன்வைக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ந-51)


## சமய விழுமிய நாடகப் போட்டி

தென்மராட்சி, பெப்.14
தென்மராட்சி கல்வி வலய இந்து சமய பாடப் பிரிவினரால் தரம் 6,7 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கிடையிலான சமய விழுமிய நாடகப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இடம்பெறும். (ந-9)

---

இயேசுவே கர்த்தர்

**தேவ மகிமையின் 30ஆவது ஆலய ஆண்டு நிறைவின் நன்றிப்பலி ஆராதனை அழைப்பு**



எமது திருச்சபையின் 30ஆவது ஆண்டு நிறைவில் தேவ நாமத்துக்கே மகிமை செலுத்த உங்களை அன்புடன் அழைக்கின்றோம்

"கர்த்தாவே மாட்சிமையும் வல்லமையும் ஜெயமும் உம்முடையவைகளே.."
1 நாளா 29:11

காலம்: 14.02.2014 நேரம்: மாலை 4.00 மணி
இடம்: 89, பிறவுண் வீதி, கொக்குவில், இலங்கை
கல்வாரி குடும்பம்
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்.

---

"ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலிப்பியர் – 1:21)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**Dr.ஜெ.றொபின்சன்**

அன்னை மடியில்
16.11.1984
ஆண்டவன் அடியில்
15.01.2014

சென்றுவிட்டாயோ எம்மை விட்டு
பரலோகம் சென்று விட்டாயோ
எம் கண்ணீரைத் துடைக்க மீண்டும்
வந்து விட மாட்டாயோ....
உம் ஆத்மசாந்திக்காக
உருகுகிறோம் மெழுகுவர்த்தியாய்
உம் நினைவினில்

உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.
திருகோணமலை. 026 222 6951, 077 726 7422

---

# 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **புவனேஸ்வரி அரியராஜா** (BA)

தோற்றம் 30.09.1941 — மறைவு 14.02.1991

கற்றிட்ட தாயேநின் காதற் கணவரையும்
பெற்றிட்ட மைந்தனையும் பிரிந்து நீ சென்றாலும்
பற்றுடனே கற்றவுந்தன் பள்ளிச் சிறுவரெலாம்
பெற்றிட்ட பெருமையுமோ பேசற் கரிதம்மா...?

அரியராஜா (கணவர்).
ஜெயந்தன் (மகன்).
தாவடி தெற்கு,
கொக்குவில்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**விநாயகமூர்த்தி வினோஜன்**
(பாப்பி)
(மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி)

பிறப்பு 13.01.1987 — இறப்பு 26.02.2013

திதி:14.02.2014

பாதியிலே பரிதவிக்க விட்டு விட்டு
இன்றுடன் நீ சென்று ஒரு வருடம்
ஆகிவிட்டதே
உன் இழப்பை நினைக்கும் போதெல்லாம்
மூச்சு திணறி இதயம் துடிக்க மறுக்கிறதே
என் தெய்வமே வாழ்ந்தது போது மென்றா
விண்ணுலகம் நீ சென்றாய்
வீதியில் செல்பவர்களையெல்லாம்
என் பிள்ளை மாமா என்று கூப்பிடும்
போதெல்லாம்
என் நெஞ்சு வெடிக்குதையா
காலத்துக்கும் கண்ணீர் சிந்த வைத்து விட்டு
காலனிடம் சென்றதேனோ
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சகோதரி. குடும்பத்தினர்.
தோணிக்கல், வவுனியா.
(43155) (3.6.4)

---

# இதய அஞ்சலி





**சின்னத்துரை பரமேஸ்வரி** **சின்னத்துரை சிவனேசன்**

ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும்
குமரன் விளையாட்டுக்கழகத்தினதும்
முன்னாள் தலைவரும், நிலைய உறுப்பினருமான சின்னத்துரை சிவனேசன், அவரது தாயாரான சின்னத்துரை பரமேஸ்வரி ஆகியோரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
இவர்களின் ஆத்மாசாந்தியடைய ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம். (44707)(3.6.4)

ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும்,
குமரன் விளையாட்டுக்கழகமும், கனடா வாழ் நண்பர்களும்.

---

# இதய அஞ்சலி



**சின்னத்துரை பரமேஸ்வரி**

சின்னத்துரை சிவனேசன்,
அவரது தாயாரான
சின்னத்துரை பரமேஸ்வரி
ஆகியோரது மறைவுச்
செய்தி கேட்டு அதிர்ச்சி
அடைந்தோம். அவர்களின்
பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**சின்னத்துரை சிவனேசன்**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்சங்கம்,
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம். (44709) (3.6.4)

## முழு நிலாக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்த ரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குமார சாமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கருத்துரையை 'நீரிழிவுடன் நீடித்த வாழ்வு வாழ்வது எப்படி' என்ற தலைப் பில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் மருத்துவர் தி.சிறீகரன் வழங்குவார். (ந)

★ ★ ★

தென்மராட்சி, பெப்.14

மீசாலை உயர் கலைக் கல்லூரியின் மாசிமாத முழு நிலாக் கருத்தரங்கில் க.பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கலை, வர்த்தக, உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான பாடங் கள் பிரபல பாட வளவாளர்களால் இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப.2 மணி வரைக்கும் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி, முல்லைத் தீவு பிரதேச மாணவர்கள் இலவசமாகப் பங்குபற் றலாம்.

காலை 8.30 மணிக்கு கலைப் பிரிவில் அரசியல் பாடத்தின் அரசறிவியல் குறு வினாக்களும், விவசாய விஞ்ஞானபாடமும், வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கு வணிக நிறுவனங்கள் பற் றியும் பிற்பகல் ஒரு மணிக்கு தகவல் தொடர் பாடல் தொழில்நுட்பபாடமும், உயிரியல்பிரிவில்பௌதி கவியல் பாடத்தில் கடந்த கால பரீட்சை வினாக்கள் மீட்டல் என்பன நடைபெறவுள்ளன. (ந-9)

★ ★ ★

கிளிநொச்சி, பெப்.14

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் முழுநிலா கருத்தரங்கும் சங்கக் கூட்டமும் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் சங்கத் தலைவர் வே. இறை பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு சங்க செயலாண்மைக் கூட்டமும் மாலை 4.30 மணிக்கு கருத்தரங்கும் இடம்பெறும். (ஒ-9)


**பௌதிகவியல், இணைந்த கணிதம் தமிழ்/ஆங்கில மொழிகளில்**

**A/L 2016 A/L 2013 (Repeat)**

பிரபல கல்லூரிகளில் பல ஆண்டுகள் மேற்பிடி பாடங்களை சிறப்பாகக் கற்பித்து மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆங் கில மொழி மூலப் பட்டதாரி ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் மேற்பிடி பாடங்களை இரு மொழிகளிலும் ஏராளமான பயிற்சி களுடன் (30 வருட A/L வினாத்தாள் உட்பட) மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படும்.

**A/L 2014, 2015**

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

வகுப்புக்கள் உடனடியாக ஆரம்பம்.

தொ.பே: 077 242 3400, 077 887 1217

(44723)(3.6.4)



**யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கன்னாகம்**

**இல்ல மெய்வல்லுநர் போட்டி**

காலம் : 15 பெப். 2014 சனி

நேரம் : 1.31 பி.ப

இடம் : கல்லூரி விளையாட்டு மைதானம்

தலைவர்

R. ஈஸ்வரதாஸன் (அதிபர்)

பிரதம விருந்தினர்

N. மகேந்திரன் (OSAகனடா)

சிறப்பு விருந்தினர்கள்

S. ஜீவரட்னம் (OSAகனடா)

K. சுரேஸ்குமார் (கணக்காளர்-யாழ் போதனா வைத்தியசாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்

OSA, SDS, SDC

(சி/12061)(10.6.5)


## நிர்வாகசபை தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.14

வதிரி ஆலங்கட்டை மயான பராமரிப்புச் சபை யின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் தலைவராக இ.உமாபதி கயிலாயநாதன், செயலாளராக கு.சுரேந்திரன், பொருளாளராக க.தவராஜ், உப தலைவராக மு.ச.சுப்பிரமணியம், உப செயலாளராக நா.கண்ணதாசன் நிர்வாக சபை உறுப்பினர்களாக வை.சாந்த லிங்கம், சி.பாலசிங்கம், வீ.மனோரஞ்சிதம், க.கமலேந்திரன், வை.சிவசுப்பிரமணியம், இ.குலேந்திரன், தா.மு.கற்பநாயகம், சு.கனக சிங்கம் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர். (வ-14-35)


**வீடு வாடகைக்கு**

ஓட்டுமடம், மானிப்பாய் வீதியில் நான்குபடுக்கை அறைகள் விசால மான ஹோல் சமையல் அறை என்பன வற்றுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:077 483 7637

(சி/12048)(3.6.4)



**ஸ்ரீ கல்கி தையல் அகம்**

பெண்களுக்கான றெடிமேற் சிமோக்கிங் கவுண் (மொத்த, சில்லறை) வயதடிப் படையில் 300/= 700/= ரூபாய்வரை விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 883 7178

(44720)(3.6.4)


## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.14

யோசப் பாலாவின் உளம் மகிழ நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

திருமறைக் கலாசார மண்டபத்தின் பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் நயப்புரையை மூத்த உள சமூக வளவாளரும் படைப்பாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் வழங்குவார். வெளியீட்டுரையை மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழ் நேசனும் சிறப்புரையை மூத்த பத்திரிகையாளர் ராதையனும் வழங்குவர். (ந-10)

★ ★ ★

கிளிநொச்சி, பெப்.14

ஆசிரியர் ப.கசிறதன் எழுதிய"புலமைஆசான்" என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சிமத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம் பமாக வுள்ளது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சிவலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல்முதன்மைவிருந்தினராகக்கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி அரச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், மருத்துவர் மா.ஜெயராசா, யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரி இணைப் பாளர் பி.தனபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-18-173)

## லூர்த்து அன்னையின் 75 ஆவது ஆண்டு நிறைவுப்பெருவிழா

யாழ்ப்பாணம், பெப்.14

மாதகல் துறைமுகப் பகுதியில் அமையப் பெற்றுள்ள தூயலூர்த்து அன்னையின் 75 ஆவது ஆண்டுநிறைவு யூபிலி பெருவிழா கடந்த 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இதன் திருச்சொரூப தேர்ப் பவனியும் நற் கருணையும் எதிர் வரும் 15 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 6 மணிக்கும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும்.

திருவிழாக்காலத்தில் தினமும் மாலை 4.45 மணிக்கு நவ நாள்கள் இடம்பெறும். (வ-14)

## சமய சந்நிதி

கொழும்புத்துறை ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும், தீர்த்தத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கும் நடைபெறும். (ந-135)

★ ★ ★

வட்டுக்கோட்டை மேற்கு உலக்கைப் பளிச்சி பத்திரகாளி சமேத வீர பத்திரர் ஆலய சங்காபிஷேகம் (1008)இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இரவு 7 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து திருக்கல்யாணம் வைபவம் இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (ந)


**கண்ணீர்க் காணிக்கை**



திட்டமிடல் செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக (NGOo) கடமையாற்றும் ந.தயாபரன் அவர்களின் அன்புத் தந்தை

**செம்பொற்சோதி நவரத்தினம்**

அவர்கள் 09.02.2014 ஆம் திகதி இறைபதம் அடைந்தமையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(44724)(2.6.3)

**யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்.**



**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

**மு. உதயகுமார்**



பிறப்பு 12.06.1967

இறப்பு 28.02.2010

ஆண்டுகள் நான்கு சென்றதுவே - அப்பா!
உங்கள் இனிய குரல் கேட்டு நாங்கள்
உருகுகின்றோம் உழல்கின்றோம்
ஊன் உருக்கி வாடுகின்றோம்
"அப்பா அப்பா..." என்று எம் மனசு தவிக்குதப்பா!
உங்கள் பாசக்குரல் கேட்க எம் மனசு - துடிக்குதப்பா!
உங்கள் பண்புக்குக் கடவுள் இடம் தந்தாரோ?
எங்களது துயருக்கும் அவரிடமே வேண்டுமோ?
எங்களது அன்பு அப்பாவின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாவற்காடு, வரணி (077 369 5856)

**குடும்பத்தினர்.**



**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 25★09★1953

மறைவு 11★03★2009

அமரர்

**இராசரத்தினம் யசோதரன்**

திதி: பூரணை

குடும்பத்தின் ஒளிவிளக்காய் மிளிர்ந்தீரே!
கூறிவு கொண்டோராய் எமையென்றும் வளர்த்தீரே!
பாரினிலே பண்புயர் தெய்வமாய் திகழ்ந்தீரே!
பல்லாண்டு சென்றிடினும் மறவோமே உம்மை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 64, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.
தொ.பே. 021 221 1100

(44719)(3.6.4)

என்றும் நினைவில் குடும்பத்தினர்.



**மரண அறிவித்தல்**

**அல்பேட் இன்பநாயகம் சின்னையா**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி)



மட்டக்களப்பு, பாண்டிருப்பைப் பிறப்பிடமாக வும், வட்டுக்கோட்டையை வாழ்விடமாகவும் கொண்டு தற்போது கனடா ரொறண்ரோவில் வசித்து வந்தவருமான அல்பேட் இன்பநாயகம் சின்னையா 11.02.2014 செவ்வாய்க்கிழமை கன டாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லீலாவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கோவிந்த பிள்ளை சின்னையா-அருளம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சிவ ஞானம்-தையல்நாயகி தம்பதியரின் ஆசை மருமக னும், ரேவதி, சுதாகரன், இந்துமதி ஆகியோரின் பாசமிகு தகப்பனும், ராஜகுமார், லதாராணி, அரிய குமார் ஆகியோரின் அன்பு மாமனும், யோகனா, டியானா, அருபி, சேரா, சரண் ஆகியோரின் அன்புப் பேரனும், திரவியம் குணரட்ணம், திவ்வியம் செல்வராஜா, காலஞ்சென்றவர்களான ஜோர்ஸ் சின்னையா, றோஸ்பட் இராஜதுரை, வில்மட் சின்னையா ஆகி யோரின் அன்புச் சகோதரனும், புனிதவதி, கனகசபாபதி, ரவீந்திரன், காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.02.2014) சனிக்கிழமை கனடா வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ரேவதி - 001 613 8203114
சுதாகரன் - 001 905 8788083
இந்துமதி - 001 416 7447823

INTHU ASEERWATHAM
68, MILLVIEW CRES
ETOBICOKE ON, M9W 3K5
CANADA.

தகவல்: குடும்பத்தினர்.

(44722)(10.6.3)


இன்னும் ஒரே நாள்தான்!
உதயன்
சூரியகாந்தி
தரும்
பரிசு
மழை
யில் நனையுங்கள்
வெற்றி
நிச்சயம்
வாரம்
50
பரிசில்
10 வாரங்களுக்கு
கொண்டாட்டம்
குதூகலம்
முதல்வார அனுசரணையாளர்கள்:
கிருபா லேணர்ஸ்
Kiruba Learners Driving School
லலிதா ஜுவலரி
அன்னை நாகா பூட் சிற்றி
FOOD City
ராசி கலெக்ஸன்
Rasi Collections
கிறீன் கிராஸ் ஹோட்டல்
செந்தூர் குமரன் களஞ்சியம்
லக்கி பான்ஸி ஹவுஸ்
முருகன் ஸ்ரோர்ஸ்
Green Grass
கண்ணன் களஞ்சியம்
கோகில்ஸ் பேபி நீட்ஸ்
பொதிகை மல்ரி சென்ரர்
அறிவொளி புத்தகசாலை
தாயன்பு புத்தகசாலை
உதயனுடன்
இணைந்திருக்க
மறவாதீர்கள்

## வாழ்த்துகின்றோம்



உளம் மகிழ
உளவியல் நூலைத் தரும்
உள சமூக சீராளன்
எழுத்தாளர் யோசப்பாலா அவர்களின்
பிறந்த நன்நாளில் இன்று
நாவலர் மண்டபம் கூடும்
நல்ல நண்பர்களுடன்
நாமும் அக மகிழ்ந்து
நின்பணி சிறந் தோங்க
உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

14.02.2014 சண் குடும்பம்

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி யோகமலர் ஜெயராமக்குருக்கள்

(வளலாய், இடைக்காடு-தம்பாலை)



காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், தம்பாலை அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி யோகமலர் ஜெயராமக்குருக்கள் நேற்று (13.02.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் தம்பாலை, அச்சுவேலி க. ஜெயராமக் குருக்களின் அன்பு மனைவியும், இரகுநாதசர்மா-கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும், கந்த சாமி ஐயர்-விசாலாட்சி அம்மா தம்பதியரின் மருமகளும், கீர்த்தனா, கீதாஞ்சனா, அரவிந் சர்மா ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தம்பாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

சன்னதி வீதி,
தம்பாலை, அச்சுவேலி.
T.P: 021 205 8326 (44754) (10.14)

தகவல்:
க.ஜெயராமக்குருக்கள்
(கணவர்)

UK | USA| Malaysia | India | Georgia | Latvia
Russia| Ukraine | Bangladesh | China

STUDY MEDICINE
MBBS
RECOGNISED BY
W.H.O & SRILANKAN MEDICAL COUNCIL



2014 INTAKE
APPLICATIONS ARE OPEN FOR NEXT INTAKE

LIMITED SEATS
CALL: 021 7306000
021 4926222
077 3013060

iCS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna.
107, B 1/1 Galle Road, Colombo - 06
077 3013060

## மாணவர் மூவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, பெப்.14

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்காக பயிற்சியில் ஈடுபட்ட மூன்று மாணவர்களுக்கு உடற்பாதிப்புஏற்பட்ட நிலையில்நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் மூவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்து வமனைக்கு மாற்றப்பட்டனர். கச்சாய் தெற்கைச் சேர்ந்த தர்மச்சந்திரன் விசாகன் (வயது-10), சரசாலை தெற்கைச் சேர்ந்த பாஸ்கரன் டிலக்ஸன் (வயது-13), மட்டுவில் தெற்கைச் சேர்ந்த உதயகுமார் தர்சன் (வயது-16) ஆகியோரே பாதிக்கப்பட்டவர் களாவர். (ஓ-9)

### யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சுன்னாகம்

**இல்ல மெய்வல்லுநர் போட்டி**

காலம் : 15 பெப். 2014 சனி
நேரம் : 1.31 பி.ப
இடம் : கல்லூரி விளையாட்டு மைதானம்

**தலைவர்**
R. ஈஸ்வரதாஸன் (அதிபர்)

**பிரதம விருந்தினர்**
N. மகேந்திரன் (OSA கனடா)

**சிறப்பு விருந்தினர்கள்**
S. ஜீவரட்ணம் (OSA கனடா)
K. சுரேஸ்குமார்
(கணக்காளர்-யாழ் போதனா வைத்தியசாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்
OSA, SDS, SDC

(சி/12051) (10.6.3)

### வாகனம் விற்பனைக்கு

NPHC xxxx இலக்கமுடைய ISUZU கன்ரர் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 360 5900
(43164)(3.6.4)

### வாஸ்து நிபுணர்

உங்களுடைய வீடுகள், வியாபார ஸ்தாபனங்கள் போன்ற இடங்களுக்கு ஜேர்மனிய தொழில்நுட்பத்துடன் கூடிய லெகர் அன்டெனா (LECHER ANTENNA) கருவி மூலம் விஞ்ஞான முறைப்படி வாஸ்து பார்க்கப்படும்.
ஆலோசனைக்கு : 077 0858804
Dr. Charles Nicolas. Cosmic Consciousness

### கார் விற்பனைக்கு

19- தொடரிலக்கமுடைய FORD LASER விற்பனைக்கு உண்.
தொடர்பு : 071 9102212

### கார் விற்பனைக்கு


நல்ல நிலையிலுள்ள 15 xxxx தொடரிலக்க Toyoto Careena கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 312 6447
(சி/12053)(3.6.4)

### வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நாள் ஒன்றுக்கு ரூபா 300/= தொடக்கம் 375/= வரை வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 28 வரை, வேலை நேரம் காலை 8.00 மணிதொடக்கம் மாலை 5.00 மணிவரை.
''சனிக்கிழமையிலிருந்து தொடர்பு கொள்ளவும்''

தொடர்பு :
11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3857 (44752) (10.14)

## நான்காம் ஆண்டு நினைவு



அமரர்
**திருச்செல்வம் தவநாதன்**
(கவிஞர் மூளாயூர் தி.தவம்)

தோற்றம் 11.11.1939 — மறைவு 14.02.2010

என்றுமே மறையாது
எம் மனதில் உம் நினைவு

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
(44708)(2.6) யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கிட்டிணன் பூமணி**

மண்ணில் 08.08.1950
விண்ணில் 25.02.2013

எங்கள் குலவிளக்கே! பாசத்தின் உறைவிடமே!
எமைப்பிரிந்து ஆண்டொன்று ஆனதம்மா...!
எங்கள் வாழ்நாள் உள்ளவரை–உங்களை
என்றுமே மறவோம் அம்மா...!
ஓராண்டில் ஓராயிரம் கோடி வணக்கங்கள்!

உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

கொக்குவில். (44727)(3.6.4)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கனகரத்தினம்



ஆவரங்கால், பத்தாம் கட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகரத்தினம் 12.02.2014 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான நாகராஜா -தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, இராமலிங்கம், சுப்பிரமணியம் மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோதிமாலா, கந்தசாமி, காலஞ்சென்ற சிலோசனாதேவி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நடேசமூர்த்தியின் சகலனும், சந்திரமாலாவின் அன்புக் கணவரும், கமலக்கண்ணன், மணிவண்ணன், கலைவாணி, கலைச்செல்வி, மது[illegible]கன், கலைப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபிரியசுதர்சினி, சிவகௌரி, அரண் ஆகியோரின் மாமனாரும், அபிஷ்ணா, றிஷானா,அபிஷன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் றஷ்வின், பிரனிஷா ஆகியோரின் அன்பின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆவரங்கால், பத்தாம் கட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 16.02.2014 ஞாயிற்றுக்கிழமை மதியம் கருதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

10ஆம் கட்டை, ஆவரங்கால்,
புத்தூர். (F/11761)(5.6)

தகவல்: பிள்ளைகள்

## யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு சேவையை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

* இவ் ஒப்பந்தமானது 01.03.2014 தொடக்கம் 31.12.2014 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.
* இதற்குரிய கேள்வி விண்ணப்படிவத்தினையும் நிபந்தனையையும் அலுவலக நேரத்தில் யாழ். வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்தி சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 - பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளமுடியும் (24.02.2014) பகல் 12 மணிக்குப் பின்னர் விண்ணப்பபடிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
* விண்ணப்பப்படிவங்கள் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 500/= ஐ செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மீளளிக்கப்படக்கூடிய தொகையான ரூபா 5000/= செலுத்திய பற்றுச்சீட்டினையும் விண்ணப்படிவத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.
* விண்ணப்படிவங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலைய கேள்வி விண்ணப்பம்" என குறிப்பிடப்படவேண்டும் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் 25.02.2014 பகல் 12 மணிக்கு முன்னர் பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும்
* விண்ணப்பங்கள் யாவும் 25.02.2014 அன்று பகல் 12 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விதாரர் பிரசன்னமாக இருக்கலாம்.

யாழ். கூட்டுறவு நலன்விருத்திச்சங்கம்
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா விசுவநாதர்



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா விசுவநாதர் (13.02.2014) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் செல்லப்பா - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும் நடராசா - முத்துமாரி தம்பதியரின் மருமகனும் இராஜலட்சுமியின் அன்புக்கணவரும் பாஸ்கரன் (கனடா), சிறிகரன், சிவகரன் (ஜேர்மனி), மனோகரன் (பிரான்ஸ்), கருணாகரன் (அவுஸ்திரேலியா), ஸ்ரீரஞ்சனாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உமா, ருக்ஷா, சாந்தினி, உஷாநந்தினி, சர்மிலா, ஸ்ரீசந்திரபோஸ் ஆகியோரின் மாமனாரும் அலிஸ், கனிஷா, நிஷாலினி (யாழ்ப்பாணக்கல்லூரி), நித்தியா, யாழினி, கஜித், கஜீசன், அபிநயா, அக்வுயன், மயூரன், மதுஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை
021 3007321

தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கொலையாளி

குறிப்பிட்டார்.
மன்னாரில் திருக்கேதீஸ்வரம் பகுதியில், மனிதப் புதைகுழி தோண்டப்பட்டுக் கொண்டிருக்கும் வீதிக்கு அருகிலுள்ள, மாந்தை லூர்த்து மாதா கோயில் பெருநாள் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. அங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை விசேட பூசை இடம்பெற்றது.
போரில் இறந்த மற்றும் காணாமற்போன உறவுகளுக்காக வழிபாடுகள் நடத்தப்பட்டன. இந்த வழிபாடுகளில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை பங்கெடுத்திருந்தார். இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:-
இந்த மாதாவின் கண்களுக்கு முன்பாகவே இந்தப் பகுதியில் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளவர்களுக்காகவும், இந்த ஊரிலே உயிர் நீத்த அனைவருக்காகவும் இறைவனிடம் ஒப்புக்கொடுத்து மன்றாடுகின்றோம்.
அது மட்டுமல்ல எங்களுக்கு முன்பாகப் பிடித்துக்கொண்டு போனவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாது. அவ்வாறு பிடித்துக் கொண்டு போனவர்களை எமக்கு தெரியும். 2007 ஆண்டு செப்ரெம்பர் தொடக்கம் 2009 ஆண்டு வரை மட்டும் மன்னார் மாவட்டத்தில் 166 பேர் காணாமற் போயிருக்கிறார்கள்.

**நம்பகமான விசாரணை**
நம்பகத் தன்மை கொண்டதாக ஒரு விசாரணை செய்யப்பட வேண்டும். காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்று சொல்லப்படவேண்டும். இதற்காகச் சலுகைகள், மரணச் சான்றிதழ்களைக் கட்டாயப்படுத்திக் கொடுப்பதல்ல. நாம் எங்களுக்கு நிவாரணத்தைத் தேடவில்லை. காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத்தான் நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். அதற்குஎமக்குஉரிமையிருக்கிறது.

**கடைசி வரை குரல் கொடுங்கள்**
இதனை நாம் மனதில் கொண்டு உண்மையைக் கண்டறியும் வரை காணாமற் போனவர்களுக்காகக் கடைசி வரை குரல் கொடுக்கவேண்டும். அதற்காக நாம் எப்பொழுதுமே வலியுறுத்திக்கொண்டே இருப்போம். அதற்கான உறுதிப் பாட்டை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.
இந்த இடத்திலே நேற்றுடன் (கடந்த செவ்வாய்க்கிழமையுடன்) 60 வரையான எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்று (நேற்று முன் தினம்) எத்தனை என்று தெரியாது. இப்படிபட்ட நிகழ்வுகள் இந்த இடத்திலே நடந்ததைப் போன்று, புதை குழிகள் இன்னும் எத்தனையோ இடங்களிலே இருக்கும்.
பிடித்தவர்களைச் சித்திர வதை செய்து கொன்று புதைத்திருக்கும் அனைத்து புதைகுழிகளும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான நல்லிணக்கம் சமாதானம் இந்த நாட்டில் பிறக்கும்.

**செம்மணிப் புதைகுழிக்கு என்ன நடந்தது ?**
உண்மை வெளிவருவதற்கு நீதியான விசாரணை செய்யப்படவேண்டும். நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது அங்கே செம்மணிப் புதை குழியில் 500க்கும் மேற்பட்டவர்களைக் கொன்று புதைத் திருந்தார்கள். புதைகுழியிலுள்ள மனித உடல்களை தோண்டிப் பாருங்கள் என்று நீதிவான் உத்தரவிட இங்கு மூன்றே மூன்று தான் காணப்பட்டது. ஏனையவை எங்கே போனது?

**நாம் யாரையும் பழி வாங்கவில்லை**
இப்படிப்பட்ட உண்மைகளை நாம் அறிந்தவர்களாக, நம்முடைய சொந்தக்காரர்களுக்காக மட்டுமல்ல எமது மத்தியிலிருந்து காணாமற்போன மக்களுக்காகப் பாடுபட வேண் டும். நாட்டினுடைய சுபீட்சத் துக்காகவும் அதனுடைய வளர்ச்சிக்காகவும் அமைதிக்காகவும் இந்த நாட்டினுடைய நல்லிணக்கத்துக்காகவும் ஒரு நல்ல தீர்வுக்காகவுமே நாம் இதை செய்கிறோமே தவிர, நாம் யாரையும் பழி வாங்கவோ அல்லது குற்றம் சுமத்துவதற்கோ அல்ல.
இந்த நாட்டிலே நிலையான சமாதானம் நல்லிணக்கம் எற்படவேண்டும் என்றால், ஒரே வழி உண்மையைக் கண்டு பிடிப்பதுதான். உண் மையை எங்களுக்குச் சொல்லுங்கள். பொய்க்குப் பின்னால் சென்றுவிட்டு பொய்தான் உண்மை என்று சொல்லுவதில் பிரயோசனமில்லை. இரண்டாம் தரமான பதில்கள் எங்களுக்குத் தேவையில்லை.
நம்பகத்தன்மையான விசாரணை நடத்தி, நாங்கள் திருப்தி கொள்ளும் அளவுக்கு உங்களுடைய பிள்ளைகளுக்கு இது தான் நடந்தது. நான்தான் கொண்டு சென்றேன் என்று சொல்லவேண்டும்.

**குற்றம் செய்தவர்கள் சொல்லவேண்டும்**
அதை சொல்லக் கூடியதாக இருந்ததால் தான் தென்னாபிரிக்காவில் நடந்ததைபோல ஒரு நல்லிணக்கம் ஏற்படும். தென்னாபிரிக்காவில் குற்றங்களைப் புரிந்தவர்கள், மக்களின் உயிர்களைப் பறித்தவர்கள் ஊடகங்களின் முன் தங்கள் பிழைகளைச் சொல்லி அழுது அழுது வெளிப்படுத்தினார்கள். அதை கேட்டுக் கொண்டிருந்த பாதிக்கப்பட வர்களின் உறவினர்கள் அழுது புலம்பினார்கள். இதன் வழியாகத் தான் தென்னாபிரிக்காவில் நல்லிணக்கம் ஏற்பட்டது.
இந்த நாடு உண்மையின் பக்கம் திரும்பி சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் நாம் எல்லோரும் கைகளைக் கோர்த்து நின்று இந்த நாட்டை வளர்த்தெடுக்க முடியும்.
உண்மைக்காகத்தான் நாங்கள் இவ்வாறு செய்கின்றோம். ஆகவே இவ்வாறு ஒரு உயர்ந்த நோக்கத்தோடு இதை செய்வதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (த-5-56)

### தமிழக

செய்யப்பட்ட 29 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையும், இந்த மாத ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட 87 தமிழக மீனவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இலங்கை-இந்திய மீனவர் பேச்சில் உடன்பாடு எட்டப்பட்ட பின்னரே குறித்த 116 தமிழக மீனவர்களும் இலங்கைக் கடற்பரப்புக்குள் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு நெடுந்தீவுக் கடற்பரப்பில் 7 படகுகளில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 29 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர். அவர்களை காங்கேசன்துறையில் வைத்துக் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர் பாரமெடுத்திருந்தனர்.
இவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப் பட்டபோது, அவர்களை எதிர் வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இதேவேளை இந்த மாத ஆரம்பத்தில் மூன்று கட்டங் களாகத் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு 87 மீனவர்கள் கைது செய்யப்பட்டு நேற்று வரை அவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்தது.
நேற்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல் கிடைக்காமையினால் எதிர் வரும் 26 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (த-5-17)

### மீளக்

சாதகமாகப் பரிசீலிப்பதாக அவர் உறுதியளித்துள்ளதாகவும் யாழ். மாவட்ட அரச அதி பர் சுந்தரம்அருமைநாயகம்தெரிவித்தார்.
யாழ். மாவட்டத்துக்கு இரு நாள் பயணமாக வருகை தந்துள்ள இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கிறேச் லொச்சன் மற்றும் நோர்வேயிலிருந்து வருகை தந்துள்ள விசேட ஆலோசகர் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.
சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக நீடித்த இந்தச் சந்திப்புத் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,
நாம் ஒவ்வொரு துறை சார்ந்த அபிவிருத்தி நிலைப்பாடுகள் தொடர்பில் தூதுவருக்குத் தெரியப்படுத்தினோம். அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் தூதுவர் விபரமாகக் கேட் டறிந்தார்.
மீள்குடியமர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதால், அந்த மக்களுக்கான வீட்டுத் தேவைகள் மற்றும் தற்காலிகக் கொட்டகைகள், வாழ்வாதார வசதிகள் என்பன அவசர தேவையாகவுள்ளன. இதனைத் தந்துதவுமாறு தூதுவரிடம் கோரிக்கை விடுத்தேன்.
அதற்கு அவர், எங்களிடம் தற்போது நிதி உள்ளது. அதனை எந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமைப்படுத்திச் செயற்படுத்துவது என்பது தொடர்பில் ஆராய்வதற்கே வருகை தந்துள்ளோம். உங்கள் கோரிக்கைகளைச் சாதகமாக பரிசீலிக்கின்றோம் என்று பதிலளித்தார்-என்றார். (த-5)

### விசேட

சேவைகள் அமைச்சின் செயலாளரும், யாழ். மாவட்ட முன்னாள் அரசஅதிபருமானதிருமதிஇமெல்டா சுகுமார் தெரி வித்தார்.
யாழ். மாவட்டத்தில் சமூக சேவைகள் அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் பயிற்சிப்பட்டறை நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. பிரதேச செயலாளர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
இங்கு உரையாற்றிய சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் மேலும் தெரிவித்ததாவது:-
நாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாகச் சேவை வழங்குகின்றோம். நான் அமைச்சின் செயலாளராகப் பதவியேற்ற காலத்தில் வடக்குகிழக்கிலிருந்து மிகக் குறைவான விண்ணப் பங்களே கிடைக்கப் பெற்றிருந்தன. இது தொடர்பில் எமது ஊழியர்களிடம் கேட்டபோது, அவர்கள் வடக்கு கிழக்கிலிருந்து விண்ணப்பங்கள் வருவதில்லை என்று தெரிவித்தனர். அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கமுடியாது. போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலேயே எமது அமைச்சின் தேவைக் குட்பட்டவர்கள் அதிகளவானோர் உள்ளனர். எனவே அங்கு சென்று அவர்களின் தேவைகளை இனங்காணு மாறு பணித்திருந்தேன்.
தற்போது இவ்வாறான விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதன் மூலம், எமது அமைச்சின் சேவைகள் பலருக்குத் தெரியப்படுத்தப் படும். இதனூடாக இந்தப் பகுதிகளிலிருந்து அதிகளவான விண்ணப்பங்கள் எதிர் காலத்தில் எங்கள் அமைச் சுக்கு கிடைக்கக்கூடும்.
விசேட தேவைக்குரியவர்கள், சகல திணைக்களங்களிலும் தங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகக் கட்டடங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். விசேட தேவைக்குரியவர்களும் செல்லக் கூடிய பாதைகள் அமைக்கப்படவேண்டும். இந்த நடவடிக்கைகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் செய்து முடிக்க வேண்டும்.
அவ்வாறு செய்து முடிக்கப் படாவிட்டால், சட்டரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். இவ்வாறு கட்டடங்கள் மாற்றியமைப்ப தற்கு எமது அமைச்சிலிருந் தும் நிதிகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம் - என்றார். (த-5)

### யாழில்

பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி, மண்ணெண்ணை விலை அதிகரிப்புக்கு எதிராக மீனவர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்ட அன்ரனிபர்னாந்து என்ற கடற்றொழில் வீரரை நினைவுகூரும் முகமாக, தற்போது எமது மக்கள் முகம் கொடுக்கும் முக்கிய ஐந்து பிரச்சினைகளை மையப் படுத்தித் தேசிய எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் நடத்தவுள்ளது. யாழ்ப்பாணம், சிலாபம், காலி, பொத்துவில் ஆகிய பிரதேசங் களில் இந்தப் போராட்டம் ஏனைய சிவில், சமூக, மத அமைப்புக்களுடன் இணைந்து நடத்தப்படவுள்ளது.
இந்திய இழுவைப் படகுகள், சீனப் படகுகளின் ஆக்கிரமிப்பு, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக மக்களின் காணிகள் சுரண்டல் (மக்களின் மீள் குடியமர்வு), எண்ணெய் மானியம் வழங்கப்படாமை மற்றும் எண்ணெய் விலை அதிகரிப்பு, மீன்களுக்குச் சாதாரண விலை கிடைக்காமை மற்றும் மீனவ உபகரணங்களின் விலை அதிகரிப்பு, வெளிநாடுகளில் கைது செய்யப்படுகின்ற மீனவர் பிரச்சினைகள் ஆகிய ஐந்து கோரிக்கைகளையும் முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது- என்றுள்ளது. (த-5)

### விக்னேஸ்வரன்

மாலைவெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் குறித்தும் அவர் கருத்து வெளியிட்டார்.
அவர் மிகவும் சரியான மனிதர் - நல்ல மனிதர். நான் அவரைச் சந்தித்தபோது நிறைய வாக்குறுதிகளுடன் அவரைப் பார்த்தேன் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**இலங்கைக்கு ஜெனிவாவில் உதவுவோம்**
ஜெனிவாவில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் குறித்து, இலங்கை ஏனைய நாடுகளுடன் பேச்சு நடத்த நாம் இலங்கைக்கு உதவத் தயாராக இருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டார் குர்ஷித்.
இலங்கை அரசு பேச்சுக்களை நடத்த இணங்கினால், ஐ.நா மனித உரிமைகள் சபைத் தீர்மானம் மற்றும் அது சார்ந்த நடைமுறைகள் குறித்து ஏனைய நாடுகளுடன் பேச்சு நடத்தும் அரங்குக்குள் இந்தியா வர முடியும். இந்த முறை ஐ.நா மனித உரிமைகள் சபைத் தீர்மானம் தொடர்பாக, பல்வேறு தெரிவுகளை எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருந்தார். அவை குறித்து எம்முடன் பகிர்ந்து கொள்வதாகவும், வாக்குறுதி அளித்துள்ளார்' என்றும் குர்ஷித் தெரிவித்தார். (த-5)

### வடமராட்சி

கிழக்குக் கடற்பரப்பில் அத்து மீறி மீன் பிடித்தமைக்காக இன்பருட்டியைச் சேர்ந்த 5 மீனவர்கள் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுடைய படகும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.
இவர்கள் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில் யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தலைமையி லான மீனவர் குழு, கைதான மீனவர்களையும் படகையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி மனு ஒன்றை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் கைய ளித்துள்ளது. (த-14)

### 62

இதே வேளை ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 4 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டுப் பெட்டிகளில் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதிவானின் உத்தரவுக்க மைய மன்னார் பொது வைத் தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.
மீண்டும் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை மனிதப் புதைகுழி தோண்டும் பணி முன்னெடுக்கப்படும். (த-56)

### காணாமற்

சியாக நான்கு நாள்கள் இடம் பெறவுள்ளன.
இன்றைய முதலாவது நாள் அமர்வு கோப்பாய் பிரதேச செயலகத்தில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது.
இன்றைய தினம் இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் வடக்கு, உரம்பிராய் தெற்கு, உரும்பிராய் கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட பகுதி மக்கள் விசாரணைக் காக அழைக்கப் பட்டுள்ளனர். (த-5)

### திருமலை

இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் இராணுவத்தினர் பெரு மளவில் குவிக்கப்பட்டதுடன் பாதுகாப்பு தரப்பினர் தவிர்ந்த வேறெவரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஊடகவியலாளர்களுக்கும் அனுமதிமறுக்கப்பட்டது.

**மன்னார் புதைகுழி**
தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. திருகேதீஸ்வரம் கோயிலுக்குச் செல்லும் பிரதான வீதியில் இந்த மனி தப் புதைகுழி கண்டுபிடிக்கப் பட்டிருந்தது. குறித்த மனிதப் புதைகுழி இரண்டு மாதங்கள் கடந்தும் இன்னமும் தோண்டப்பட்டு வரும் நிலை யில் 62 மனித மண்டை யோடுகள் இதுவரை மீட்கப் பட்டுள்ளன.
மன்னார் புதைகுழியைத் தொடர்ந்து தற்போது, கிழக்கு மகாணத்தின் திருகோண மலை மாவட்டத்தில் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திருகோணேஸ்வரர் கோயிலுக்கு செல்லும் பிரதான வீதியில், திருகோணமலை நகரசபையின் பின்பாகவுள்ள மைதானத்திலேயே இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.
குறித்த மக்கெய்சர் விளையாட்டரங்கு புனரமைப்புச் செய்யப் பட்டு வருகின்றது. இதற் கான கிணறைத் தோண்டும் முயற்சியில் நேற்று முன்தினம் புதன் கிழமை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இதன்போது 2 அடி வரை தோண்டிய நிலையில் மனித எலும்புக் கூடுகள் அவதானிக் கப்பட்டதாகத் தெரிவிக் கப்படு கின்றது. அங்கு மூன்று எலும்புக் கூடுகள் வரையில் தென் பட்டதாக தெரிவிக்கப்படுகின்ற போதும் அது தொடர்பில் உண்மையான எண்ணிக் கையை உறுதிப்படுத்த முடியவில்லை.

**குவிந்தது இராணுவம்**
எலும்புக் கூடுகள் தென்பட்ட தகவல்கள் பரவியதும், குறித்த பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இராணுவத்தினரின் முற்றுகைக்குள் குறித்த பிரதேசம் கொண்டு வரப்பட்டிருந்தது. நேற்று மாலை நீதிபதி சம்பவ இடத்துக்கு வரும் வரை குறித்த பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப் பாட்டுக்குள்ளேயே இருந்தது.
ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட எவ ரையும் அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு இராணுவத்தி னர் அனுமதிக்கவில்லை. திருகோணமலை புறநகர்ப் பொலிஸார் நேற்றுக் காலை யிலிருந்து குறித்த பகுதியில் நின்றிருந்தனர்.

**நீதிபதி வருகை**
நேற்று மாலை 5.30 மணியளவில் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் டி.சரவண ராஜா சம்பவ இடத்துக்கு வருகை தந்தார். எலும்புக் கூடுகள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குறித்த பகுதியை அவர் பார்வையிட்டார். அவருடன் தொல்பொருள் திணைக்களத்தினர், வைத்திய அதிகாரிகள் ஆகியோரும் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.
குறித்த பிரதேசத்தை எதிர் வரும் திங்கட்கிழமை வரை பாதுகாப்புப் பிரதேசமாக நீதிபதி பிரகடனப்படுத்தியுள் ளதாகத் தெரிவித்த திரு கோணமலை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் லால், அதுவரை குறித்த பகுதிக்குள் யாரும் நுழைவதற்கு அனு மதிக்கப்படமாட்டார்கள் என வும் கூறினார்.

**பற்றைக்காடு**
குறித்த பிரதேசம் மிக நீண்டகாலமாகப் பற்றைக்காடாக இருந்தது. கடந்த சில வருடங்களுக்கு முன்னரே மைதானத்துக்காகக் குறித்த பகுதி துப்புரவு செய்யப்பட்டுள்ளது. திருக்கோணேஸ்வரர் கோயிலின் பிரதான வாயிலினுள் அமைந்துள்ள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே குறித்த பகுதி இருந்து வந்துள்ளது.
மன்னார் புதைகுழி தோண்டத் தோண்ட எலும்புக் கூடு கள் மீட்கப்பட்டுப் பெரும் புதை குழியாக உருவெடுத்துள்ள நிலையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் மற்றுமொரு மனிதப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு மனிதப் புதைகுழிகளும் பாடல் பெற்ற திருத்தலங்களுக்கு அண்மையிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (த-5-40)

# ஜொலி ஸ்ராரை வீழ்த்தியது யாழ்.பல்கலைக்கழக அணி



வலி.வடக்கு,பெப்.14
கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் அமரர்களான விக்ரம், இராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 30 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக்கழகம் 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.
உமாதரன் 33 ஓட்டங்களையும், பிரதீபன் 23 ஓட்டங்களையும், சந்திரகுமார் 15 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 07 ஓட்டங்களும் பெறப்பட்டன.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விஷ்ணு 3.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 04 இலக்குகளையும்
றொமேஸ், தரணிதரன் தலா 06 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 40, 22 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 இலக்குகளையும் அச்சுதன், தாஸ் முறையே 20, 21 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம் 25.4 பந்துப்பரிமாற்றங்களில் 04 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது
அச்சுதன் 48 ஓட்டங்களையும், தரணிதரன் 26 ஓட்டங்களையும், தாஸ் 25 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.
ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மணிவண்ணன், மதுசன், சைலேஸ்வரன், பார்த்திபன் முறையே 14,17,21,44 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்கள். (த-86)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.14
தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
அராலி ஏ.எல்.வி.க. எதிர் மானிப்பாய் றெட் றேஞ்சர் வி.க.
காலிறுதி ஆட்டத்தில்அராலி திருமகள் வி.க. எதிர் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் வி.க. (த-86)

★ ★ ★

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 6 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துச்சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை கலை வாணி சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகின்றன.
இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் 52 விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்ளவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

★ ★ ★

யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் அளவெட்டி பாரதி வி.க. நடத்தும் மின்னொளியிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி வி.க. அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி வி.க. அணி மோதவுள்ளது.
இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறை வி.க. அணியை எதிர்த்து தையிட்டி வள்ளுவர் வி.க. அணி மோதவுள்ளது. (த-23-288)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.14
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளின் பிரிவு II க்கு இடையே நடத்தும் துடுப்பாட்டப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து அநுராதபுரம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

## மாரீசன்கூடல் றோ.க. மாணவர் சதுரங்கத்தில் வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.14
ஆளுநர் கிண்ண சதுரங்கப் போட்டியில் இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த 8 வயது, 10 வயது பிரிவில் பங்குபற்றிய மாணவர்களில் கா.மோரிசுயந்தா, ஜெ.லதுசன் ஆகியோர் சண்டிலிப்பாய் கோட்ட மட்டத்தில் வெற்றிக் கிண்ணத்தையும், அ.மோரிசிந்துஜா, ச.கிருஜிகன், ம.மபிசன் சான்றிதழ்களையும் பெற்றதோடு வலய மட்டத்தில் கா.மோரிசுயந்தா, ம.மபிசன், அ.மோரிசிந்துஜா ஆகியோர் சான்றிதழ்களையும் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (த)



யாழ். மாவட்டச் செயலக நலன்புரி கழகம் அரச ஊழியர்களுக்கு இடையே நடத்தும் 2013 அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான கயிறு இழுத்தல் போட்டி நேற்று வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போது.... (த-23)

## கபடி, வலைப்பந்து, எல்லே போட்டிகள் இந்த வாரத்தில்

யாழ்ப்பாணம்,பெப்.14
யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி, வலைப் பந்தாட்டம், எல்லே போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் இடம் பெறவுள்ளன.
இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி, பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி என்பன இன்று வெள்ளிக்கிழமையும், ஆண்களுக்கான எல்லே போட்டி நாளை சனிக்கிழமையும், பெண்களுக்கான எல்லே போட்டி 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம் பெறும் என விளையாட்டு உத்தியோகத்தர் நித்தில நாயகம் அறிவித்துள்ளார். (த-23)

## கிரிக்கெட் போட்டி



தென்மராட்சி,பெப்.14
தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான இந்த வருடத்துக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மென்பந்துக் கிரிக்கெட் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை 8.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.
சமாசத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து இளைஞர் கழகங்களின் கிரிக்கெட் அணிகளை குறித்த நேரத்தில் வருகை தருமாறு சமாசத்தினர் அறிவித்துள்ளனர். (த-9)

## இரண்டாம் சுற்றில் புத்தூர் கலைமதி

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதை பந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் காக்கை தீவு ஆதவன் விளையாட்டுக் கழகத்துக்கும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் போட்டி முடிவடையும் வரை கோல்கள் எதனையும் பெறாமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலம் கலைமதி விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)


## வவுனியா பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள்

வவுனியாப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான துடுப்பாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும், நாளை மறுதினமும் வவுனியா சிறுவர் பூங்கா மைதானம், வவுனியா தமிழ் மகா வித்தியாலய மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளன.
இதேவேளை ஆண்,பெண் இருபாலாருக்குமான மேசைப் பந் தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகியன வவுனியா நகர சபை உள்ளரங்கிலும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டப் போட்டி வவுனியா நகர சபை மைதா னத்திலும் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. (த-23)

# 35 ஓட்டங்களால் கே.சி.சி.சி. வெற்றி

வலி.வடக்கு,பெப்.14
கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் அமரர்களான விக்ரம், இராஜன்,கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 30 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் 35 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.
ஜெயரூபன் 43 ஓட்டங்களையும், சத்தியன் 37 ஓட்டங்களையும், இராகுலன், பிரதீசின் ஆகியோர் தலா 26 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 11 ஓட்டங்களும் பெறப்பட்டன.
யாழ்ப்பாணம் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கஜகோபன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 46 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் திவாகர் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சுஜன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 46 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் யாதவன்,சுதர்சன் ஆகியோர் தலா 6 பந்துப்பரிமாற் றங்கள் பந்து வீசி முறையே 34,42 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகம் 27 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.
சுஜன் 49 ஓட்டங்களையும், சுதர்சன் 44 ஓட்டங்களையும், சதீசன் 21 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்கள் பெற்றப்பட்டன.
கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுலோஜன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பவி 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சாம்பவன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 35 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜனுதாஸ் 6 பந்துப்பரிமாற்றங் கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (த-86)

# நேற்றைய ஏலத்தில் உள்ளூர் வீரர்கள்



7ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடருக்கான வீரர்கள் ஏலம் இரண்டாவது நாளாக நேற்று நடந்தது.

சர்வதேச அளவில் பங்கேற்காத வீரர்கள் ஏலத்தில் விடப்பட்டனர். இதில் இந்தியாவின் உள்ளூர் வீரர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ரிஷி தவானை ரூ. 3 கோடிக்கு பஞ்சாப் அணி வாங்கியது. 20 லட்சம் அடிப்படை ஏலத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருந்த இவருக்கு ரூ. 2.80 கோடி அதிகமாக ஜக்பொட் அடித்தது.

தொடர்ந்து நடந்த ஏலத்தில் கரண் சர்மாவை ரூ. 3.75 கோடிக்கு அதிகபட்சமாக ஐதராபாத் அணி வாங்கியது.

நேற்று ஏலத்தில் அதிக விலைக்கு ஏலம்போனவீரர்களின்பட்டியல்:-

1. கரண் சர்மாவை 3.75 கோடிக்கு ஐதராபாத் அணி வாங்கியது.
2. ரிஷி தவானை பஞ்சாப் அணி 3 கோடிக்கு வாங்கியது.
3. கேதர் ஜாதவை டெல்லி அணி 2 கோடிக்கு வாங்கியது.
4. பென் ஹென்ரிக்ஸை 1.8 கோடிக்கு பஞ்சாப் அணி வாங்கியது.
5. மனீஷ் பாண்டேவை கொல்கத்தா அணி 1.7 கோடிக் கும், ரஜித் பாட்டயாவை ராஜஸ்தான் அணி 1.7 கோடிக் கும் வாங்கியது.
6. மயாங்க் அகர்வாலை 1.6 கோடிக்கு டெல்லி அணி வாங்கியது.
7. ஆதித்யா தாரேவை மும்பை அணியும், ஈஸ்வர் பாண் டேவை சென்னை அணி 1.5 கோடிக்கு விலைக்கு வாங்கியது.
8. குர்கீரத் சிங்கை பஞ்சாப் அணி 1.3 கோடிக்கும், ஜஸ்பிரீத் பும்ராவை மும்பை அணி 1.2 கோடிக்கும் விலைக்கு வாங்கியுள்ளது. (த)




# பஞ்சாப் அணி ஷேவாக்கை தலைவராக நியமிக்கலாம்

அதிரடி ஆட்டக்காரர் வீரேந்தர் ஷேவாக் தற்போது அனைவரது நம்பிக்கையை இழந்தவராகத் திகழ்கிறார். இதுவரை நடந்த 6 ஐ.பி.எல். போட்டியிலும் அவர் டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்காக விளையாடினார். இந்த முறை அவரை அந்த அணி நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை.


ஷேவாக்கை கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணி ரூ. 3.2 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. அவரை பஞ்சாப் அணிக்கு தலைவராக நியமிக்கலாம் என்று முன்னாள் வீரர் கங்குலி கருத்து தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி அவர் கூறியதாவது:

பஞ்சாப் அணிக்கு ஷேவாக்கை தலைவராக்குவதே சிறந்த தேர்வாக இருக்கும். பெய்லியை விட அவர் தான் சிறந்தவர். மில்லர், மக்ஸ்வெல், ஷோன் மார்ஷ், மிச்செல் ஜோன்சன் போன்ற வீரர்கள் இருப்பதால் பெய்லி 11 பேர் கொண்ட அணியில் இடம் பெறுவது கடினம். மார்ஷ் சிறப்பாக ஆடுவதால் அவரை நீக்குவது கடினம். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (த)

# முன்னணி வீரர்கள் ஏமாற்றம்

7வது ஐ.பி.எல் போட்டிகளுக்கான வீரர்களின் ஏலம் முடிவடைந்துள்ளது, இதில் புகழ்பெற்ற வீரர்கள் பலர் ஏலம் போகவில்லை. இந்திய அணியின் யுவராஜ் சிங், 14 கோடி ரூபாவுக்கு ஏலம் போனார். இலங்கை அணியின் வீரர் மஹேல ஜய வர்த்தன, நியூசிலாந்தின் முன்னாள் அணித் தலைவர் ரோஸ் டெய்லர் ஆகியோர் இதன்போது விலைபோகவில்லை.



சிறந்த துடுப்பாட்ட வீரர்களான இவர்களை யாரும் ஏலத்தில் எடுக்காதமை ஆச்சரியமே.

இதேபோன்று ஆஸ்திரேலிய வீரர்கள் டேவிட் ஹஸி, மத்தியூ வாடே ஆகியோரும் விலை போக வில்லை.

மேலும் அசார் மஹ்மூத் (பாகிஸ்தான்), முரளி கார்த்திக் (இந்தியா), பிரவீன்குமார் (இந்தியா), அஜந்த மெண்டிஸ் (இலங்கை), றொபின் பீற்றர்சன்(தென்னாபிரிக்கா), நாதன் மக்குலம் (நியூசிலாந்து), டில்ஷான்(இலங்கை) ஆகியோரும் ஏலம் எடுக்கப்பட வில்லை. (த)




# இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிப்பதே இலக்கு

ஐ.பி.எல். போட்டிக்கான ஏலத்தில் தமிழக வீரர் தினேஷ் கார்த்திக்கு எதிர்பாராத பரிசு கிடைத்தது. அவரை 12.5 கோடி ரூபாக்கு டெல்லி டேர்டெவில்ஸ் அணி எடுத்தது. கடந்த ஐ.பி.எல். லில் தினேஷ் கார்த்திக் அதிரடியாக விளையாடியதால் அவருக்கு ஏலத்தில் அதிக மவுசு ஏற்பட்டது. இதனால் அவருக்கான ஏலத் தொகை உயர்ந்தது.

இறுதியில் டெல்லி அணி 12.5 கோடி ரூபா கொடுத்து எடுத்தது. அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலை ரூபா 2 கோடியாகும். அதில் இருந்து 6 மடங்கு அதிகமாக அவர் விலை போய் இருக்கிறார். இது குறித்து தினேஷ் கார்த்திக் கூறியதாவது:

ரூபா 12.5 கோடிக்கு என்னை எடுப்பார்கள் என்று நான் நினைக்க வில்லை. காலையில் நான் இராணி கிண்ணப் போட்டியில் கர்நாடகா அணிக்கு எதிராக துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்தேன். பவிலியன் திரும்பியதும் எனது நண்பர்கள் தான் இதை என்னிடம் தெரிவித்தனர்.

ஐ.பி.எல். போட்டியில் எனது பங்களிப்பைச் சிறந்த முறையில் வெளிப்படுத்து வேன். எனக்கு அவ்வளவு விலை கொடுக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது.

ஐ.பி.எல். லில் சிறப்பாக ஆடி இந்திய அணிக்கு மீண்டும் திரும் புவதே எனது இலக்காக இருக் கிறது-என்றார்.

தினேஷ் கார்த்திக் 2008ஆம் ஆண்டு நடந்த தொடக்க ஐ.பி.எல். போட்டியில் டெல்லி அணியில் விளையாடினார். அப்போது அவரை ரூபா 2.1 கோடிக்கு எடுத்தது. பின்னர் கிங்ஸ் லெவன் அவரை அங்கிருந்து வாங்கியது. 2012ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணி ரூபா 5 கோடிக்கு அவரை எடுத்தது. தற்போது மீண்டும் டெல்லி அணிக்கே ரூபா 12.5 கோடிக்கு திரும்பி இருக்கிறார். (த)

# ஜேர்மனி முதலிடம்

ரஷ்யாவின் சோச்சி நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வரு கின்றன.


இந்தத் தொடரின் பதக்கப் பட்டியலில் ஜேர்மன் ஆறு தங்கப் பதக்கங்களையும், ஒரு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களையும் பெற்று பதக்கப்பட்டியலில் முதலாம் இடத்தில் உள்ளது.



நான்கு தங்கப் பதங்கங்கள் உட்பட 10 பதக்கங்கள் பெற்றுள்ள கனடா இரண்டாம் இடத்தில் உள்ளது.

நோர்வே 3ஆம் இடத்திலும், நெதர்லாந்து மற்றும் அமெரிக்கா நான்காம் மற்றும் ஐந் தாம் இடங்களிலும் உள்ளன. (த)

# 14 கோடிக்கு யுவராஜ் ஏலம் போனது ஏன் ?




7ஆவது ஐ.பி.எல் போட்டியில் யுவராஜ் சிங்கை அதிக பட்சமாக ரூபா 14 கோடிக்கு பெங்களூர் அணி ஏலத்தில் எடுத்தது.
இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ் சிங், கடந்த ஐ.பி.எல் போட்டியில் புனே வாரியர்ஸ் அணிக்காக விளையாடினார்(தற்போது அந்த அணி இல்லை).
இந்நிலையில் 7 ஆவது ஐ.பி.எல் போட்டியில் இவரை பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி ரூபா 14 கோடிக்கு ஏலத்தில் எடுத்துள்ளது.
இதன் உரிமையாளர் விஜய் மல்லையா தனது கிங்பிஷர் எயர் லைன்ஸ் ஊழியர்களுக்குக் கடந்த 17 மாதங்களாகச் சம்பளம் வழங்கவில்லை.
ஊழியர்களின் போராட்டங்களைக் கண்டுகொள்ளாத இவர், விமானங்களை இயக்காததால் கடந்த டிசெம்பர் வரை ரூபா 822 கோடி நட்டம் ஏற்பட்டதாக தெரிவித்தார்.
இந்த நிலையில் ஒரு தனிப்பட்ட வீரர் மீது ரூபா 14 கோடியை முதலீடு செய்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
இது குறித்து விஜய் மல்லையா கூறுகையில், யுவராஜ் சிங்கை வாங்க வேண்டும் என்பதில் எங்கள் அணியின் தலைவர் விராட் கோஹ்லி பெரும் ஆர்வமாக இருந்தார்.
ஆனால் துரதிர்ஷ்டவசமாக ரூபா4 கோடி (குழப்பம் ஏற்பட்டதைச் சுட்டிகாட்டி) கூடுதலாகப் போய் விட்டது.
ஆனாலும் ஏலத்தை தொடருவதா? முடிப்பதா என்பது ஏலம் நடத்துபவருக்கே உள்ள உரிமை.
கோஹ்லி, கெய்ல், டி வில்லியர்ஸ் ஏற்கனவே எங்களிடம் உள்ள நிலையில் யுவராஜ் சிங்கை வாங்கியதன் மூலம் எங்கள் அணி மேலும் வலுவடைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (த)

# தொடரைச் சமன் செய்வோம்



நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி முதலாவது டெஸ்ட் போட்டியில் 40ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. இந்நிலையில் இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வெலிங்டனில் இன்று நடைபெறுகின்றது.
இப்போட்டியில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்யும் முனைப்புடன் இந்திய அணி களமிறங்குகிறது. இதுகுறித்து இந்திய அணியின் ஆரம்ப ஆட்டக்காரர் ஷிகர் தவான் அளித்த பேட்டியில், முதலாவது போட்டியில் நாங்கள் நல்ல நிலையில் இருந்தும் துரதிர்ஷ்டவசமாக தோல்வியடைந்தோம். இளம் வீரர்களை உள்ளடக்கிய இந்த இந்திய அணி 6 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடி உள்ளது குறிப்பிடத்தக்கது.
நாங்கள் ஒண்றிணைந்து செயல்பட எங்களுக்கு சில காலம் தேவைப்பட்டது. ஆனால் எங்களது தன்னம்பிக்கை இன்னமும் குறையவில்லை. கடந்த போட்டியின் தோல்வியிலிருந்து நாங்கள் பல பாடங்களை கற்றுக்கொண்டுள்ளோம் எனவே நெருக்கடியின்றி விளையாடி தொடரை சமன் செய்வோம் என்று தெரிவித்தார்.
கடந்த போட்டியில் சதமடித்தது பற்றி பேசுகையில், இங்குள்ள மைதானங்களில் பந்தை எப்படி எதிர் கொள்வது என்பதை நான் தற்போது கற்றுக்கொண்டேன். இச்சதம் எனது தன்னம்பிக்கைக்கான உந்துசக்தியாக உள்ளது. கடின உழைப்பின் மூலம் கிடைத்த இச்சதத்தால் நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன் என்று தெரிவித்தார். (400)

# இங்கிலாந்து பயிற்சியாளராக போல் கொலிங்வூட் நியமனம்



போல் கொலிங் வூட்

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பங்களாதேஷில் நடைபெறவுள்ள ஐ.சி.சி உலக கிண்ண 20/20 போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளராக கொலிங்வூட் சேர்க்கப்பட்டுள்ளார்.
டேஹாம் அணியின் சகலதுறை வீரரான 37 வயது போல்கொலிங்வூட், 68 டெஸ்ட் போட்டிகளிலும் 197 ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலும் 35 சர்வதேச 20/20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.
கரிபியன் தீவுகளில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி உலகக் கிண்ண 20/20 போட்டி யில் இங்கிலாந்து வெற்றிபெற்ற போது அணியின் தலைவராகக் கொலிங்வூட் கடமையாற்றினார்.
போல் கொலிங்வூட் பயிற்றுவிப் பாளராகக் கடமையாற்றிய சகல அணிகளுக்கும் வழங்கிய உற்சாகத்தை இங்கும் எதிர்பார்ப் பதாக இங்கிலாந்து கிரிக்கெட்டின் முகாமைத்துவப் பணிப்பாளர் போல் டவுன்றொன் தெரிவித்துள்ளார். (த)

# பயிற்சியாளராக மொயின் கான்



நிதி மோசடி தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸகா அஷ்ரவ் அதிரடியாக நீக்கப்பட்டதை தொடர்ந்து அணியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
இதன்பிரகாரம் பாகிஸ்தானின் புதிய பயிற்றுவிப்பாளராக மொயின் கான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அத்துடன் தேர்வுக் குழுவின் தலைமை நிர்வாகியான அமிர் சொஹைல் நீக்கப்பட்டு. முன்னாள் கிரிக்கெட் வீரர் அஸார் கான் இடைக்கால நிர்வாக தெரிவுக்குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
8 பேர் அடங்கிய நிர்வாகக் குழுவினால் இந்த தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.
உலக கிண்ண 20/20 போட்டிகளுக்கான புதிய களத்தடுப்பு பயிற்றுனராக சொயப் மொஹமட் தெரிவாகியுள்ளார். (400)

DCM யாழ்.நகர்
கணக்கீடு
AP.பகீரதன்
B.BA (Fm. Spl)
கம்பனி
Sat, Sun - 10 -11
காசுப் பாய்சல் கூற்று
Sat, Sun - 11 -12
ஆரம்பம் - 15.02.2014 சனி

A/L - 2016
பொருளியல்
S.வரதராஜன்
கணக்கீடு
A.P.பகீரதன்
வணிகக்கல்வி
V.முரளி
புதிய பிரிவு
ஆரம்பம் - 15.02.2014 சனி

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

தேவை
மாங்குளம், முருகண்டி, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் நீர், மின்சார வசதியுடன் வாடகைக்கு நிலப்பரப்பு தேவை.
தொடர்பு :077 3818799

MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
General / Marketing / Finance / HR / IT
Duration : 1 year
TRUTH 1965 ALDERSGATE
New Batch Starts on 02/03/2014 at 10.00 am.
Admission Requirements
• A Bachelor Degree - must be from a recognized University or College.
• An Accepted Professional Qualification
• Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.
Accredited and UGC approved
IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk
IIS CITY CAMPUS
மேலதிக விபரங்களுக்கு :
021 4 900 900
077 999 2484

யாழ் நகரில்...
கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி
BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering
Leading to BSc (Hons) From UK
வார இறுதி வகுப்புகளும் ஆரம்பம்.
Why Choose BCAS for QS & Civil Engineering ?
× நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
× பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
× முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
× RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
× £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
× தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
× கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
× 15 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.